# அறிஞன்



ACL-TNAC
O-2NKD6,A
N50
103416

ஆசிரியர் கலைதாசன் ;

# இம்பீரியல் ஸ்டுடியோ

## திருநெல்வேலி ஜங்ஷன்

ஸ்தாபிதம் - 1925

இருபத்தைந்து வருடம் மெச்சத்தக்க சேவை

புகைப்பட கலைக்கு உன்னதமான
ஸ்தாபனம்

எந்நேரமும் உங்கள் கோரிக்கைகளை
நிறைவேற்றுவதே
எங்கள் லட்சியம்

உரிமையாளர் :
**T. V. S. HAMEED**

கிளைகள் :
விருதுநகர்,
தூத்துக்குடி.

# அறிஞன்

ACL-TNAL
02018.

" கலைதாசன் "

விலை அணா 12 ]

[ காப்பிரைட் ]

O-,2NKD6,A
N50

" அறிஞன் " நாடகத்தை மாணவர்கள், சங்கங்கள், பொது நல ஸ்தாபனங்கள், நீங்கலாக — மேடையிலோ, திரையிலோ நடிக்க ஆசிரியர் அனுமதிபெற வேண்டும்.

— கலைப்பதிப்பகம்.

[ Copy Right. ]

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103416
EGMORE, MADRAS-600 008

# மதிப்புரை

திரு. கலைதாசன் அவர்கள் இயற்றிய "அறிஞன்" எனும் இவ்வினிய தமிழ் நாடகம் மிக அழகுபெற அமைந்துள்ளது. திரு. ப. சம்பந்தமுதலியார் அவர்கள் இயற்றிய நாடகங்கட்குப் பின் மேடையில் நடித்துக்காட்டுவதற்கேற்ற நாடகங்கள் ஒருவ ராலும் எழுதப்படவில்லையே என ஏங்கிநின்ற தமிழ் உலகுக்கு கலைதாசன் ஓர் அறிய தொண்டு இந்நாடகத்தின்மூலம் ஆற்றியுள்ளார்.

ஆரம்பமுதல் இறுதிவரை சுவைததும்பும் ஓர் அறிய நூலாக இஃது அமைந்துள்ளது. இதில் மொத்தம் பக்கங்கள் 98 தான் ஆயினும் 6 அங்கங்களும் 34 காட்சிகளும், ஓர் மாற்றுக்காட்சியும் அடங்கியுள்ளன என்றால் கதை நிகழ்ச்சி எவ்வளவு துரிதமாக நடைபெறுகின்றன என்பதை ஊகிக்கலாம். எளிய நடை, இனிய வசனம், ருசிகரமான கதைப்போக்கு, உண்மை வாழ்க்கையின் உணர்ச்சிகளையே உருவாகக்கொண்ட நாடகப்பாத்திரங்கள் ஆகிய அம்சங்கள் இந்நூலில் மிளிர்கின்றன. மகனது மனப்போக்கைத் தெரிந்திருந்தும் ஜமீன்தார்கள் மகாநாட்டில் கலைவாணன் பேசுவதற்கு அனுமதித்த குமாரமங்கலத்தின் தந்தை உள்ளமும், கொலை பாதகச்செயல்களில் பழகாதவர்கள் சந்தர்ப்பச்செயலால் அத்தொழிலைச் செய்யப் புகும்போது அவர்கள் செய்யும் தவறுகளும் வாழ்க்கைச் சித்திரங்களாக விளங்குகின்றன. ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாவை அடிப்படையாகக் கொண்ட இந்நாடகம் தற்காலப் பிரச்சனைகளுக்கு ஏற்றதாகவும் இருக்கின்றது. தமிழ் உலகிற்கு இந்நூல் பெரும் பயன் விளைக்கும் என்பது எனது துணிவு.

வெ. ஸ்ரீநிவாஸன், பி ஏ., எல் டி.,
முதல் உதவி ஆசிரியர்,
ஷாஃப்டர் உயர்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி.

திருநெல்வேலி
16-6-50.

# அணிந்துரை.

**தமிழனின்** சிறப்பான வாழ்வுக்கு ஒரு அணி இந்த "அறிஞன்" நாடகம். சமூகத்தின் கொடுமையான விஷப்பல்லை சாதுர்யமாகப் பிடுங்கி, தன் இனத்தை தன் வழிக்கு வரச்செய்த ஓர் சீர்திருத்த வாதியின் துணிகரப் போக்கு, தமிழாகிய நமக்கு ஒரு விழிப்பை உண்டாக்குகிறது எத்தனையோ ஆண்டு கட்குபின் தமிழ் நாட்டுக்குக் கிடைத்த ஒருகோகினூர் வைரமே, அறிஞன், என்ற இந்த நாடகம். நாடகப் பாத்திரங்கள் ஒவ்வொருவரும் நம்மோடு பேசி நம்மை எங்கேயோ இழுத்துச செல்கிறார்கள் என்ற உணர்ச்சி இதற்கு முன் நான் வாசித்த எந்த நாடகப் புத்தகத்திலும் அடைந்ததில்லை. ஆனால் அறிஞன் நாடகத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் நம் உள்ளத்தில் இடம் பெற்று — வாசகத்தின் முடிவில் நமக்குள் எதையோ சிந்திக்கச்செய்து துணிகரமான ஒரு முடிவுக்கு வரும்படி நம்மை தூண்டுகிறார்கள் என்பதை என்னால் சொல்லமுடியாமல் இருக்கமுடியவில்லை கலைதாசனது இந்த அறிஞன் புஸ்தகம், தமிழினத்தின் குலவிளக்கு என்பதை மட்டும் இங்கே கூறி முடிக்கிறேன்.

கே. எஸ். சுப்பிரமணியன்,
கலைஞர், நெல்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUL 1950
MADRAS

நெல்லைக்
கலைமன்றம் சார்பில்
“ கலைப்பதிப்பகம் ”
வெளியிடும்
★
முதல் புத்தகம்

வணக்கம்

கலைப்பதிப்பகத்தின் என் முதல் வெளியீடான 'காதலனும் காதலியும்'' உங்கள் உள்ளத்தில் நிரந்தரம் இடம் பெற்றுவிட்டதை எண்ணி உள்ளம் பூரிக்கிறேன். என் இரண்டாவது வெளியீடான "அறிஞன்" நாடகமும் உங்கள் உள்ளத்தில் அவ்வாறு இடம் பெறுமென நம்புகிறேன்.

"கலைதாசன்"

திருச்சி.

# சமர்ப்பணம்!

உலகம் வாழ உழுது!

நெஞ்சுலர உழைத்து!!

எலும்பொடிய பாடுபட்டு!!

இரத்தம் சிந்த கல்லுடைத்து!!!

வாழ்க்கையில் சுகம் கண்டறியாத உலக
பாட்டாளி மக்களுக்கு இந்நூலை
சமர்ப்பணம் செய்கிறேன்.



" கலைதாசன் "

It shows how dangerous

It is to be too good

*George Bernadshaw.*

நல்லவனாக இருப்பது மிகவும் ஆபத்து.

ஜார்ஜ் பெர்னார்ட்ஷா.



" கலைதாசன் "



**எஸ். சுப்பிரமணிய பிள்ளை**

**அன்பு** கனிந்த முகம், நகை கலந்த சொற்கள், இத்தனையும் கொண்டு நெல்லைக் கலைமன்றம் வளர்வதற்கான துறையிலும், அறிஞன் புத்தகம் வெளிவருவதற்கான முயற்சியிலும் என்னோடு சமமாக உழைத்து எனக்கு அளவு கடந்த உற்சாகத்தைத் தந்து தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கலைதாசன்'



## அனந்தராம்

எதிர்கால கலையுலகில் சிறப்புற வேண்டுமென்ற உள்ளமும் ஆசையும் படைத்த M. அனந்தராம் நாடக உலகிலும் சிறப்புற வேண்டு மென்ற ஆர்வத்தில் கலைத்தொண்டுபுரிந்து என்னோடு சமமாக உழைத்து வருகிறார்; என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கலைதாசன்'

வாசகர்களுக்கு,

**'அறிஞன்'** நாடகத்தை வாசியுங்கள். திரைப் படத்தில் ஒரு கதையைப் பார்ப்பதுபோன்ற உணர்ச்சி இதில் இருக்கிறதா, என்று சற்று சிந்தியுங்கள். ஒரு முடிவுக்கு வந்தபின், நாடகத்தை ஒரு தடவை யல்ல இரண்டு தடவை வாசியுங்கள். சீர்திருத்தம், பகுத்தறிவு, மனிதத்தன்மை, இத்தனையும் நாடகத்தில் வீசுகிறதா, என்பதையும் காணுங்கள்—நீங்கள் வாசித்து முடிந்ததும் உங்கள் நண்பர்களிடமும் அறிஞன் நாடகப் புத்தகத்தை கொடுத்து வாசிக்கச்சொல்லுங்கள். அவர்கள் கருத்தையும் இன்னதென அறியுங்கள். முடிவாக உங்கள் "கலைதாசன்" கருத்துக்கும், உங்கள் கருத்துக்கும் ஒற்றுமை இருந்தால் மக்கள் சந்தையில் ஒரு மாணிக்கம் 'அறிஞன் நாடகம்' என்பதாக நீங்களே தீர்ப்புக்கூறி, கலைப்பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுங்கள். உங்களையும், உங்கள் பெயரை யும் கலைப்பதிப்பகம் மறக்காது இதுதான் ஒரு நூலைப் பற்றிய ஜனநாயகத் தீர்ப்பு—என்பது மேல்நாட்டாரின் கருத்து இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அறிஞன் நாடகத்தில் இருபாத்திரங்களை மட்டும் சீர்திருத்த சிற்பிகளாக மாற்றி தமிழர்களின் முன்னேற்றப் பாதைக்கு வெளிச்சம் தரும்படி செய்திருக்கிறேன். அறிஞன் நாட கத்தின் மேற்கூறிய இரு சிற்பிகளும், நடந்தன, நடப்பன, நடக்கப்போவன ஆகிய மூன்று காலங்களையும் நன்றாகப் படம் பிடித்துக்காட்டுகின்றனர். ஒரு பெண், ஒரு ஆண், எப்படி வாழ வேண்டும் என்ற ஒரு உயரிய கருத்தை எடுத்துக்காட்டும் ஒரு சிந்தனைக் களஞ்சியமே அறிஞன் நாடகம்.

வணக்கம்

"கலைதாசன்"
குரிச்சி.

---

குறிப்பு :- "அறிஞன்" நாடகம் வெகுசீக்கிரத்தில் திரைப் படத்திற்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

## நாடகத்தில் வருபவர்கள்

குமாரமங்கலம் ............ பூங்குளம் பண்ணையார்

கல்யாணி ...................... குமாரமங்கலம் மனைவி

சோமநாதன் .................... குமார: மூத்தமகன்

கலைவாணன் .................... குமார: இளையமகன்

ஆனந்தம் பிள்ளை ............... பண்ணைக்கணக்கர்

மணவாளன் ......................... ஆனந்தம்: மகன்
(கலைவாணன் நண்பன்)

பார்வதி ................................ ஆனந்தம் மகள்
(கலைவாணன் காதலி)

மற்றும், ஜெயராமன், அவன் நண்பன், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் — போலிஸார் — நீதிபதி — வக்கீல்கள் — மண்டலித்தலைவர் — நடனப் பெண்கள் — மகாநாடுத்தலைவர் — உபாத்தியாயர் — முத்துரங்கம் — இன்னும் நால்வர் — ஜூரிகள் — கோர்ட்சேவகர்கள் — பிச்சைக்காரன் — வழிப்போக்கர்கள் — மகாஜனங்கள் — முதலியோரும் உண்டு.

கருவிகள்:— ஒலிபெருக்கி — வாத்தியங்கள் — ஆஷ்பத்திரி ஆயுதங்கள்.

வாகனங்கள்:— வண்டி — கார் — ஜீப் — சைக்கிள்.

சாதனங்கள்:— பாஷாணக்கத்தி — இரண்டு குண்டூசிகள் — இரண்டு அரிவாள்.

# அறிஞன்.

## காட்சி 1.

[ பூங்குளம் பண்ணையார் குமாரமங்கலம் தன் வீட்டின் வெளிவராந்தாவில் தன்நண்பர் சில ரோடு பேசிக்கொண்டிருக்கிறார். அவர்கள் முன் ஒரு வட்டமேஜையில் ஒரு ஆங்கில தினசரி பத்திரிகையும், சிலகாப்பி தம்ளர்களும் இருக்கின்றன. பண்ணையார் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டு ]

குமாரமங்கலம் :- ஏனையா முத்துரங்கம் நம் நாட்டில் ஜமீன் ஒழிப்பு வருவதால் சர்க்காருக்கு என்ன நன்மை இருக்கிறது?

முத்துரங்கம்:- நன்மையாவது நன்மை. எல்லாம் நமது காங்கிரஸ்காரர்கள் செய்யும் அக்ரமம்.

மூன்றாம் நண்பர்:- வேறென்ன கண்கட்டிக்காரன் செய்யும் வித்தையைப்போல மண்ணைக்காட்டி கடலையாக்கும் கதைதான் இவையெல்லாம்.

குமார:- நல்லச்சொன்னீர்கள! நாட்டையும் மக்களையும் ஏமாற்ற வந்த ஜமீன்ஒழிப்பு, பசுத்தோல் போர்த்திய ஒரு புலியின் கதை என்றுச் சொல்லுங்கள்.

நாலாவது நண்பர் :- சொல்வதென்ன ஜமீன் ஒழிப்பைக் கேட்டுத்தான் நாடு சந்தியாய் சிரிக்கிறதே சார்!

முத்து:- அதோடு மட்டுமா அவர்களை ஒழித்து அவர்களுக்கு நஷ்டயீடுமல்லவா கொடுக்கப்போகிறார்களாம்.

ஐந்தாம் நண்பர்:- அப்படியும் ஒரு திட்டம் போட்டால்தானே அவர்கள் உணர்ச்சியையும் அடக்க முடியும்

மூன்றாம் நண்பர்:- சரிதான், திருக்கிவிட்டு வேடிக்கைப் பார்க்கும் ஆசாமிகள்தான் காங்கிரஸ்காரர்கள் போலிருக்கிறது.

முத்துரங்கம்:- அரசியல் என்ற அகராதி சூழ்ச்சி என்ற பெய ரில்தானே பிறந்திருக்கிறது.

குமார:- உண்மையை அப்படியே விளக்கிவிட்டீர்களே!

(இவற்றைக் கேட்டுக்கொண்டு நிற்கும் வேலைக்காரன்)

வேலைக்காரன்:- ஏன் எஜமான் ஏகமாய் ஒருவருக்கு இருக்கும் சொத்தை ஏழைகளுக்குப் பிரிச்சுக்கொடுத்தா, அது சம நாட்டுக்குத்தானே நல்லது.

குமார:- சீ முட்டாள்! உன்னை யாருடா கேட்டது?

வேலை:- ஒருத்தரும் கேக்கலேங்க!

குமார:- சரிசரி போய் வேலையைப் பார்!

[வேலைக்காரன் மேஜை மீதிருந்த காப்பி தம்ளர்களை எடுத்துப் போகிறான். இந்த சமயம் குமாரமங்கலம் பண்ணைக் கணக்கர் ஆனந்தம் பிள்ளையும், உழவனும், இன்னும் சிலரும் குமாரமங்கலம் முன்பு பரபரப்போடு வருகின்றனர். உழவன் உடை பூராவும் இரத்தக்கரை படிந்திருக்கிறது. அதைக் கண்ட பண்ணையார் திடுக்கிட்டு.]

குமார:- கணக்கரே என்ன இது?

கணக்கன்:- (நடுக்கத்துடன்) பண்ணையில்...............,

குமார:- ஏதாவது கலகம் நடந்துவிட்டதா?

தலையாரி:- ஆம். வேம்படி பண்ணையாளான பூலுத்தேவன் நமது நாற்றங்காலுக்கு தண்ணீர்ப்பாய்ச்சவிடாது வரப்பை அடைத்தானும்! ஏனென்று கேட்டதற்காக பூலுத் தேவன் உழவனின் கன்னத்தில் அறைந்து விட்டான். அதனால் இவன் பற்களிரண்டும் நொறுங்கி விட்டன எஜமான்.

குமார:- (கோபத்தோடு) அவ்வளவு இறுமாப்பா அவனுக்கு! பார்க்கலாம் அவன் கொட்டத்தை. எங்க சிங்கத்தை எதிர்க்கக் கூடாதோ அந்த சிங்கத்தை எதிர்த்திருக்கிறான்

அந்த பூனுப்பயல். கணக்கரே இதோ பண்ணையின் கொக்கி அரிவாள். எந்த அற்பபயல் நமதுஉழவனின் இரு பற்களை நொறுக்கினுனே அந்த அற்பனை இரண்டு துண்டமாக்கி வாருங்கள்.

[கணக்கன் அறிவாளை தன் கையில் வாங்கிக்கொண்டு கோபத்தோடு போகிருன். எல்லோரும் அவனேடு போகிருர்கள்.]

## காட்சி 2.

[இடம்: கணக்கப்பிள்ளை வீடு. அவர் மகள் பார்வதி தன் வீட்டு மாட்டுத் தொட்டியல் பூராவும் கழுவி பசுவிற்குக் கன்றுவிட்டு அழியில் வைக்கோல் வைத்துவிட்டு கிணற்றில் தண்ணீர் இறைத்து செடிகளுக்குப் பாய்ச்சியபின் மகிழ்ச்சியோடு தன் தமையன் மணவாளனுக்குக் காப்பிபோட போகிருள்.]

## காட்சி 3

[இடம்: ரோடு, ஒரு மாட்டு வண்டியில் குமார மங்கலம் இளையமகன் கலைவாணனும், அவன் நண்பன் மணவாளனும் கல்லூரியிலிருந்து வருகின்றனர். அன்பு பெருக்கால் இருவரும் ஒருவருக்கொருவர் முகம்பார்த்து சிரித்துக்கொண்டு வரும் போது தூரத்தில் பாடிக்கொண்டு வரும் ஒரு பிச்சைக்காரனைக்கண்டு கலைவாணன் முகம் திடீரென்று மாறுதலடைகிறது. அதைக் கண்டு மணவாளன் வெளிக்காட்சிமீது தன் பார்வையை செலுத்தி.]

மணவாளன்:- காலம் ரொம்பவும் நயவஞ்சகமானது. மக்களின் சமநிலையை எவ்வளவு ஆழமாக வேறுபடுத்திக் காட்டுகிறது.

கலைவாணன்:- (திரும்பி மணவாளனைப் பார்த்து) அது காலம் செய்யும் துரோகமா?

மண:- ஆம். அதோ அந்த அனாதையைப்பார்!

கலை:- தப்பிதமாகச் சொல்லுகிறாய். அவன் பிறவியில்மனிதன். இயற்கையின் மகோன்னத சிருஷ்டி அவனுருவம். ஆண்டவனாலுங்கூட இடைபோட்டுக் கூறமுடியாத மகா சக்தி அவனிடம் உண்டு. ஆனால் அதை அறியமுடியாமல் அவன் அகழியில் விழுந்துவிட்டான்.

மண:- பண்பட்ட உள்ளமும், பகுத்தறிவும் இல்லாததே அதற்குக் காரணம்.

கலை:- யார் சொன்னது! நண்பனே கொஞ்சம் சிந்தித்துப் பார். மனிதனிடம் இல்லாதது எது? விண்ணையும் மண்ணையும் அளந்துபார்க்கும் ஞானப்படியைக்கூட மனிதன் கண்டு களிக்கிறானல்லவா?

மண:- ஆம். அது விஞ்ஞானத்தின் வளர்ச்சி.

கலை:- அதுவும் மனிதன் நுண்ணறிவிலிருந்து ஜனிப்பது தானே?

மண:- ஆம்.

கலை:- அந்த ஞானிக்கும் இவனுக்கும் என்ன வேற்றுமை? பிறவியில், வளர்ச்சியில், உணர்ச்சியில் ஏதாவது வேற்றுமை உண்டா?

மண:- இல்லை

கலை:- நன்றாக சிந்தித்த பதில்தானே இது?

மண:- ஆம்.

கலை;- அப்படியானால் அவன் எதில் வேறுபட்டு இங்கிலையானான்.

மண:- அறிந்தமட்டில் அவன் பிறவியில் தரித்திரனாக இருக்கலாம்.

கலை:- சிந்தனையைக் குழப்பிவிட்டாய். பிறவியின் தரித்திரத்தை வளர்ச்சியில் மாற்றமுடியாதா?

மண:- முடியாதென்றுச் சொல்லவில்லை. ஆனால் விதியென்ற ஒன்று அவனை சூழ்ச்சி செய்திருக்கும்.

கலை:- முயற்சியை இழந்தமைக்கு விதியென்பதா பெயர்! மணவாளா கேள். சமூகத்தின் அறிவீனர்களின் திருப்திக்காக ஆன்றோர்கள் கூறிவந்த சந்தர்ப்பதாரகமே விதியென்பது. கேவலம், வலுவற்ற முயற்சியினால் அவன் சிந்தனையிலும், உணர்ச்சியிலும் தவறு கண்டுவிட்டான். நீயோ நானோ அவனைப்பற்றிக் கவலைப்பட அவன் குருடுநொண்டியல்ல! குண்டோதரன். அது தெரியாது காலத்தை நய வஞ்சகம் என்றுகூறாதே!

[இதற்குள் வண்டியும் மணவாளன் வீட்டு வாசல்முன் வந்துநிற்கிறது, வண்டியின் சப்தத்தைக்கேட்டு அவன் தங்கை பார்வதி வாசலில்வந்து புன்னகையோடு இருவரையும் பார்த்து நிற்கிறாள். மணவாளன் கீழிறங்கி கலைவாணனை வணங்கி அனுப்ப போகும் சமயம் பார்வதி.]

பார்வதி:- வீட்டுக்கு கலைவாணனைக் கூப்பிடுங்களண்ணா.

மண:- என்? காப்பி ஏதும் தயார்படுத்தி இருக்கிறாயா?

பார்:- ஆம்.

கலை.- இங்கே கொண்டுவா பார்வதி.

பார்;- உள்ளே வாருங்கள்.

கலை:- அண்ணன் பணிவிடையில் அக்கரைகொண்ட அணங்கு நீ. அவன்நண்பனுக்கும் பணிவிடை செய்ய ஆசைத்தானேபடுவாய்.

[கலைவாணன் வண்டியை விட்டிறங்கி மணவாளன் வீட்டிற்குள் போகிறான். தெருவின் கோடியில் ரொம்ப வேகமாக வந்த ஒரு ஜீப்மோட்டார் மணவாளன் வீட்டுமுன்வந்து நிற்கிறது. அதிலிருந்து சர்க்கிள், ஒரு சப் இன்ஸ்பெக்டர், சில போலீஸார் இறங்கி பரபரப்புடன் மணவாளன் வீட்டிற்குள் நுழைகின்றனர். இவர்களைக்கண்டு மூவரும் திடுக்கிட்டு எழுந்து நிற்கின்றனர்.]

சர்க்கிள்:- கணக்கன் ஆனந்தம்பிள்ளை எங்கே?

மண:- ஏன்?

சர்க்கிள்:- வேம்படி பண்ணையாள் பூலுத்தேவனை கொலைசெய்திருக்கிறன். சம்பவம் உங்களுக்குத் தெரியாதா?

கலை:- தெரியாதே!

[இதைக்கேட்டு மணவாளனும், பார்வதியும் திடுக்கிட்டு மனங்கலங்கி நிற்கின்றனர்]

கலை:- கொலை செய்தது ஆனந்தம்பிள்ளையா?

சர்க்கிள்:- ஆம் ஆனந்தம்பிள்ளைதான். (சப்இன்ஸ்பெக்டரிடம்) எங்கேயாவது ஒழிந்திருக்கிறனு பாருங்கள்.

(பார்க்கின்றனர். காணவில்லை)

சப் இன்ஸ்பெக்டர்:- இங்கே இல்லை

சர்க்கிள்:- சரி.

[போலீஸ் அதிகாரிகள் வெளியே போய் ஜீப் காரில் ஏறுகிறர்கள். மணவாளனும் பரிதாபத்தோடு அவர்களைப் பார்த்துவிட்டு தாங்களும் வண்டியில் குமாரமங்கலம் வீட்டுக்கு விரைகின்றனர். பார்வதி தன் கண்களில் நீர்மல்க இருவரையும் பரிதாபத்தோடு பார்த்து நிற்கிறள்.]

## காட்சி 4

[இடம்: பண்ணையார் குமாரமங்கலம் வீடு. போலீஸ் அதிகாரிகள் பரபரப்போடு நிற்கின்றனர். அவர்கள்முன் வெட்டுப்பட்ட பூலுத்தேவன் தலையும் கொக்கி அரிவாளும் கிடக்கிறது. அவர்களைச்சுற்றி கூட்டம் திரண்டுநிற்க—பண்ணையார் குமாரமங்கலம் கணக்கன் ஆனந்தம்பிள்ளையை சுட்டிக்காட்டி.]

குமார:- கொலைப்பாதகன்! செய்ததை இல்லை என்று மறுக்கிறான். ஆனந்தம் கொலை செய்தது நான்தானென்று அதிகாரிகளிடம் ஒத்துக்கொள்கிறாயா இல்லையா?

ஆனந்தம்பிள்ளை:- கொலையைச் செய்யச் சொன்னது தாங்களல்லவா?

குமார:- என்னடா அது! கொலையும் செய்துவிட்டு, பண்ணையாரையும் இழுத்துப்போடப் பார்க்கிறாயே.

சர்க்கிள்:- அடே! உண்மையைச் சொல் கொலை செய்தது நீயா அல்லது............?

ஆனந்தம்:- எஜமான் ஆணையை சிரமேற்கொண்டதற்கா எனக்கு இந்தப்பழி!

குமார:- தன்னைத் தப்புவிக்க நல்ல மார்க்கமடா இது.

ஆனந்தம்:- (கோபத்தோடு) பண்ணையார் தெய்வத்தின்மீது ஆணையிட்டு வேண்டுகிறேன். பூலுத்தேவரை இரண்டு துண்டமாக்கி வரும்படி தாங்கள் சொல்லவில்லையா?

[கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு மணவாளனும், கலைவாணனும் வந்து பூலுத் தேவனின் முண்டத்தைப் பார்க்கின்றனர்]

மண:- (உடல் பதற) அப்பா! தாங்களா இக்கொலையைச் செய்தீர்கள்?!

[ஆனந்தம்பிள்ளை கண்ணீர் பிதுங்க மௌனமாக நிற்கிறார்]

குமார:- ஆமடா ஆமா. சாதுர்யமாய் கொலையும் செய்துவிட்டு அதில் என்னையும் இழுத்துப் போடுகிறான் உன் தந்தை.

ஒருவன்:- உண்மைதானுங்களே. உழவனை பூலுத்தேவன் அடித்ததற்காக, பழிக்குப்பழி வாங்கும்படி. அரிவாளைக் கொடுத்தது தாங்கள்தானே பிரபு!

சப்:- (அவனை ஒரு அடி அடித்து) சீ கழுதை! யாருடா உன்னைக் கேட்டது! மிஸ்டர் எட்டுப்பிள்ளை இவனையும் கைது செய்யுங்கள்.

[இதைக் கேட்டு அந்த அப்பாவி ஓடிவிடுகிறான். இதைக் கண்டு கலைவாணன் உள்ளம் குமுறுகிறது. ஒருவேளை இக்கொலை தன் தந்தை சொல்லித்தான் நடந்திருக்குமோ என்றும் யூகிக்கிறான். பக்கத்தில் நிற்கும் பல்லுடைந்த உழவனிடம்]

கலை:- உழவனே பூலுத்தேவன் உன்னை அடித்தது உண்மைதானா?

உழவன்:- ஆம்.

கலை:- அடித்தபின் என்ன நடந்தது?

உழ:- கணக்கர் ஆனந்தம்பிள்ளையோடு தங்கள் தந்தையிடம் வந்து சொன்னேன்.

கலை:- பிறகு.........?

(உழவன் விழிக்கிறான்)

கலை:- பயப்படாதே சொல்.

உழ:- உங்கள் தந்தைக்கு ஆத்திரம் வந்து......(தயங்குகிறான்)

கலை:- தயங்காதே.

உழ:- சுவரில்கிடந்த அரிவாளைக் கணக்கர் கையில் கொடுத்து...,

கலை:- கொடுத்து என்ன சொன்னார்

உழ:- பூலுவை இரண்டு துண்டமாக்கி வாருங்கள் என்றார்.

கலை:- அதற்கு பின்தானே இந்தக் கொலை நடந்தது?

உழ:- ஆம்.

கலை:- சர்க்கிள் அவர்களே நடந்ததைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

சர்க்கிள்:- இந்த அப்பாவி சொல்வதைக் கேட்டு எப்படிசார் ஒரு பிரமுகரை இந்த வழக்கில் மாட்டுவது?

குமார:- அதைவிட்டுத் தள்ளுங்கள். முதலில்......,
(ஆனந்தம்பிள்ளையை கைது செய்து கூட்டிச் செல்லும்படி கண்சைகை செய்கிறார்.)

சர்க்கிள் :- (போலீஸாரிடம்) இவனைக் கைது செய்யுங்கள்.

கலை :- அப்பா இதுதான் பணம் படைத்ததின் குணமா?

குமார :- கலைவாணா இந்த சமயத்தில் நீ எதையும் என்னிடம் பேசாதே.

கலை :- நியாயத்தை பேசுவதற்கு சமயம் வேறுவேண்டுமா?

குமார :- நியாயத்தை நீ என்னடா கண்டுவிட்டாய்.

கலை :- பாவம் ஒருபெண்ணையும், ஆணையும் நிலைகுலைய விடாதீர்களப்பா!

குமார :- கொலைக்காரப்பாவியின் குழந்தைகள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன!

கலை :- மனித இருதயம் படைக்காதவன் சொல்வதையா தாங்களும் சொல்கிறீர்கள்.

சர்க்கிள் :- (குறுக்கிட்டு) கலைவாணா நீங்கள் வம்புக்காரராகப் படுகிறது எச்சரிக்கை.

கலை :- சட்டத்திற்கு தலைவணங்கி நடக்கவேண்டிய தாங்களா இப்படி பேசுவது?

குமார :- (குறுக்கிட்டு) அவர்களையுமா எதிர்த்துப் பேசுகிறாய்.

[குமாரமங்கலம் கலைவாணன் கன்னத்தில் பளிரென்று அரைந்து விடுகிறார். கலைவாணன் கண்களில் நீர்மல்க அதிகாரிகளை வெறித்துப் பார்த்த வண்ணம் நிற்கிறான். குமாரமங்கலம் அதிகாரிகளிடம்.]

குமார :- அவனை அழைத்துச் செல்லுங்கள். (ஆனந்தம் பிள்ளையை கைதியாக்கி கூட்டிப்போகிறார்கள். அதைக்கண்டு)

மணி :- (மனம் துடிக்க) அப்பா! இதுவரை ஒரு பணக்காரனை நம்பி வாழ்ந்ததின் பரிசா இது! (கலைவாணனைப்பிடித்து) கலைவாணா! எண்ணற்ற ஏழை உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சு வாழும் உன் தந்தையின் பணத்திமிரை யொவது ஒடுக்கு. (கூட்டத்தினரை நோக்கி) மக்களே

என் தந்தை உங்கள் மனமறிய கொலைக்காரரா? உழவரே என் தந்தை நீரறிய கொலைசெய்தது உண்மைதானு? தளபதி ஆணையை போர்வீரன் நிறைவேற்றியது குற்றமா? கலைவாணு என் நிலைமைக்கு என்னபதில் சொல்லுகிருய்?

[கலைவாணன் மணவாளனைப் பார்த்து கண்ணீர் விடுகிருன். அதைக்கண்டு]

மண :- (உள்ளம் வெடிக்க) இந்தக் கண்ணீர்தான் அதற்குப் பதிலா?

[கலைவாணன்கண்களில் வழிபடும் நீர்த்துளிகள் அவன் உதட்டை நனைத்து ஓட, வாய் எதையோ சொல்லி மூடுகிறது. மணவாளன் கண்ணீர்விட்டுக் கொண்டு அகல்கிருன் ]

## காட்சி 5

[இடம் : மரம், செடி, கொடிகளடர்ந்த தோட்டம். பூத்துக் குலுங்கிக்கிடந்த செடிகொடிகள் காற்றின் தாக்குதலால் பூ இலைகளை உதிர்க்கிறது. பட்சிகள் நாலுதிசையும் சப்தமிட்டுப்பறக்கிறது. பண்ணையார் குமாரமங்கலம் வாடை பொறுக்காது ஜன்னல் கதவுகளை அடைத்துவிட்டு படுக்கையில் படுக்கிருர். சற்றுக்கழித்து அயர்ந்துதூங்கியவர், கனவில் பூலுத்தேவனின் வெட்டுப்பட்ட தலையைக கண்டு அலறி எதையோ முணங்குகிருர். இதைக் கேட்டு அவர் மூத்த மகன் சோமநாதன் தன் படுக்கையைவிட்டெழுந்து தந்தையை எழுப்பி]

சோம:- என்னப்பா அது? ஏதோ துண்டம் துண்டம் என்று முணங்குனீர்களே!

குமார:- ஏதோ ஒரு கனவு............!

சோம:- அப்படியாவது இருக்கட்டும். வேறென்னவோ.......,

குமார:- என்று பயந்துவிட்டாயா? பைத்தியக்காரன் போய் படு.

[சோமநாதன் போய் படுக்கிறான். தந்தை மகனைக் கூப்பிட்டு]

குமார:- ஹ.....சோமு ... கலைவாணன் ஏதாவது உன்னிடம் சொன்னானா?

சோம:- சொன்னான். ஏதோ பூனுவைக்கொல்லத் நாங்கள் தான் அரிவாளைக் கொடுத்தீர்களாம்.

குமார:- பதில் நீ என்ன சொன்னாய்?

சோம:- அப்படியொன்றும் கிடையாதென்று அவன் மனதை திருப்தி படுத்தினேன்.

குமார:- கெட்டிக்காரன். இப்போது அவன் மனதில் சந்தேக மில்லையே!

சோம:- அதைப்பற்றிச் சொல்ல முடியவில்லை.

குமார:- ஏனென்றால் மணவாளன் அவன் ஆப்த நண்பன் அல்லவா? ஒருவேளை கணக்கனுக்கு ஏதாவது தண்டனை விதித்துவிட்டால் கலைவாணன் மனம் குலைந்துவிடுவானோ, என்று..........,

சோம:- பயம் வேண்டியதில்லையப்பா! நானிருக்கிறேன்.

குமார:- சரி.

(குமாரமங்கலம் படுக்கிறார். சோமநாதனும் படுக்கிறான்.)

## காட்சி மாற்றம்.

[இடம்: கணக்கர் ஆனந்தம்பிள்ளை வீடு. மணவாளன் தன் இருகைகளையும் கன்னத்தில் வைத்துக் கொண்டு ஒரு நாற்காலியில் கவலையோடிருக்கிறான். அவன் கண்களில் நீர் ததும்பி வழிகிறது. அவன் முன் பலவித சல்லூரிப் புத்தகங்கள், ஒரு அலாரம், மைக்கூடு உள்பட பேனுமுதலியவைகள் ஒருமேஜை மேல் இருக்கிறது. அவன் மனக்கண்முன் அவன் தந்தை கொலைக் குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டு ஜெயில் அறையில் கண்ணீர்விட்டு நிற்பது தெரி கிறது. அதைக்கண்டு மனம் பொறுக்காதவனாய் ]

மணவாளன் :- ஹா.......அப்பா.......,

[திடீரென்று தான் இருந்துக்கொண்டிருந்த இடத்தைவிட்டெழுந்து பேய்அறைந்தாற்போல் நிற்கிறான். இந்த சப்தத்தைக்கேட்டு படுத்திருந்த அவன் தங்கை பார்வதி எழுந்து ஓடிவந்து அவன் நிலையைக்கண்டு பதறி.]

பார்வதி :- அண்ணா!

மண :- பார்வதி!

[மணவாளன் தன் தங்கையை மார்போடு தழுவி அழுகிறான். பார்வதியும் அழுகிறாள். அவளைத்தேற்றுகிறான்.]

மண :- பார்வதி அழுவதில் என்ன இருக்கிறது. இப்பூமியில் நாம் உயிரோடிருக்கும்வரை நம்மை கொலைக்காரன் குழந்தைகளென்றே ஊரார் சொல்லுவார்கள்.

பார்வதி :- சொல்லமாட்டார்களண்ணா! மேகம் சூழ்ந்ததால் வானம் கருப்புநிறமென்று யாராவது சொல்லுவார்களா?

மண :- பார்வதி! அந்த அளவுக்கு நாட்டுமக்கள் இன்னும் பண்படவில்லையே. கேள், தீயினால் சுட்ட சூடு ஆறும்— ஆறாது வாயினால் சுடும் சூடு. அது நம் தலைமுறையவே தலை எடுக்கவிடாமல் செய்துவிடும்.

பார்வதி :- அதனாலென்ன! நாகமுத்திலும் விஷமுண்டென்று நாலுபேர் சொன்னாலும், இல்லையென்று நாலுபேர் சொல்லமாட்டார்களா?

மண :- நல்லமுத்து என்றாலும் நாகமுத்து என்றுதானே சொல்லுவார்கள். பார்வதி நீயோ சிறு பெண். உலகம் தெரியாதவள். எதிர் காலம் நம் வாழ்க்கையின் சிறப்புக்கு இப்பெயர் எவ்வளவு இழுக்குத் தெரியுமா?

[இதைக்கேட்டு பார்வதி மிகவும் வருந்துகிறாள். அவள் முகம் சோகப்படலமாக மாறுகிறது. இதைக்கண்டு]

மணா:- பார்வதி பரிதாபமான உன் நிலையைக் காண என்னால் சகிக்கக்கூட முடியவில்லை. நானோ யாதொரு வருவாயு மற்ற மாணவன். உன்னை மகிழ்விப்பதற்கு தகுதியற்ற தமையனே நான். இன்று கழிந்தால் நாளையப்பொழுதை எப்படிக் கழிப்பதென்றே எனக்குத்தெரியவில்லை.

[மணவாளன் கவலைத்தேங்கிய முகத்தோடு அங்குமிங்கும் உலாத்துகிறான். ஒரு நாற்காலியில் உட்காருகிறான். எழுந்து ஜன்னல் வழியாக தெருவைப் பார்க்கிறான். ஒரு வழியிலும் அவன் மனதில் நிம்மதி ஏற்பட மார்க்கமில்லை. அவசரமாக புத்தக மேஜை முன் அமர்ந்து எதையோ எழுதுகிறான். முடிந்து தன் தங்கையை திரும்பிபார்க்கிறான். கவலையோடிருக்கும் அவளிடம்.]

மணா :- பார்வதி கவலைப்படாதே. பிறவிகொடுத்தவன் பெருமைக்கொடுக்காமலா போய்விடுவான். கேவலம் உலகில் நாமென்ன அவ்வளவு தரித்திரர்களா? இல்லை. பார்வதி கொஞ்ச நேரமாவது சந்தோஷமாய் படுத்துறங்கு. போம்மா போ.

[பார்வதி எழுந்து போகிறாள். மணவாளன் தான் எழுதியக் கடிதத்தைப் பார்த்து மெதுவாக

மணா :- கடிதமே! நீதான் என் தங்கையின் மகிழ்ச்சிக்கு உதவியாக இருக்கவேண்டும். உலகில் வஞ்சகமும் சூதுமறியாத பொருளே நீ. அதைப்போலவே என் நண்பன் கலைவாணனும். அவன் கையில் எப்படியாவது சேர்ந்துவிடு.

[கடிதத்தை மேசைமீது வைத்து அதன்மேல் அலாரத்தை வைத்து மெதுவாக எழுந்து தன் தங்கையைப் பார்க்கிறான். அயர்ந்து தூங்கும் அவளைத் திரும்பித்திரும்பி பார்த்த வண்ணம் மெதுவாக வாசல்கதவை திறந்து வீட்டைவிட்டு வெளியேறுகிறான். இருட்டோடு இருட்டாக மணவாளன்

மறைந்ததும் ஒருசேவல் தன் சிறகைத்தட்டி கூவுகிறது. உழவர் வயல்வெளியைநாடி விரைகின்றனர். தயிர் கூடைகளும், பால் குடங்களும் விற்பனைக்கு வர சூரியன் உலகை தழுவுகிறான்.]

ஒரு பாடல் :—

இருள்கணம் பிரிந்தது
இரவியும் மலர்ந்தது
இதுதான் வாழ்வின் நிலையே.
இரவியும் பிரிந்து
இருளதும் கவிய
இன்னும் சிலப் பொழுதாமே!

அங்கம்—2.

## காட்சி 1.

[இடம் : குமாரமங்கலம் வீடு. கலைவாணன் தன் அறையில் நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்டிருக்கிறான். அவன் முகத்தில் மலர்ச்சியில்லை. கவலை ரேகைப்படர சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைப் பார்க்கிறான். அதில் புலியொன்றை அரசனொருவன் தன் பரிவாரங்களோடு சூழநின்று ஈட்டி, வாள், கட்டாரி இவைகளோடு தாக்குவதைப் போன்ற படம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இமையாடாது அதைப்பார்த்துக்கொண்டே தனிமையில்]

கலை :- வேங்கை என்றாலும் எதிர்ப்பவன் வேந்தனல்லவா! உண்மை. பணக்காரன் சட்டத்தை ஆளுகிறான், சட்டம் ஏழைகளை ஆளுகிறது, என்று கோல்ட்ஸ்மித் சொன்னது எவ்வளவு அனுபவமாக இருக்கிறது.

[குமாரமங்கலம் திடீரென்று அங்கே குறுக்கிட்டு கலைவாணனைப் பார்க்கிறார். அவன் கல்லூரி போகாமல் இருக்கிறான். அதைக் கண்டு]

குமார :- கலைவாணா!

[கலைவாணன் விளரியமுகத்தோடு திரும்பிப்பார்க்கிறான் ]

குமார :- இன்று பீ. ஏ. எக்ஸாமினேஷனல்லவா உனக்கு?

[கலைவாணன் தன் கவனத்தை வேறு பக்கம் செலுத்தி தன் கல்லூரிப் புத்தகங்களைப் பார்க்கிறான். ஒரு புத்தகத்தில் புல்ஸ்கேப் பேப்பர் இருப்பதைக்கண்டு அதன் பக்கம் மௌனமாகப் போகிறான்.]

குமார :- காப்பி சாப்பிட்டாயா கலைவாணா ?

[கலைவாணன் தன் கவனத்தை அடுத்தமேஜை மீதிருக்கும் பலகாரத்தின்மீது செலுத்துகிறான். அதைக்கண்டு குமாரமங்கலமும் அப்பலகாரத்தைப் பார்த்து சாப்பிடவில்லை என்பதாக அறிகிறார்.]

குமார:- சாப்பிட்டுவிட்டுப் போ.

[ஒன்றும் பதில்பேசாது புல்ஸ்கேப் பேப்பர் இருக்கும் புத்தகத்தைமட்டிலும் எடுத்துக்கொண்டு அறையைக் கடக்கிறான். குமாரமங்கலம் அதே மேஜைமீதிருக்கும் பௌண்டன் பேனாவைக் கண்டு, கலைவாணனிடம்]

குமார :- பேனாவைக்கூட மறந்து போகிறாயே கலைவாணா!

[கலைவாணன் இதை காதில்வாங்கி திரும்பிப் பேனாவைப் பார்க்கிறான். உள்ளே மீண்டும்வந்து பேனாவை எடுத்துக் கவலையோடு அகல்கிறான். அவன் தாய் கல்யாணி அங்கே வந்து தன் கணவனிடம்]

கல்யாணி:- ஏதோ கலைவாணனைக் கோபித்தாற்போலிருந்ததே!

குமார:- ஆம். அவன் நிலை கொஞ்சம்கூட எனக்குப் பிடிக்கவில்லை.

கல்:- குழந்தைதானே தெரிந்தோ தெரியாமலோ எதைச் செய்தாலும் அதை நாம்தானே பொறுக்கவேண்டும்.

குமார:- ஆமாம் இந்தமாதிரியான இறக்காரத்தால்தான் பயல் நம்மையே மதிக்காமல் நடக்கிறான்.

கல்:- எல்லாம் காலாவட்டத்தில் சரியாய் போய்விடும்.

குமார:- சரிசரி, பெற்றவனுக்கு எங்கே பிள்ளையின் குற்றம் தெரியப்போகிறது.

[குமாரமங்கலம் அன்றயை விட்டுப் போகிறார். தாய் பலகாரத்தை எடுத்து வேறொரு பக்கம் போகிறாள்.]

## காட்சி 2.

[இடம்: கல்லூரி. எல்லா மாணவர்களும் தங்கள் தங்கள் ஆசனங்களிலிருந்து பரிட்சை எழுதிக் கொண்டிருக்கின்றனர். கலைவாணன்மட்டிலும் பேனவை கையில் பிடித்தவண்ணம் யாதொன்றும் எழுதாது கல்லூரியின் வாசற்பக்கம் பார்த்துக்கொண்டே இருக்கிறான். இன்னொரு மாணவன் அவனை இடித்து எழுதும்படி தூண்டுகிறான். மெதுவாக அவனைத்திருபபிப் பார்க்கிறான் கலைவாணன். அவன் பக்கம் ஒரு நாற்காலி காலியாக இருப்பதைக் கண்டு தன்னை இடித்தவனிடம்]

கலை:- மணவாளன் இன்னும் வரவில்லையா?

[அவன் தெரியாதென்று கையை விரித்துவிடுகிறான். மீண்டும் அவன் உள்ளத்தில் அமைதி இல்லை. பரிட்சைக்கு மணவாளன் வராததும், அவன் தந்தை சிறைப்பட்டதும் அவனை உறுத்துகிறது. மீண்டும் வாசற்பக்கம் பார்க்கிறான். அவனுக்கு எழுத்து ஓடவில்லை. இடதுகையை தலையில் வைத்து முடியைப் பிசைகிறான். இதனால் ஒழுங்காக இருந்த அவன் முடி உலைந்து விடுகிறது. அடிக்கொருதடவை வாசலையும் பரிட்சை தாளையும் பார்த்துப் பார்த்து ஒன்றும் ஓடாது இருக்கிறான். இந்த சமயம் பரிட்சை எழுதுவதற்கு கொடுக்கப்பட்ட

அளவு மணி "கிணு கிணு" வென்று ஒலிக்கிறது. மாணவர்கள் எல்லோரும் எழுந்து தாள்களை வரிசை கிரமமாகக் கொடுக்கின்றனர். கடைசியில் கலைவாணன் மட்டிலும் கொடுக்காது நிற்கிறான். பரிட்சை உபாத்தியாயர் கோபத்தோடு]

உபா :- கலைவாணா உனக்குமட்டும் என்ன ?

[கலைவாணன் திருதிருவென்று லெஜ்ஜையோடு திணறி விழிக்கிறான்]

உபா :- எங்கே நீ எழுதிய தாள்?

[கலைவாணன் வெறுந் தாளை நீட்டுகிறான். உபாத்தியாயர் அதை வாங்கி இருபுறமும் புரட்டிப்பார்த்து தாளை அவனிடம் காட்டி]

உபா:- என்ன இது ! விடைகளொன்றும் எழுதவில்லையா ?

கலை :- இல்லை.

உபா :- ஏன் அது?

கலை :- படித்தவைகள் மறந்துவிட்டது சார்.

உபா:- ஏதாவது போக்கிரித்தனமாய் அலைகிறாயா ?

கலை :- அப்படி அலைந்தாலுங்கூட என் உள்ளத்தில் அமைதியிருக்கும். ஆனால் ......,

உபா :- (கோபத்தோடு) ஆனாவாவது ஆவனாவாவது. முட்டாள் அனாவசியமாக ஒருடிக்கிரி பரிட்சையையே இழந்துவிட்டாயே.

கலை:- (கவலையோடு) என்னசெய்வது சார். சூழ்நிலை என் அறிவைக் கொன்றுவிட்டது.

உபா:- அதனால் கல்விகூட அவசியமில்லையென்று எண்ணிவிட்டாயா? நான்சென்ஸ்! உனக்காக இதுவரை செலவழித்தப் பொருளை எண்ணி உன் பெற்றோர்கள் எவ்வளவு வருந்துவார்கள் தெரியுமா? அதோடு கல்லூரியின் கௌரவத்திற்கே எவ்வளவு கெட்டபெயரென்று எண்

ணிப்பார்! கடைசியாக இவற்றை பிரின்ஸ்பாலிடம் கூறி உன்னை இக்கல்லூரியிலிருந்தே விலக்கப்போகிறேன். இதுதான் உனக்குத்தரும் கடைசிபட்டம். போவெளியே.

[உபாத்தியாயர் கையிலுள்ள விடைதாள்களுடன் கோபமாய் போகிறார். கலைவாணன் உள்ளம் பொங்கும் கவலையோடு கல்லூரியினின்றும் வெளியேறுகிறான். என்றாலும் தன் நண்பன் மணவாளனைப்பற்றி விசாரிக்க ஆனந்தம்பிள்ளை வீடு வருகிறான்.]

## காட்சி 3.

[இடம்: ஆனந்தம்பிள்ளை வீடு. பார்வதி ஒரு கட்டில் படுக்கையில் தலைவிரிகோலமாக, கண்ணீர் வழிய குனிந்துக்கொண்டிருக்கிறாள் அவள் கையில் ஒரு கடிதம் இருக்கிறது. வீட்டினுள் ஒரே சோகப்படலம் படர்ந்திருக்கிறது. இந்த சமயம் கலைவாணன் அவள் வீட்டிற்குள் நுழைகிறான். ஒருவரையும் காணவில்லை. அங்குமிங்கும் பார்க்கிறான். கவலையோடு நடுக்கட்டு வாசலையும் பார்த்துவிட்டு அதன் உயரேயும் பார்க்கிறான். அங்கே மாட்டப்பட்டிருந்த தன் நண்பன் மணவாளன் படம் குப்புறக்கிடக்க, அதனருகே கிடக்கும் தன்படம் ஒழுங்காக இருப்பதைப் பார்க்கிறான். அந்த மாற்றததைக் கண்டதும் வீட்டில் ஏதோ நடந்திருக்க வேண்டுமென்றும் யூகிக்கிறான். மெதுவாக நடுக்கட்டு வாசல்பக்கம் போகிறான். வாசலைப் பிடித்துக்கொண்டு உள்பக்கம் எட்டிப் பார்த்தவன், கட்டிலில் பார்வதி அலங்கோலமாய் கிடப்பதைக்கண்டு திகைக்கிறான். மெதுவாக அவளருகே போய்]

கலை :- பார்வதி........,

[பார்வதி காதில் வாங்காது அப்படியே நிலைகுலைந்து கிடக்கிறாள். கலைவாணன் மீண்டும்]

கலை :- பார்வதி .......,

[அப்பொழுதும் பதில் இல்லை. அவன் கண்களில் ததும்பி நின்ற நீர்த்துளிகள் அப்படியே ததும்பி பார்வதியின் முதுகுபுரம் ரவிக்கையில் படுகிறது. மெதுவாக அவளைத் தட்டிக் கூப்பிடுவதற்காக தன்கையை அவள் பக்கம் நீட்டியவன், சட்டென்று கையை பின்னால் இழுத்து பக்கத்திலுள்ள மேஜை பலகையைத் தட்டி]

கலை:- பார்வதி, பார்வதி .....,

[உடனே பார்வதி தன் நிலையினின்றும் அமைதியாக மாறி கலைவாணனை சோகம்சிந்த பார்க்கிறாள். கலைவாணனும் அர்த்தம் விளங்காத பார்வையை அவள்மீது செலுத்துகிறான். இருவரும் மாறிமாறி பார்த்தபின்]

கலை:- பார்வதி! வீட்டில் ஏதாவது......, நண்பன் மணவாளன் எங்கே?

பார்வதி :- எங்கே என்று உங்களுக்குக்கூடத் தெரியாதா?

கலை :- ஏன், நேற்று வீட்டுக்குக்கூட வரவில்லையா?

பார்வதி :- வந்தார். வந்ததும் கவலையோடவே இருந்தார். அதோடு என்னவெல்லாமோ என்னிடம் சொன்னார். பிறகு படுக்கச் சென்றார். அதற்குப் பின்னரே அண்ணாவை வீட்டில் காணவில்லை.

கலை:- ஏதாவது உன்னிடம் வெறுப்புற்று பேசினானா?

பார்வதி:- ஆம் பேசியது அத்தனையும் பிதற்றலோ என்றுகூட நினைத்தேன்.

கலை:- அப்படியா?

பார்வதி:- இதோ அவர் எழுதிவைத்திருக்கும் கடிதம்.

(கலைவாணன் கடிதத்தை வாங்கிப் பார்க்கிறான். பிறகு பார்வதிக்குக் கேட்கும்படி வாசிக்கிறான் )

கடிதம்.

மதிப்புக்குரிய நண்பன் கலைவாணனுக்கு நான் இன்றுமுதல் உங்களிடம் விடைபெற்ற அனாதையாகி விட்டேன். காலம் வரும்போது நாமெல்லோரும் ஒன்றாகூடி களிப்போம். இன்றுதொட்டு என் அருமை தங்கை பார்வதி உன் நிழலாக இருக்கட்டும். நீங்களிருவரும் கணவனும், மனைவியுமாக இருக்க உங்களைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
உன் நண்பன்,
மணவாளன்.

[வாசித்ததும் கடிதத்தை வலது கையால் கசக்கி பார்வதியை இரக்கத்தோடு பார்க்கிறான். பார்வதியும் இவனைப் பார்க்கிறாள். கலைவாணன் கண்களில் நீர்வடிய, அதைக்கண்டு பார்வதியும் கண் கலங்கி.]

பார்வதி:- ஆதரவற்ற நேரத்தில் தாங்களுமா எனக்கு அதைரியத்தை ஊட்டவேண்டும்.

(கலைவாணன் மௌனியாக நிற்கிறான்.)

பார்வதி :- ஏதாவது பேசுங்கள் கலைவாணா!

கலை :- சொற்களும் எங்கேயோ போய்விட்டது.

பார்வதி :- பதாாதீர்கள். இப்படி உட்காருங்கள்.

[கலைவாணனைப்பிடித்து உட்காரச் சொல்லுகிறாள். கலைவாணன் உட்கார்ந்துகொண்டு பார்வதியின் முகத்தைப் பரிதாபத்தோடு பார்க்கிறான்]

பார்வதி :- உள்ளத்தைக் குழப்ப விடாதீர்கள். ஊழ்வினை உங்களையும் என்னையுமாவது பிரிக்காதிருக்கட்டும்.

கலை :- அதைப்பற்றிதான் சிந்திக்கிறேன்.

பார்வதி:- சிந்தனைக் காலத்தைக் கடத்தாமல் இருக்கட்டும்.

கலை :- உலக சூழ்நிலைக்குப் பயப்படுகிறாயா?

பார்வதி :- இல்லையா ! முதலில் என் நிலைமையையும், பருவத்தையும் கவனியுங்கள்.

கலை :- அதை நினைத்துதான் என் உள்ளம் நிலைகுலைகிறது பார்வதி.

பார்வதி :- மனதைநிறுத்தி உங்கள் நண்பன் எழுதியிருப்பதை முதலில் யோசியுங்கள்.

கலை :- (சற்றுயோசித்து) கல்யாணத்தைப் பற்றிதானே சொல்லுகிறாய்!

பார்வதி :- ஆம்.

கலை :- உன்னை ஏற்றுக்கொள்ள நான் தயங்கவில்லை. ஆனால்..., அதை சமூகம் தூற்றுமே!

பார்:- ஏன் ?

கலை:- வஞ்சனையாக உன் அப்பாவை சிறைக்கனுப்பிவிட்டு, வாழப்பிறந்த உன் தலைவனையும் எங்கோ விரட்டிவிட்டு சூழ்ச்சியாக உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேனென்று ஊரார் என்னைத் தூற்றுரர்களா ?

பார்:- எனக்காகப் பரிந்துபேசும் எவரும் என் நிலைமையை மாற்றவாவது முன்வருவார்களா ?

கலை.- யோசிக்கவேண்டியதுதான்; என்றாலும்........,

பார்:- ஏற்றுக்கொள்ள இது சமயமில்லையென்று கூறப்போகிறீர்களா ?

கலை:- ஆம்.

பார்:- கலைவாணு! சற்றுயோசியுங்கள். மலரிடம் அன்பு காட்டுபவர்கள் அதை ஆய்ந்துதானே பார்ப்பார்கள்?

கலை:- உன்னிடம் இரக்கம் காட்டுவோர் எல்லோரையும் அவ்விதம் எண்ணுவதா ?

பார்:- ஈக்கள் மொய்ப்பதும் மதுவைச் சுற்றித்தானே ?

கலை:- ஆம். அழகைச்சுற்றி ஆபத்து இருக்கத்தான் செய்யும்.

பார்:- தெரிந்திருந்தும் என் நிலைமையை திருத்தவேண்டாமா?

கலை:- (சற்று யோசித்து) பார்வதி பச்சைக் குழந்தையைப் போன்ற உன் உள்ளத்தை ஒருவாறு அறிந்துக்கொண்டேன்.

பார்:- கல்யாணத்தைப் பற்றிதானே கூறுகிறீர்கள் ?

கலை:- ஆம். எவ்விதமாவது உன்னைக் கல்யாணம செய்துக் கொள்கிறேன். கவலைப்படாதே.

பார்:- இது உறுதிதானா ?

கலை:- (படத்தை சுட்டிக்காட்டி) ஆம். அதோ என் நண்பன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

பார்:- ஆஹா...., என் உள்ளத்திலிருந்த பாரம் அத்தனையும் குறைந்துவிட்டது.

கலை:- எனக்கும் அப்படித்தான். ஆனால்.........,

பார்:- மீண்டும் சந்தேகமா ?

கலை:- இதைக்கேட்டு என் தந்தை எப்படியெல்லாம் குமுறுவாரோ, என்று யோசிக்கிறேன்.

பார்:- இலட்சிய வாழ்க்கைக்காக இலட்சியப் பாதையில் சிறகடித்துப் பறக்கும் நம் குறுக்கே யாரால் வரமுடியும்!

கலை:- முடியாதுதான். ஆனால், வாழ்க்கையில் அமைதி கிடைக்காவிட்டால்......?

பார்: அப்படியே திட்டம் போட்டுக்கொண்டுப்போனால் காரியம் ஒன்றும் நடக்காது. எதையும் துணிவாக சாதித்தால்தான் முடியும்.

கலை:- உண்மை. வெற்றிக்கு ஆதாரம் துணிவுதான் என்பது எனக்குத் தெரியும்.

பார்:- தெரிந்திருந்தும் கலங்குகிறீர்களே!

கலை:- சிந்தனையைக் கொஞ்சம் அப்படியும் செலுத்திப் பார்த்தேன்.

பார்:- இருக்கட்டும். முதலில் தோட்டத்திற்கு போய்வருவோம் வாருங்கள்.

(இருவரும் போகிறார்கள்)

## காட்சி மாற்றம்.

[இடம்: தோட்டம். அழகான செடி கொடிகள் பூத்துக்கிடக்க—அவற்றைப்பார்த்து கலைவாணன் பார்வதியிடம்]

கலை:- பார்வதி எங்கே கொஞ்சம் பாடு பார்க்கலாம்.

பார்:- இசையில் ரொம்ப விருப்பம் போலிருக்கிறதே!

கலை:- செந்தமிழிசையில் விருப்பங்கொள்ளாத தென்னாட்டான் இப்புவியில் உண்டா?

பார்:- தமிழ்க்கீதம் தரணியை மயக்குமென்று சும்மாவா சொல்லி வைத்திருக்கிறார்கள்.

கலை:- எங்கே! உலகத்தை மயக்கும் அந்தத்தமிழ்க்கீதத்தைக் கேட்டாவது நம் உள்ளம் மகிழட்டும். கொஞ்சம் பாடு பார்வதி.

[கலைவாணன் பார்வதியை தன் மேடியிற்கிடத்தி புற்தரையில் உட்கார்ந்து அவள் மிருதுவான கன்னத்தைத் தடவுகிறான். உணர்ச்சி நிறைந்த தன் பார்வையை கலைவாணன் பார்வையோடு மோதவிட்டு மகிழ்கிறாள் பார்வதி. ஒருகணம் காதல் பார்வைக்குப்பின், கலைவாணன் உள்ளங்கையை தன் மார்போடுவைத்து பாடுகிறாள்]

பாடல்

பார்:- உள்ளங்குளிரவைக்கும் உணர்ச்சி இந்த
உள்ளங்கையில் ஏனோ பெற்றீர்?
கள்ள மிலாக் கருத்தை யளித்த தெய்வ
கருணையால் கிடைக்கப் பெற்றீரோ.

கலை:- துள்ளும் வடிவழகுக் கொண்ட கண்கள்
சுழலும் பாவம் ஏனோ பெற்றாய்?
தெள்ளமுதக் குழலை யளித்த இயற்கை
சிறப்பை வணங்கிப் பெற்றாயோ?

பார்:- வீணை மேவும் நல் விரல்கள் என்
விழியை மேவும் நல் காந்தம்
தேனைப் பழிக்கும் சொல் ருசியும் உயர்
திருவை ரஸித்துப் பெற்றேனே!

கலை:- ஆசை முகத்தை மோதும் அன்பு இரு
அகத்தைக் கிளறும் பாவங்காணாய்!
நேசம் பிணைக்கப்பட்ட நெஞ்சு நாளை
நிறைவு பெறும் பாக்யம் கொண்டோம்.

[பாடல் முடிந்ததும் பார்வதி கலைவாணனை ஆசை நிறைந்த விழியோடு பார்க்கிறாள். அதைப்பார்த்த கலைவாணன்]

கலை:- பார்வதி நீ பாடும்போது பருவம்நிறைந்த உன்கன்னத்தில் எத்தனை அழகு ரேகைகள் கூத்தாடிற்றுத் தெரியுமா?

பார்:- அதைக் காதல் கண்ணோடு பார்த்திருப்பீர்கள்.

கலை:- இல்லை. கருத்தொருமித்த அன்பு ரஸனையோடு பார்த்தேன்.

பார்:- ஓ....., முல்லை மலரை முழுமதி பார்ப்பதைப்போல், அப்படித்தானே?

கலை:- இருக்கமுடியாது. மோகன கீதமிசைக்கும் உன் அழகு முகத்தை, என் அழகுமுகம் அண்ணாந்துப் பார்ப்பதைப் போல்; முழுமதி எங்கே முல்லையைப் பார்க்கப் போகிறது பார்வதி.

பார்:- நற்பவளம் பதித்தத்தூணை நாகரிகச்சின்னமென்றுச் சொல்வதைப்போல், கன்னியொருத்தியைக் கருத்துச் சின்னமென்றுக் கூறுகிறீர்களே!

கலை:- கண்ணுக்கு மைதீட்டுவதைவிட்டு நீ என் கருத்துக்கே மைதீட்டி விட்டாயே! பார்வதி அதோ கார்முகில்கூட்டம்!

மயிலிறகின் வர்ணச் சிறகடிப்பு! பார் பார்வதி. அமைதி நிறைந்த இப்பிரதேசத்தின் பிரேமைகீதம் இருஉள்ளத்தை எப்படி மயக்குகிறது பார்த்தாயா? சமுத்திரத்தின் அலை நம் உள்ளத்தில் எழுகிறதென்றால் அது காதலின் வேகத்தாலல்லவா. பார்வதி நமது இன்பக் கதையின் ஆனந்த அத்தியாயம் இன்றுதான் ஆரம்பமாகிறது.

பார்:- ஆரம்பமாகட்டும்.

கலை:- வா போகலாம்.

(இருவரும் வீட்டிற்கு வருகின்றனர்.)

பார்:- உட்காருங்கள்.

கலை:- (மணியைப் பார்த்து) இல்லை, நேரமாகிறது. நான் வீடுவரை போய்வருகிறேன்.

பார்:- போய்வாருங்கள்.

[கலைவாணன் போகிறான். அவனைப் பார்த்தவண்ணம் நிற்கிறாள் பார்வதி]

## காட்சி 4

[இடம்: குமாரமங்கலம் வீடு. அதன்முன் ஒரு பெரிய பந்தல் போடப்படுகிறது. கலைவாணன் பந்தலை பார்த்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைகிறான். நுழைந்தவன் தன் தாயிடம்.]

கலை:- எதற்காகம்மா வீட்டுமுன் பந்தல்?

கல்யாணி:- ஏதோ ஜமீன்தார்கள மகாநாடாம். அதை உங்க அப்பாவே நடத்துகிறார்களாம்.

கலை:- அப்படியா! மகாநாட்டைக் கூட்டியாவது கொலைகளை நிறையச் செய்யச் சொல்லட்டும்.

[கலைவாணன் இவ்விதம் கூறிவிட்டு அங்கே ஓர் மேஜையின்மீது கிடந்த ஏதோ ஒருபுத்தகத்தை

எடுத்துப் பார்த்துக் கொண்டு படுக்கையில் படுக்கப்போகிறான். குமாரமங்கலம் பெருங்கோபத்தோடு வீட்டிற்குள் வந்து].

குமார:- கலைவாணா கலைவாணா!

கல்:- ஏன் இவ்வளவு கோபமாய் அவனைக் கூப்பிடுகிறீர்கள்?

குமார:- (மீண்டும் கோபத்தோடு) அவன் வீட்டில் இருக்கிறானா இல்லையா?

கல்:- இப்போதான் வந்திருக்கிறான்.

[குமாரமங்கலம் கலைவாணன் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்து]

குமார:- கலைவாணா! நீ பி. ஏ. பரிட்சை எழுதவில்லையாமே உண்மைதானா?

கலை:- (வெறுப்போடு) ஆம்.

குமார:- அது அப்போவே எனக்குத் தெரியும்.

கலை:- தெரிந்திருந்தும் கேட்பானேன்.

குமார:- சீ முட்டாள்! கவர்மெண்ட் பரிட்சையையே கெடுத்து விட்டாயேடா.

கலை:- அந்தப்பட்டமென்ன அவ்வளவு பெரிதா? பைத்யம்! மக்கள் கொடுக்கும் ஒரு பட்டத்தைவிட ஒரு மடாலயம் கொடுக்கும் பட்டம் அவ்வளவு பெரிதாக எனக்குத் தோன்றவில்லையப்பா.

குமார:- (எரிச்சலோடு) சரி சரி, நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன!

கலை:- அந்த ஆசிர்வாதம் ஒன்றே எனக்குப் போதுமானது.

கல்:- (குறுக்கிட்டு) அதற்கா இப்படி கோபிக்கிறீர்கள். இந்த வருசம் இல்லாவிட்டால் அடுத்த வருசம் தேறுகிறான்.

குமார:- நீதான் இருக்கிறாயே அவனுக்கு வேம்படி பிள்ளையார் மாதிரி. சரிசரி, எப்படியும் தொலைந்துப்போங்கள்.

(குமாரமங்கலம் அறையினின்றும் போகிறார்.)

## காட்சி 5

[இடம்: பந்தல் வெளி, பல்வித செடிகொடிகள் பந்தக்காலில் கட்டப்பட்டு ஏராளமான தாள்கொடிகள் பறக்கவிடப்பட்டு பந்தல் அழகாக காட்சியளிக்கிறது. பந்தலினுள் ஜமீன்தார்கள் உள்பட பல மிட்டாதார்களும் வந்து நிறைந்திருக்கின்றனர். ஒவ்வொருவர் ஆசனத்தின்மீதும் அவரவர் ஊர் பெயர் எழுதிய அட்டை வைக்கப்பட்டிருக்கிறது. மேடையில் தலைவர்உள்பட, பேச்சாளராக குமாரமங்கலமும், அவர் மகன் கலைவாணனும் இருக்கின்றனர். மேஜையில் ஒலிபெருக்கிகளும், இருக்கிறது.]

தலைவர்:- (எழுந்து) கனம் ஜமீன்தார்களே இன்று இம்மகாநாட்டிற்கு தலைமைபேறு கிடைத்ததை எண்ணி பெருமையடைகிறேன். அறிவும் ஆற்றலும் நிறையப்பெற்றஎத்தனையெத்தனை ஜமீன்தார்கள் இங்கேஇருக்க என்னை தலைமை தாங்கும்படி சொன்னது என் பாக்யமென்றே கருதுகிறேன். சமீபகாலம்வரை நமக்குள் ஐக்யம் குலையப்பட்டு நமது பலம் சிதறிவிட்டது. இதை பலவழிகளில் நான் உங்களுக்குத் தெரிவித்து வந்திருக்கிறேன். அதை நாம் அலட்சியம் செய்து விட்டமையால், இன்று நமது பரம்பரை ஆட்சிக்கே சோதனை ஏற்பட்டிருக்கிறது. மாட்சிமைதங்கிய இங்கிலாந்து மன்னராட்சியில் நமக்கிருந்த செல்வாக்கும், புகழும் நேற்றுவந்த காங்கிரஸ்காரர்களால் எடுபடப்போகிறது. இதை எண்ணும்போது உடல்பதறுகிறது. நேற்றுவரை எத்தனையோ ஏக்ரா நிலங்களுக்கு அதிபதியாயிருந்த நாம், நாளை ஒட்டாண்டியாகப் போகிறோம். இந்நிலைக்கு ஒரு மாற்றங்காணவே நாமெல்லோரும் இங்கே கூடியிருக்கிறோம். உங்கள் ஆதரவும், உணர்ச்சியும் சர்க்கார் திட்டத்தை மாற்றட்டும். அடுத்து ஸ்ரீ குமாரமங்கலம் பேசுவார்.

[தலைவர் உட்காருகிறார். குமாரமங்கலம் எழுந்து]

குமார:- கனம் ஜமீன்தார்களே! நேற்றுவரை நமது காலடியில் புழுக்கள்போல் துவண்டுக்கிடந்த ஏழை விவசாயிகள் நாளை முதல் நம்மை மதிக்காமலும், வணங்காமலும் நடக்கமுற்பட்டால், அதைப்பார்த்து நாம் வாழ்வதா!? எந்த அரசாங்கம் காங்கிரஸ்காரர்களுக்கு சுதந்திரம கொடுத்ததோ. அதே மன்னர் அரசாங்கந்தான் நமக்கு இந்தஜமீன் ஆட்சியையும் தந்திருக்கிறது. இதை சட்டப்படி தெரிந்திருந்தும் நம்மை ஒழிக்க கங்கணம் கட்டிவிட்டார்கள். ஆகவே சர்க்காரின் ஜமீன் ஒழிப்பை நமது பலத்தாலும் ஒற்றுமையாலும் எதிர்த்தேதீரவேண்டும். இதற்கு உங்கள் பலம் தேவை.

[குமாரமங்கலம் உட்காருகிறார். தலைவர் எழுந்து]

தலைவர்:- அடுத்து ஸ்ரீ குமாரமங்கலம் மகன் கலைவாணன் பேசுவார்.

கலை:- பெரியோர்களே வணக்கம்! சர்வதேசம் எங்கனும் உழவன் கண்விழித்துவிட்டான். அவன் உரிமையைப் பிடுங்கும் ஒருகூட்டம் இனி உல்லாசமாக உலகில் வாழவே முடியாது. அகிலத்தை ஆளப்பிறந்த அரசியல் ஞானிகள் பொருளாதார சமத்துவத்தை உலகில் நிலை நாட்ட துடிதுடிக்கின்றனர். பசியென்ற கூக்குரலிடையே உலகை பொன்கோட்டையாக்கும் தொழிலாளன், அதே உலகை நோக்கி பயங்கரமாக அவநம்பிக்கையோடு விழிக்கிறான். என்றோ எப்பொழுதோ, அதே தொழிலாளர்க் கூட்டத்தை சுரண்டிவந்த இன்னொரு கூட்டம், எப்படியோ மாளிகையில் ஏறிவிட்டது. எனினும் இல்லை, என்ற மக்களின் குரல்கேட்டு அக்கூட்டம் குலை நடுங்குகிறது. இவற்றையெல்லாம் கேட்டும், வாசித்தும் வரும் நீங்கள் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருப்பதில் நியாயமிருக்கிறதா, என்று பாருங்கள். சிந்தியுங்கள். சுதந்தரத்தமிழன் ஆட்சியொன்று ஏற்பட்டால், அப்பொழுது பரம்பரை பணக்காரன் குடும்பத்திற்கு அரசாங்கத்தில் உத்தியோகமோ,

வேலையோ கிடையாது, என்ற சட்டம் ஏற்படும். அதே சமயம் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு ஆண் மகன் கட்டாயம் உழவுத் தொழிலை செய்துவரவேண்டுமென்ற சட்டமும் உங்கள் முன்வரும். அப்போது மாஜி ஜமின்களாகிய உங்கள் குழந்தைகளில் ஒருவன்; சட்டப்படி வயலில் இறங்கியே தீரவேண்டும். அதைப் பார்க்கும் போதுதான் உங்கள் காலடியில் புழுவாய்த் துடித்துவந்த விவசாயிகளின் நிலை எப்படி இருந்தது என்பதை நீங்கள் உணர்வீர்கள். உழவர்கூட்டம் எளியக்கூட்டம் என்பதற்காக அவர்களை மதியாமல் நடக்காதீர்கள். அவர்களே இந்நாட்டுமன்னர். மனிதனுக்குமனிதனே கண்கண்ட தெய்வம். மனிதனே காலப்புரட்சியின் கருவி. உலகை ஆக்கவும், அழிக்கவும் அவனால் முடியும்.

(இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த ஜமீன் ஒருவர்)

ஜமீன்:- நிறுத்து உன் பேச்சை.

இன்னொருவர்:- அவனை வெளியேற்றுங்கள்.

மற்றும்பலர்:- ஜமீன் துரோகி. அவனை அடித்துவிரட்டுங்கள்.

[இப்படியாக ஒரே கூக்குரல். உட்கார்ந்திருந்தவர்கள் எழுகின்றனர். குமாரமங்கலம் கலைவாணனைப் பிடித்துக் கோபத்தோடு]

குமார:- போ வெளியே!

தலைவர்:- (எழுந்து) எல்லோரும் அமைதியாக இருங்கள். அவன் சிறுவன்தானே. மேடைத்தெரியாமல் பேசிவிட்டான். பொறுமைக் கொள்ளுங்கள். (கலைவாணனிடம்) கலைவாணா! நீர் எங்கள் மகாநாட்டில் கருத்துமாறி பேசியதற்காக வருந்துகிறோம். இனி ஒருகணம்கூட நீங்கள் இங்கே இருக்கக்கூடாது. போகலாம் வெளியே.

[கலைவாணன் மேடையை விட்டிறங்கிப் போகிறான். இதைக்கண்ட சில வாலிபர்கள் சப்தமிட்டு.]

வாலிபர்கள்:- ஒழிக ஜமீன்கூட்டம். ஒழிக ஜமீன் வாழ்வு.

[இவ்வாறு கூக்குரலிட்டுக்கொண்டே கூட்டத்திற்குள் நுழைந்து கூட்டத்தைக் குழப்பி—நடவடிக்கைகளுக்குக்குந்தகம்செய்து கூட்டத்தைக் கலைத்துவிடுகின்றனர். இதனால் ஏற்பட்ட ஒரு சிறு கலகம் பந்தல்கால்களை யெல்லாம் தூக்கி எறிந்து விடுகிறது. மேடையும் சரிகிறது. நாற்காலி பெஞ்சுகள் புரண்டுவிழ ஜமீன்தார்கள் தலைவிரிக்கோலமாக ஓடுகின்றனர். கலவரம் அடங்கி அமைதியும் நிலவுகிறது.]

## காட்சி 6

[இடம்: குமாரமங்கலம் வீடு. குமாரமங்கலம் மிகுந்த கோபத்தோடு இருகைகளையும், பின்னால் கட்டிக்கொண்டு ஒரு அறையில் அங்குமிங்கும் உலாத்திக் கொண்டிருக்கிறார். பிறகு ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தவர், சோமநாதனைக் கூப்பிட்டு.]

குமார:- சோமநாதன்!

சோம:- என்னப்பா அது?

குமார:- உட்கார் இப்படி.

(சோமநாதன் ஒரு ஆசனத்தில் உட்காருகிறான்.)

குமார:- நேற்று கலைவாணன் நடந்துக்கொண்டது நியாயந்தானா, என்று அவனிடம் கேட்டாயா?

சோம:- கேட்டாலுந்தானென்ன! தக்கபதிலை சொல்லி நம் வாயை அடைத்து விடுவானே!

குமார:- (வெறுப்போடு) அவ்வளவு சாமார்த்தியம் இருக்கிறதா அவனிடம்?

சோம:- இல்லாமலா மேடையில் அவ்விதம் பேசி இருப்பான்.

குமார:- (அலட்சியமாக) என்னத்தைப்பேசிவிட்டான். கூட்டத்திற்கு கோபம் வரும்படி பேசுவதுதான் புத்தி சாலித்தனமா ?

சோம:- அது இருந்தால்தான் அவன் இவ்விதம் நடந்திருக்க மாட்டானே.

குமார:- முட்டாள். இருந்தும் இருந்தும் அவன் எனக்கா மகனாகப் பிறக்க வேண்டும்.

[இதை காதில் வாங்கிக்கொண்டு உள்ளே வரும் கலைவாணன்]

கலை:- (கோபத்தோடு) அதை எண்ணி நானே வெட்கப்படு கிறேன்.

குமார:- சீ! அதிகப்பிரசங்கி எப்போ பார்த்தாலும் தகப்பன் சாமியாகப் பேசுகிறாயே.

கலை:- தகப்பனைவிட தனயனுக்கு புத்தியிருந்தால் சாமியாகத் தானே மாறவேண்டும்.

சோம:- (குறுக்கிட்டு) கலைவாணா என்ன நீ இப்படி பேசுகிறாய்?

கலை:- பேச்சு பிடிக்கவில்லையா.

சோம:- அதை நீயே யோசித்துப்பார். ஒரு நாட்டில் பரம் பரையாக வாழ்ந்துவரும் ஒரு பிரபுக் கூட்டத்தை, எந்த அரசாங்கம் ஒழிக்கப்பாடுபடுகிறதோ, அந்த அரசாங்கம் சுயநலங் கொண்டதென்று உனக்குப்புலப்பட வில்லையா ?

கலை:- தமையன் வீட்டிலே தம்பிக்கு இரவு படுக்கைப்போட வேண்டாமென்பது சுயநலமா அண்ணா?

சோம:- தமையன் விரும்பினால்...?

கலை:- தம்பி, தமையன் வீட்டிலேல் நேர்மையாக நடந்துக் கொள்ளாவிட்டால்....?

(சோமநாதன் யோசிக்கிறான்)

கலை:- அண்ணனுக்கும், அவன் மனைவிக்கும் ஒரு அந்தரங்கப் போராட்டத்தை ஆரம்பித்த பாபியாகி விடுகிறானல்லவா தம்பி ?

(சோமநாதன் யோசிக்கிறான்)

கலை :- அமைதி நிறைந்த ஒருவீட்டிலே தம்பியின் அடைக்கல வாழ்வு, அண்ணனின் வாழ்கையவே ஆட்டி வைக்க முற்பட்டால்...?

(சோமநாதன் யோசிக்கிறான்)

கலை :- தமையனின் வாழ்க்கை வெறும் கோட்டிக்காரத்தன மாகி விடுமல்லவா ?

(சோமநாதன் யோசிக்கிறான்)

கலை:- அப்போது தம்பியைத் திருத்த தமையன் முயன்றால் அது சுயநல வெறியா அண்ணா?

சோம :- (திரும்பி) ஆகவே சுதந்தர பூமியில் ஜமீன்கள் இருப்பது ஆபத்து என்று எண்ணுகிறாய்?

கலை :- பதில் தமிழன் சரித்திரத்தில் புதைந்துக் கிடக்கிறதே! கேவலம், நாடோடியாக வந்த ஒரு நயவஞ்சகக் கூட்டத்தாற்கு நாட்டைக்காட்டிக் கொடுத்ததின் பரிசல்லவா இந்த ஜமீன் வாழ்வு.

சோம:- அதை நமது மூதாதையர் செய்திருக்கலாம்,

கலை:- ஏன்! சமீபத்தில் பூலுத்தேவனைக் கொல்லச்சொல்லி விட்டு, கணக்கர் ஆனந்தம் பிள்ளையைக் காட்டிக் கொடுக்க வில்லையா நம் தந்தை ?

சோம:- அது வேறு! இது வேறு.

கலை :- என்ன இருந்தாலும் வித்தில்முளைப்பதுதானே விருக்ஷம். கேவலம், நம் தந்தையின் பணப்பலம் இரண்டு ஆண்மகனை இழக்கச் செய்துவிட்டதே அண்ணா!

சோம :- அது அவனவன் விதி.

கலை:- (கோபத்தோடு) ஒருவனின் பலாத்காரத்திற்கு உள்ளாகி மடிவதற்குப் பெயர்விதி. செய்வதைஎல்லாம் செய்துவிட்டு அதைவிதியென்று மழுப்புகிறீர்கள். அண்ணா! என் அருமை நண்பன் என்னை விட்டுப்பிரிந்ததும் விதிதானா? அவன் தந்தையை ஜெயிலுக்கு அனுப்பியதும் விதியா? அப்படியானால் நேற்று மகாநாட்டில் நடந்த கலவரமும் விதிதானே

சோம :- யார் சொன்னது?

கலை :- விதி……

குமார :- (குறுக்கிட்டு) கலைவாணு உன்னோடு பேச எங்களுக்கு சக்தி இல்லை. உன் விருப்பம் எது வேண்டுமோ செய்.

[குமாரமங்கலம் எழுந்து போகிறார். அதற்குப்பின் சோமநாதனும் போகிறான்]



## அங்கம்—3.

### காட்சி 1.

[ இடம்: ஆனந்தம் பிள்ளை வீடு. பார்வதி கலைவாணன் வருகையை எதிர்பார்த்தவண்ணம் நிற்கிருள். மதி உதித்து அவள் மனதை மகிழச் செய்கிறது. பூக்களும் பூத்துக் கிடக்கின்றன. தன் வீட்டு மாடியில் நின்று பாடுகிருள். ]

பார்:- மனமும் மலர்ந்ததம்மா—காதல்
மண மெங்கும் வீச !
வனத்திடை மதியொளி ஒளிருதல் போல !
மனத்திடை அவர் உரு வளருதல் கண்டே—மனமும்
இன்பச் சுமழ் வீசும் எழில் நிறை பூங்கா !
செண்பகக் கொடியிடை சேர்ந்தது போன்ற ?
அன்புக் காம்பிடை சேர்ந்த இருஉயிர்
ஆனந்தமாக பாடி நடம்புரிய—மனமும்

[பாடிமுடிந்து தெருவைப் பார்க்கிருள். சமீபத்தில் கலைவாணன் வருவது தெரிந்து—ஆனந்தமாக படிக்கட்டை விட்டிறங்கி வருகிருள். இதற்குள் கலைவாணனும் வீட்டிற்குள் நுழையவே பார்வதி அவனைப் பார்த்து. ]

பார்:- அருமைக் காதலியையும், ஆனந்தப் பொழுதையும் மறந்து இப்படியா வீட்டிலிருப்பது ?

கலை:- எதை மறந்தாலும் உன்னை மறக்குமா நெஞ்சம்.

பார்:- ஆமாம். என் தமையனைக்கூட அப்படித்தான் சொன்னீர்கள். இன்று அவரை மறந்துதானே இருக்கிறீர்கள்.

கலை:- பைத்தியக்காரி! எத்தனை பழகினலும் மனதைக்கூட தெரியாமல் இருக்கிருய். கேள் உன் தமையன் எனக்குத்

கடவுள். சதாவும் அவன் நினைப்பு எனக்குண்டு வீட்டில் கூட அவன் படத்திற்கு மலரிட்டு வணங்குகிறேன்.

பார்:- போனவர் சுகமாகத் திரும்பி வரவேண்டுமென்று?

கலே:- கேள். மனிதன் மகாசக்திப் படைத்தவன். அந்த சக்தி உன் அண்ணனிடம் உண்டு. எதிர்கால உலகம்கூட மனிதனின் நன்னறிவாலேயே இயங்கப்போகிறது. ஆக வேதான் உன் அண்ணனை கடவுளாக மதிக்கிறேன்.

பார்:- மதியுங்கள், ஆனல் அவர் இருக்குமிடம் தெரிந்துக் கொள்ள வேண்டாமா?

கலே:- முயற்சிப்போம். ஆனல் உன் தமையன் மகா அறிவாளி. உன்னையும் என்னையும் மறக்கமாட்டான். நம்மிருவரையும் என்றாவது தன்கண்குளிரக் கண்டே தீருவான்.

பார்:- ஏதோ உங்கள் வார்த்தைதான் கொஞ்சம் அமைதியைத் தருகிறது.

கலே:- அமைதி நிரந்தரமாகட்டும். வா இங்கே
(பார்வதியைக் கட்டிலில் உட்காரவைத்து)

கலே:- பார்வதி இங்கே உன் நிலை எப்படியோ அதே நிலை தான் எனக்கும். வீட்டில் பெற்றோர்கள் எனக்குப் பேயாக இருக்கிறார்கள்.

பார்:. தெரிந்ததுதானே! நல்லவனாக இருப்பது.......,

கலே:- ஆபத்துதான். மகாஞானி பெர்னார்ட்ஷாகூட இப்படித்தான் சொல்லியிருக்கிறார்.

பார்:- யார்?

கலே:- ஒரு ஆங்கிலேயக் கவிஞர் அவர். அவரை ஆங்கிலேய நாடு எப்படி போற்றுகிறது தெரியுமா?

பார்:- எப்படி......?

கலே:- கண்கண்ட இலக்கியக்கடவுளாக.

பார்:- அது அந்நாட்டு மக்களின் சீர்திருத்தப் போக்கு.

கலே:- அந்த அளவாவது நம்நாடு திருந்த வேண்டாமா? இதற்காக உழைத்தால் நாம் பொதுமக்கள் விரோதியாம்!

பார்:- ஆகவேதான் என் தமையன் மணவாளனையும் நீங்கள் வணங்குகிறீர்கள் போலிருக்கிறது.

கலை:- ஆம்.

பார்:- வணங்குங்கள் அது எனக்குத் தானே பெருமை.

கலை:- உனக்கு மட்டுமென்ன நம் நாட்டுக்குக்கூட பெருமை என்றுச்சொல்.

[இந்நேரத்தில் இரவு 11 மணி அடிக்கிறது. அதைப் பார்த்து]

கலை:- பார்வதி நேரமாகிறது கொஞ்சம் உறங்கலாம்.

பார்:- சரி.

[பார்வதி கட்டில்படுக்கையை ஒழுங்காகவிரித்து கலைவாணனை படுக்கச்செய்து, அவனருகே வேறொரு கட்டிலில் தானும் படுக்கிறாள். இருவரும் அயர்ந்து தூங்கும்போது கலைவாணன் கனவில் மணவாளன் தோன்றி]

மண:- கலைவாணா!

(கலைவாணன் புரண்டு படுக்கிறான்)

மண:- நீ மகாஞானி. சமூகத்தின் சூழ்ச்சியை நன்கறிந்தவன், என்றாலும் சிலசமயம் அந்த சூழ்ச்சிவலை உன் கண்ணுக்குத் தெரியாமலும் இருக்கலாம். காரணம், பார்வதி ஓர் அனாதை; என்றாலும் அழகி. நாகத்தைப் பிரித்து முத்தைத் தொடுவதைப்போல் நாலுபேர் முனையலாம். அப்போதுங்கூட அவளைத் தனியே விட்டுவிடாதே.

[கலைவாணன் திடீரென்று படுக்கையை விட்டெழுந்து]

கலை:- மணவாளா இன்னுமா என்னை சந்தேகிக்கிறாய்?

[கலைவாணன் திடீரென்று படுக்கையை விட்டெழுந்து இவ்வாறு கூறி நிற்கிறான் இதைக்கேட்டு பார்வதி பதட்டத்தோடு எழுந்து]

பார்:- என்ன நடந்தது? ஏன் இந்தப் பதட்டம்?

கலை:- (தெளிந்து) ஏதோ கனவு. மணவாளனைக் கண்டாற் போலிருந்தது.

பார்:- பிரமை! உட்காருங்கள் இப்படி.

[கலைவாணன் உட்கார்ந்துக்கொண்டு நாடியில் கைவைத்து சிந்திக்கிறான். சற்றுக்கழித்து]

கலை:- பார்வதி நான் வீடுவரை போய்வருகிறேன்.

பார்:- இந்த இருட்டிலா?

கலை:- அதோ கீழ்வானம் வெளுத்துவிட்டது. பயமில்லை. வருகிறேன்.

[கலைவாணன் எழுந்துவருகிறான். பார்வதி தீபத்தைக்காட்டி கதவைத் திறந்து அனுப்புகிறாள். கலைவாணன் வாசலைவிட்டிறங்கியதும் விளக்கு வெளிச்சத்தில் அவன் முகத்தையும், பார்வதி முகத்தையும் அங்கே வந்த இரு வாலிபர்கள் பார்த்து மறைந்துக்கொள்கின்றனர். இதைக் கவனியாது கலைவாணன் வருகிறான். பார்வதி கதவைத் தாழிட்டுக்கொள்கிறாள். அவ்வாலிபரிருவரும் சற்று நின்று ஆச்சரியத்தோடு மெதுவாகப் பேசிக்கொள்கின்றனர்.]

ஒருவன்:- நல்ல தொடர்புடா இது! நள்ளிரவில், அதுவும் ஆண்களில்லாத வீட்டில்......,

மற்றவன்:- அதுதான் அப்போதே தெரிந்ததே. பெரிய இடத்து நட்புக்காக மணவாளன், கலைவாணனிடம், என்று சிநேகம் கொண்டானோ அன்றுமுதல் இது......,

ஒரு:- இருக்கும், இருக்கும். இங்கே பார். இந்த விஷயத்தை எப்படியாவது சோமநாதனிடம் சொல்லி அவனை நம்பக்கம் திருப்பவேண்டும். என்னச் சொல்லுகிறாய்?

மற்ற:- ஓ...! பார்வதியின் நட்பைபெற சோமநாதன் தயவு வேண்டுமென்கிறாயா?

ஒருவன்:- ஆம், ஆம். இல்லாவிட்டால்......, பெரிய இடத்துப் பகை......,

மற்றவன்:- அதுவும் வாஸ்தவந்தான். வா அவன் மூலமே ஏற்பாடு செய்வோம்.

(இருவரும் அவ்விடத்தினின்றும் போகின்றனர்)

## காட்சி 2.

[இடம்: குமாரமங்கலம் வீடு. அன்று ராம நவமி உற்சவம். வெகு கோலாகலமாக நடக்கிறது. ஒருசிலர் கூடி நிற்க குமாரமங்கலமும், அவர் மனைவி கல்யாணியும், சோமநாதனும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீராம் விக்ரகத்திற்கு வணங்கி நைவேத்தியம் செய்து தங்கள் அறைக்குள்ளிருந்து வெளி வருகின்றனர். வந்துக்கொண்டிருக்கும் போதே குமாரமங்கலம் தன் மனைவியிடம்.]

குமார:- இப்போதாவது தெரிந்துக்கொள் உன் பிள்ளையின் லக்ஷணத்தை.

கல்:- தெரிந்து என்ன பண்ணுவது. அவனுக்கென்னவோ கோயில் குளத்தில் நம்பிக்கை இல்லாது இருக்கிறான்.

குமார:- ஆமாம். மனிதனைக் கடவுளென்று பிதற்றும், ஒரு பேயனுக்கு கோயில் மீது எங்கே நம்பிக்கை வரப் போகிறது.

கல்:- அவனைப் படைத்தவன் அப்படிப் படைத்திருக்கிறான்.

[இதற்குள் மூவரும் வீட்டிற்குள் வந்து கலைவாணன் இருக்கும் அறையை திரும்பிப் பார்க்கின்றனர். அங்கே கலைவாணன் தன் நண்பன் மணவாளன் படத்திற்கு பூமாலையிட்டு வணங்கிக் கொண்டிருக்கிறான். அதை அவன் தந்தைக்கண்டு கோபத்தோடு.]

குமார:- கலைவாணா!

(கலைவாணன் திரும்பிப் பார்க்கிறான்)

குமார:- என்ன இந்த பித்தலாட்டம்?

கலே:- மனிதனை வணங்குவது பித்தலாட்டந்தான். உங்களைப் போல் கல்லை வணங்க எனக்குத் தெரியவில்லையப்பா!

குமார:- (கோபத்தோடு) சீ மூட்டாள்! பார்த்தவர்கள் தூப்பிக் களிப்பதற்கா இப்படி நடக்கிறாய்?

கலே:- ஆம். பகுத்தறிவற்ற சமுதாயம் இதைக்கண்டு துப்பித் தானே களிக்கும்.

குமார:- பின்ன என்னடா! பெரும் அறிவாளிகளெல்லாம் வழிபடும் ஸ்ரீராமபிரானை வணங்குவதைவிட்டு கேவலம் ஒரு மனிதனைப்போய் வணங்குகிறாயே.

கலே:- மனிதன் கேவலந்தான். ஆனால் ஸ்ரீராமனும் மனிதன் தானே?

குமார:- யார் சொன்னது? மகாதெய்விகப் புருடன் அவன்.

கலே:- வில்லை வளைத்து மிதிலையில் சீதையை விவாகம் செய்ததி னாலா?

குமார:- யோசித்துப்பார்.

கலே:- அதைப்போன்ற இன்று மனிதன் செய்யவில்லையா? கேவலம் ஒரு சிறு அணுக்குண்டின் மூலம் உலகத்தையே அழிக்கும் ஆற்றல் மனிதனிடமில்லையா? அழித்தப் பொருளை ஆக்கும் சக்திகூட மனிதனிடம் இருக்கிறதென்றால், அவன் மக்கள் சமுதாயத்தின் கண்கண்ட தெய்வமல்லவா? அத்தகையவனை வணங்குவது பித்தலாட்டமா? மனிதனை வணங்குவது பித்தலாட்டமென்றால் உங்களுக்கும் பகுத்தறிவுக்கும் ரொம்ப தூரமென்பதுதானே பொருள்?

குமார:- (மிகுந்த கோபத்தோடு) சீ! அதிகபிரசங்கி எனக்கா அறிவில்லை என்றாய்! இதோ!!

[மணவாளன் படத்தை தூக்கி தரையில் வேகமாக எறிகிறார். அது கீழே விழுந்து சுக்கலாக நொறுங்குகிறது. அதைக்கண்டு அவன் தாய் கலைவாணனை இழுத்துக்கொண்டுப் போய்விடுகிறாள்.]

## காட்சி 3

[இடம்: ரோடு. சோமநாதன் ஒரு சைக்கிள் வண்டியில் வந்துகொண்டிருக்கிறான். அவன் நண்பர்கள் அவனைக் கண்டு]

நண்:- ஹலோ சோமு!

(சோமு இவர்களைத் திரும்பிப்பார்த்து)

சோம:- ஓ......., நீங்களா? எது பிரண்ட்ஸ் எல்லாம் "பார்க்குக்கு வந்திருக்காப் போலிருக்கு!

நண்:- எல்லாம் உனக்காகத்தான்.

சோம:- அதென்னப்பா புதிர்வரவேற்பு?

நண்:- வா சொல்கிறேன்.

[மூவரும் போகின்றனர். அங்கோர் இடத்தில் அமர்ந்து நண்பன், சோமுவின் காதோடு விஷயத்தைச் சொல்லுகிறான்.]

சோம:- (ஆச்சரியத்தோடு) அப்படியா?

நண்:- கோபப்படாதே மெதுவாகக் கேள்.

சோம:- (பொறுமையோடு) பிறகு......?

நண்:- அவள் விளக்கைக் காட்ட, கல்யாணன் வெளியே வந்ததைப் பார்த்தால், நமது ஜமீன்தார் மகனா இப்படி நடக்க வேண்டுமென்று நாங்களே வெட்கப்பட்டோம்.

சோம:- சரிதான்! பயல் மனமாறி இருப்பதின் குணம் இப்போதான் வெளிப்படுகிறது.

நண்:- சோமு இங்கே பார். அவசரத்தில் எதையும் செய்துவிடாதே. முடியுமானால்......,

(மீண்டும் சோமு காதோடு ரகசியம் சொல்லுகிறான்.)

சோம:- சே! சே! நாமுமா அப்படி நடப்பது!

நண்:- நடந்தாலென்ன! சமயத்திற்கு உபயோகப்படும் சாக்குத்தானே அது. முனைந்துப்பார்.

(சோமநாதன் யோசிக்கிறான்.)

நண்:- என்னப்பா யோசனே! விஷயத்தை கமுக்கமாக வைத்து வேலேசெய்தால் மீன் வலேயில் விழாதா என்ன?

சோம:- அதற்காக இல்லே. விஷயம் வெளியே தெரிந்தால்...,

நண்:. கேவலமென்று எண்ணுகிருயா? இப்போ உன் தம்பிக்கு இருக்கும் கேவலத்தை விடவா வந்துவிடப்போகிறது.

(சோமநாதன் யோசிக்கிருன்.)

நண்:- சோமு இது யோசிக்கும் நேரமில்லே. உன் தம்பி அவளே நன்ருக அனுபவித்தபின் சக்கையாக தூாஎறியப்போகிருன். அப்போது அவள் அழகு என்னவாகும் தெரியுமா?

சோம:- உண்மைதான்.

நண்:- இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தால் நமக்கு நன்மையே கிடையாது. நீமட்டும் சரி, என்ருல் கதையை சரிகட்டிவிடுகிருேம் நாங்கள்.

சோம:- அவ்வளவு கஷ்டம் உங்களுக்கு வேண்டாம். நானே கதையை முடிக்கிறேன்.

(நண்பன் அவன் தோளேத் தட்டிக்கொடுத்து)

நண்:- சபாஷ்! துணிவிற்கு மெச்சுகிருேம்.

சோம:- சரி. இனிமேல் நாம் அடிக்கடி சந்திக்கவேண்டும். என்ன?

நண்:- பம்பரமாய் சுழன்றுக் கொண்டிருப்போம்.

சோம:- சரி நீங்கள் போங்கள்.

[நண்பர்களே அனுப்பிவிட்டு சோமநாதன் சைக்கிளில் வருகிருன். பார்வதி வீடுவந்ததும் இறங்கி உள்ளே போகிருன். அங்கே பார்வதி மோர் கடைந்துக் கொண்டிருக்கிருள். அவள்பின்புறம் மெதுவாகச் சென்று தயங்கி தயங்கி நிற்கிருன். அவள் தயிர் கடையும்போது அவள் மார்பு உருண்டுவருவதைக் கண்டு. வெறி நிறைந்தவனுய் அவள் சையிடையில் தன் கையைக் கொடுத்து ]

சோம:- மார்பு உருள மத்தை அழகாகச் சுழட்டுகிறாயே!

[பார்வதி சட்டென்று எழுந்து திரும்பிப் பார்க்கிறாள். ஆச்சரியத்தோடு.]

பார்:- யார்! தாங்களா?

சோம:- ஆம். பார்வதி ஆலம் இலைப்போன்ற இந்த உள்ளங் கையிலா இந்த உருளை உருளுவது?

(சோமநாதன் அவள் கையைப் பிடிக்க முயல்கிறான்)

பார்:- பிரபோ இது நல்ல காரியமல்ல! நான் தங்களுக்கு அப்பாற்பட்டவள்.

சோம:- வானத்திற்கு அப்பாலா?

பார்:- கேலிப்பேச தங்களுக்கு நான் முறைப்பெண்ணுமல்ல!

சோம:- இல்லாவிட்டாலென்ன! முறைக்கொண்டாடவும் உரிமையில்லையா?

பார்:- இருக்கோ இல்லையோ! நீங்கள் இங்கே வந்திருப்பது....,

சோம:- ஆச்சரியமாக இருக்கிறதென்றுச் சொல்ல வருகிறாயா?

பார்:- அனுவசியமென்றுச் சொல்லவந்தேன்.

சோம:- ஓ...., கலைவாணன் நுழைந்தால்மட்டும் ஆனந்தமாக இருக்கும், அப்படித்தானே?

பார்:- அதை அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

சோம:- உன்னிடம் கேட்டால்?

பார்:- அது பேடித்தனம்.

சோம:- சீ! நாயே!

பார்:- உங்கள் வீட்டில் எச்சில் நக்க நான் வரவில்லை.

சோம:- எது எது! எச்சில் நாய் எதிர்த்துக் குலைப்பதைப்போல் இருக்கிறதே!

பார்:- சொந்தநாய் என்பதற்காக அதை சூடுபோட ஒருவராலேயும் முடியாது பிரபோ!

சோம:- சீ பதரே! நானும் பார்க்கிறேன். என்னையே கிண்டல் பண்ணுகிறாய்.

பார்:- பொறுக்காவிட்டால் வெளியே போய்விடுங்கள்.

சோம:- என் சிந்தையில் எழுந்த காமத்துடிப்பைத் தணிக்காமலா? உன்னை சித்ரவதை செய்தாவது என் சீற்றத்தைத் தணித்துக்கொள்வேனே தவிர உன்னை விடமாட்டேன்.

பார்:- உங்கள் சிற்றின்பத்திற்கு இலக்காகும் சிறுக்கியல்ல நான். சிறுமியை சுற்றியிருப்பது செந்நாகமென்பது ஞாபகமிருக்கட்டும்.

சோம:- சீறி படமெடுத்தாலும் அதன் சிரசை துணிக்க சக்தி உண்டு பார்வதி.

பார்:- காலிக்கூட்டத்தின் வம்சா வழிதானே உங்கள் இனம்.

சோம:- (கோபத்தோடு) என்ன சொன்னாய்? கைநிறைய காசை வீசியெறியும் கனவானையா காலியென்றாய்! இதோ பார்.

[சோமநாதன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைகிறான். பார்வதி கன்னத்தைப் பிடித்துக் கண்ணீர் விட்டுக்கொண்டு]

பார்:- பணத்திமிர் உங்கள் இனத்திமிரோடு இருக்கட்டும்.

சோம:- அனாதையான உனக்கே இத்தனை இறுமாப்பானால்....,

பார்:- திருடவில்லை. நாணயமாக வாழ்கிறேன். பிறர் பணத்தில் பெருந்தன்மை பாராட்டிக்கொண்டு மனதை பாப எண்ணங்களில் செலுத்தவில்லை.

சோம:- தெரியும் பதிவிரதையென்று. அதைப் பாராட்டினால் இந்த வீட்டில் நீ நிலைப்பது கஷ்டம்.

பார்:- போட்டியிட்டுப் பாருங்கள். போங்கள் வெளியே.

சோம:- (இறுமாப்போடு) போகவேண்டுமா? வருகிறேன்.

[பொறுமையோடு அகல்கிறான்.]

## காட்சி 4

[இடம்: குமாரமங்கலம் வீடு. குமாரமங்கலம் வீட்டின் வெளி வராந்தாவில் உட்கார்ந்து ஏதோ

ஒரு பத்திரிகையை பார்த்துக்கொண்டிருக்கிறார் இரண்டு நாற்காலிக்கு அடுத்தாற்போல் சோமநாதனும் உட்கார்ந்து ஏதோ யோசனைப் பண்ணிக் கொண்டிருக்கிறான். இந்த சமயம் கலைவாணன் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தவன் தெருவை கூர்ந்து கவனித்தபிறகு மீண்டும் ஆச்சரியத்தோடு பார்க்கிறான். வெகு வேகமாக தன் வீட்டை நோக்கி பார்வதி வருவது தெரிகிறது. விஷயம் இன்னதென்று கிரகித்துக்கொள்ள முடியாதவனாய், கொஞ்சம் பயத்தோடு தன் தந்தையையும் தமையனையும் கடைக்கண் போட்டு பார்த்துவிட்டு வீட்டிற்குள் போகிறான். இதற்குள் பார்வதியும் அங்கே வரவே சோமு தன திருட்டுமுகத்தை அங்கே கிடந்த ஒரு பத்திரிகையால் மறைத்து, அதைப் பாரப்பதைப்போல் பாசாங்கு செய்கிறான். பார்வதியைக்கண்ட ஒரு வேலைக்காரன் ]

வேலைக்காரன்:- என்னம்மா விஷயம்?

பார்:- கல்யாணி அம்மாவைப் பார்க்கவேண்டும்.

குமார:- (நிமிர்ந்துபார்த்து) ஓ ..., ஆனந்தம்பிள்ளை மகளல்லவா இவள்? பார்வதி என்ன விஷயம்?

பார்:- அதோ இருக்கும் உங்கள் மூத்த மகனிடம் கேளுங்கள்.

குமார:- என்னடா அது, உனக்குத் தெரிந்த விஷயம்?

சோம:- கலைவாணன் அவள் வீட்டில் கன்னா பின்னா என்று நடந்திருப்பான், அதைச் சொல்ல வந்திருப்பாள்.

பார்:- பொய் அந்த உத்தமரை ஏன் இழுக்கிறீர்கள். நேற்று தனிமையாக இருந்த என் வீட்டிற்கு வந்து இவர் எப்படி நடந்துக்கொண்டாரென்று கேளுங்கள்.

[இவற்றையெல்லாம் மறைவாக நின்று கேட்கிறான் கலைவாணன் ]

குமார:- சோமநாதனா?

பார்:- ஆம். அவர்தான்.

சோம:- பார்வதி! அப்பாவியாக இருக்கும் என்னையுமா வம்புக் கிழுக்கிறாய்?

பார்:- வம்பனை வம்பன். என்றுதானே சொல்லவேண்டும்.

குமார:- பார்வதி முதலில் வாயை அடக்கிப்பேசு. பிறகு நடந்ததைச் சொல்.

பார்:- தனிமையாக இருந்த என்னிடம் வந்து, தன் ஆசையைத் தீர்த்துக்கொள்ள மன்றாடினார். மறுத்தேன். கன்னத்தில் அறைந்தார். எப்படியாவது தன் இச்சையைத் தீர்த்துக் கொள்வேனென்று சபதமும் செய்துவந்திருக்கிறார்.

சோம:- பொய். கலைவாணன் தூண்டுதலாலேயே இவள் இவ்வாறு கூறுகிறாள்.

[ கலைவாணன் கோபம் குமுற வேறொரு பக்கமாக குறுக்கிட்டு ]

கலை:- பொய் பேசுபவள் இந்தப் புனிதவதியல்ல! பார்வதி நடந்தது உண்மைதானா?

பார்:- உங்கள் தங்கைமீதே ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நடந்தது உண்மை.

கலை:- (கோபவிழியோடு) அண்ணா!

சோம:- தரித்திரனுக்காக நாட்டியமாடாதேடா தம்பி.

கலை:- போக்கிரித்தனத்தில் பொழுதையும் கழித்துவிட்டு பொய்யுமா புகலுகிறீர்?

குமார:- (குறுக்கிட்டு) கலைவாணா நிறுத்து உன் பேச்சை.

சோம:- ஆசைக்கள்ளிக்காக அனுதாபம் படுகிறான் பயல்.

குமார:- என்ன!?

சோம:- என்னவா! கேவலம் அவள் ஒரு அனாதை யென்று தெரிந்திருந்தும் இவனுக்கேனப்பா அவளோடு நட்பு! இது வெளியே தெரிந்ததும் இவனைக் கண்டித்தேன்.

இதனால் இக்கழுதை என் மீது பொறாமைக்கொண்டு இப்படி குற்றம் சாட்ட வந்திருக்கிறாள்!

குமார:- பார்வதி! உண்மையைச் சொல்.

கலை:- (குறுக்கிட்டு) சொல்லி முடித்துவிட்டாள். இனி சொல்ல ஒன்றுமில்லை.

குமார:- அவளுக்குப் பதில்பேச நீ யாரடா?

கலை:- அவள் கணவன் நான்.

குமார:- (ஆத்திரத்தோடு) கலைவாணா!

கலை:- ஆத்திரப்படாதீர்கள். எற்கனவே எங்களிருவருக்கும் அன்பு உண்டென்பது உண்மை. ஆனால், அதைக் கெடுக்க அண்ணன் முனைந்ததுதான்.......,

குமார:- சீ! எலும்புக்காக உறுமும் எச்சில் நாயே!

கலை:- நாய்க்கு நல்ல ருசி அதுதானே.

[இதைக்கேட்டு தாய் பதறி ஓடிவந்து]

கல்:- என்ன நடந்தது?

குமார:- நடந்ததா! பார் உன் மகனை. பண்ணை புகழுக்கே கோடாலியாகி விட்டான்.

கல்:- கலைவாணா என்னடா விஷயம்?

கலை:- ஒன்றும் கேட்காதீர்களம்மா! அமைதி நிலவிய என் உள்ளத்தில் அலைபொங்கிவிட்டது. எங்கள் வாழ்க்கையின் மலர் மொட்டு உங்கள் மூலம் கருகுவதைவிட, உலகத்து மூலமாவது கருகட்டும். அம்மா! இனி ஒரு கணமும் உங்களோடு வாழ எனக்குப் பிடிக்கவில்லை. நான் வரு கிறேன். பார்வதி புறப்படு

[இருவரும் சுகதுன்பத்தை அலட்சியம் செய்து புறப்படு கின்றனர். அதைக்கண்டு தாய்]

கல்:- கலைவாணா! கலைவாணா!!

[கைகளை நீட்டி கண்ணீர் பெருக கூப்பிடுகிறாள். கலைவா ணன் திரும்பிப்பாராது நடக்கிறான். அதை மூவரும் பார்த்து ஸ்தம்பித்து நிற்கின்றனர்.]

## காட்சி 5.

[இடம்: பார்வதி வீடு கலைவாணன் தன் நாடியில் கைவைத்துக்கொண்டு கவலையோடு படுக்கைமீது இருக்கிறான். அவன் முன் ஒரு மேஜை கிடக்கிறது. பார்வதி ஒரு வட்டலில் கோதுமை ரொட்டியும், காப்பியும் கொண்டுவந்து வைக்கிறாள். அதைப் பார்த்தபின், பார்வதியின் முகத்தையும் சோகத்தோடு பார்க்கிறான் கலைவாணன். பார்வதியும் அவனை சோகம் ததும்ப பார்க்கிறாள். ஒரு கணம் இவ்விதம் பார்த்தபின் பார்வதி அவன் பக்கலில் அமர்ந்து.]

பார்:- கோதுமை ரொட்டியென்று யோசிக்கிறீர்களா?

[கலைவாணன் பதில்பேசாது ஆழ்ந்தக்கவலையோடும், சிந்தனையோடுமிருக்கிறான். பார்வதி விளையாட்டாக கோதுமை ரொட்டியைப்பிய்த்து கையிலிருக்கும் ஒரு சிறு துண்டை அவன் வாய்க்கு நேராக நீட்டுகிறாள். அதைக்கண்டு லேசாக சிரித்த கலைவாணன், அந்த துண்டை தன் கையில் வாங்கி]

கலை:- குழந்தை உள்ளம் படைத்தவள் நீ. கவலையே இன்னதென்று அறியாத ஒரு குடும்பத்தில் விளையாடிக்கொண்டிருக்க வேண்டிய நீ, கோலாகலமற்ற இந்த வீட்டில் எப்படியோ பிறந்துவிட்டாய்.

பார்:- பிறந்து, வளர்ந்து, நிமிர்ந்து எத்தனையோ வருடங்களாகிவிட்டதே! முதலில் கவலையை மறந்து இதை சாப்பிடுங்கள்.

கலை:- காலை சாப்பாட்டைத்தான் இப்படிக் களிப்புடன் கழிக்கலாம். ஆனால் உச்சிப்பொழுதும் இப்படி கழிய வேண்டாமா?

பார்:- பணத்தைப்பற்றிதானே யோசிக்கிறீர்கள்?

கலை:- அதுதானே உன்னையும், என்னையும் ஆனந்தமாக இருக்கச் செய்யும் அளவுகோல்.

பார்:- அதற்கென்ன! வீட்டைக் கிரையம் பண்ணினால் போவுது.

கலை:- நமது சுயநலத்திற்காக குடியிருந்த வீட்டைக்கூடவா விற்பது ?

பார்:- இதென்ன பிரமாதம். முடிந்தால் என் நகையைக்கூட விற்க தயங்கமாட்டேன்.

கலை:- நாலுபேர் முன்னிலையில் நாடோடியாக வாழ்வதா?

பார்:- நல்லவர்களுக்கு அதுதானே ஆனந்த வாழ்க்கை.

கலை:- இருக்காது. உன்னையும், என்னையும் ஒண்டவிடாமல் செய்துவிடும் அந்த வாழ்க்கை.

பார்:- இனிமேலா! பூமியைப் பிளக்கும் பூகம்பந்தான் வரட்டுமே!

கலை:- வீரச்சொல் அது. பித்தலாட்டக்காரர்களின் எதிர்ப்புக்கு முன்...,

பார்:- நம்மை பேரிடிதான் எதிர்த்துப் பார்க்கட்டும்.

கலை:- ஒருவேளை நமது மனம் பீதியடைந்துவிட்டால்....?

பார்:- நீதியின் நல்வழி நிலைகுலைந்துவிடுமா?

கலை:- அதெப்படி யாகும்!

பார்:- பிறகு ஏன் கவலைப்படுகிறீர்கள்.

கலை:- இல்லை. ஒருவேளை என் தமையனே சூழ்ச்சி செய்தால், என்று எண்ணியபோதுதான் கொஞ்சம் கவலையாக இருந்தது.

பார்:- ஆடும் பாம்பாயிருந்தாலும் அதை அணுகுவது ஆபத்துதான், என்று அவர்களும் தெரியாமலா இருப்பார்கள்.

கலை:- அதன் நச்சுப்பல்லைக்கூட அமிர்தபல்லென்று நினைக்கும் அறிவிலிகளல்லவா அவர்கள்!

பார்:- பிறகு அதன் குணத்தை அனுபவிக்கிறார்கள்.

கலை:- வாஸ்தவந்தான்.

பார்:- முதலில் கவலையை மறந்து சாப்பிடுங்கள்.

[கலைவாணன் ரொட்டியைப் பிய்த்து சாப்பிடுகிறான். சாப்பிடும்போதே பார்வதியைக் கடைக்கண்போட்டுப் பார்க்கிறான். பார்வதியும் அவன் முன் வேறுதட்டிலிருக்கும் ரொட்டியை சாப்பிடுகிறாள். மெதுவாக தானும் கலைவாணனைத் திரும்பிப்பார்க்கிறாள். கலைவாணன் சட்டென்று குனிந்து ரொட்டியை சாப்பிடுகிறான். சாப்பிட்டுக்கொண்டே]

கலை:- ஆஹா! கோதும்பை ரொட்டியானாலும் எவ்வளவு ருசியாயிருக்கிறது.

பார்:- அரிசி சேராத பண்டங்களில் ருசி இருக்காதென்று எண்ணுகிறீர்கள்?

கலை:- இல்லை இல்லை. இந்த ரொட்டியே இவ்வளவு ருசியாக இருந்தால்........,

பார்:- இதன் மற்றபண்டம் எப்படி இருக்குமென்றுதானே கேட்கிறீர்கள்? கேளுங்கள். அரிசியில் செய்யும் பண்டங்களை எல்லாம் இதில் செய்தால் ரொம்ப ருசியாகவும் உடலுக்குப் பலமாகவுமிருக்கும். இது பிரசாரமல்ல! அனுபவம்.

கலை:- ஒ......., நீகூட கோதும்பையில் வளர்ந்தவள்தான் போலிருக்கு!

பார்:- அரிசி இல்லாத இந்தக்காலத்தில் இதை தின்றால்தானே காலத்தைக் கழிக்கமுடியும்.

கலை:- பேஷ்! உன் வார்த்தையில்கூட அரசியல் தத்துவம் பொதிந்துக் கிடப்பதைப்போலிருக்கிறதே!

பார்:- ஆமாம் உங்களைப்போல் பணக்காரராயிருந்தால் கோதும்பையைக் கண்ணினால்கூட பார்த்திருக்கமாட்டேன்.

கலை:- இப்போதாவது என்னைப் பார்க்கச் செய்தாயே, அந்தப் பெருமைக்கு நன்றி.

பார்:- சரிசரி. விளையாடியது போதும். வாருங்கள் இங்கே.

[இருவரும் மாடிக்குப் போகிறார்கள். அங்கே ஒன்றுக்கொன்று கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்கும் புறாக்களைப் பார்த்து பார்வதி ஆனந்தமாகப் பாடுகிறாள்.]

பார்வதி பாடல்:-

இன்பச் சிறகடித்து இருஉள்ளம் பறக்குது
எழில், நிறை, ஒளிதரும் மதயினைக் காண—இன்ப
துன்பக் கூண்டினில் துயருற்ற நாளில்
தூங்காது வாழ்ந்த நம்துயரங்கள் மடிய—இன்ப
நல்லவர் நடுமையில் நாம் இனிதிரிய
நயவஞ்ச காரர்கள் யாரென அறிய
வல்லவர் நாமெனும் மந்திரம் செய்ய
வகையினைக் கண்டே வழியில் வாழ—இன்ப
[ பாட்டு முடிகிறது ]

## காட்சி 6

[இடம்: குமாரமங்கலம் வீடு. சோமநாதன் தனிமையில் ரேடியோவை திருப்பிவைத்துக் கொண்டு, செய்தி அறிக்கையை கேட்டுக்கொண்டிருக்கிறான். இந்தசமயம் சோமநாதன் நண்பர்கள் அங்கே வந்து]

ஒருவன்:- ஹலோ சோமநாதன்!
சோம:- ஓ......, நீங்களா? வாருங்கள்.

[இருவரும் சோமநாதன் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டு பாட்டைக் கேட்கின்றனர். சோமநாதன் இவர்களிடம்.]

சோம:– என்னப்பா ஜெயராம்! ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா?

 N 50

ஜெய :— எல்லாம் உனக்குத் தெரியாத விஷயமா?

சோம:— அதிருக்கட்டும் முதலில் அந்தக் கழுதையைப்பற்றி ஏதாவது........?

ஜெய:— பார்வதியைப்பற்றி தானே?

சோம:— நாம் கூடி விட்டால் வேறுயாரைக் கேட்பது?

ஜெய:- நேற்று என்னவோ அவள் வீட்டில் ஒரே ஆட்டப் பாட்டமாக இருந்தது.

சோம:- யாரெல்லாம்?

ஜெய:- எல்லாம் உன் தம்பி கலியாணனும், அவளும்தான்.

சோம:- பிரிந்துபோய் வாழ்க்கையை ஆனந்தமாய் கழிக்கிருர்கள் போலிருக்கு.

ஜெய:- அது மட்டுமா! வீட்டைக்கூட கிரயம் பண்ணி விட்டு, குடிசையை எங்கோ கிழப்பிவிடலாமென்றும் திட்டம் போட்டிருக்கிருர்கள் போலிருக்கு

சோம :- அதெப்படி உனக்குத் தெரியும்?

ஜெய:- வீட்டு முன் விளம்பரம் போட்டிருக்கிருர்கள்.

சோம:- என்ன எழுதியிருக்கிருர்கள்?

ஜெய:- வீடு விற்கப்படும். விலை 2000 ரூபாய் என்று எழுதப் பட்டிருக்கிறது.

சோம:- நல்ல விளம்பரம். ஜெயராம் ஒன்று சொல்லுகிறேன் கேள். முதலில் நானே 2000 ரூபாய் தருகிறேன். அதை நீங்களே கிரயம் பண்ணிவிடுங்கள்.

ஜெய:- ஏன்?

சோம:- அதற்குபின் அவர்களை வீட்டைவிட்டு விரட்டிவிடலா மல்லவா! பிறகு குடியிருக்க வழியில்லாது நாடோடியாக அலைவார்கள். அப்போது அவளையும் அவனையும் பிரித்துவிட எளிதாக இருக்கும். எப்படி என் யோசனை?

ஜெய:- சிறந்ததுதான் ஆனால் சிரமம் இருக்குமென்று எண்ணுகிறேன்.

TAMILNADU ARCHIVES LIBRARY EGMORE No. 103416

**சோம:-** அதென்னப்பா சிரமம் படை செய்யாததை பணம் செய்யுமே!

ஜெய:- செய்யும். ஆனால், அவர்களிருவரையும் பிரிக்க நம்மால் முடியாது.

**சோம:-** அவர்களென்ன! இக்காலத்து லைலா-மஜ்னுவா?

ஜெய:- என்னவோ முயற்சித்துப் பார்ப்போம்.

**சோம:-** ஒன்று. நாம் நடத்துவதெல்லாம் ரகசியமாக இருக்க வேண்டும்

ஜெய:- ரகசிய மென்பது பெட்டிப் பாம்பல்லவா! அதெல்லாம் எனக்குத் தெரியும் சோமநாத்.

[ஜெயராமனும் அவன் நண்பனும் போகின்றனர். சோமநாதன் — தன் இடது கை விரல்களை மடக்கி அதை வலது கைவிரல்களால் தட்டிக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்து வெளியே மெதுவாக வருகிறான். மனதில் அமைதி இல்லாது அங்குமிங்கும் உலாத்துகிறான். பக்கத்து மேஜையொன்றில் கிடந்த ஒரு புத்தகத்தை எடுத்து அதிலிருக்கும் இரண்டொரு வசனத்தை வாசிக்கிறான். வெறுப்போடு அப்புத்தகத்தை வைத்துவிட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து வலது கையை கன்னத்தில் வைத்துக்கொண்டு யோசனையில் ஆழ்கிறான்]

# அங்கம் 4.

## காட்சி 1.

[இடம்: ஒரு குடிசை. கலைவாணன் ஒரு கட்டிலில் உட்கார்த்துக்கொண்டிருக்கிறான். ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டுவந்து குடிசையினுள் வைத்துவிட்டு, முற்றத்தில் கிடந்த ஒரு விறகுக்கட்டையைப் பிளக்க அரிவாளோடு வருகிறாள். அதை கலைவாணன் கண்டு]

**கலைவாணன்:-** *விறகைக்கூடவா நீ கீறவேண்டும்! அரிவாளை என் கையில் கொடு*

**பார்வதி:-** *பழக்கமில்லாததை நீங்கள் செய்யக்கூடாது!*

**கலை:-** *பரவாயில்லை. வாழ்க்கையின் பல பாஷைகளைப் பழகித்தானே தீரவேண்டும்.*

*[அரிவாளைக் கைநீட்டி வாங்குகிறான். பார்வதி அவன் முகத்தை பரிதாபத்தோடு ஏரிட்டுப்பார்த்து அரிவாளைக்கொடுக்கிறாள்.]*

**பார்:-** *பார்த்துக்கிறுங்கள்! ஏதாவது காயம் பட்டுவிடாமல்...,*

**கலை:-** *பார்த்துக்கொள்கிறேன்.*

[பார்வதி அரிவாளைக் கொடுத்துப் போகிறாள். கலைவாணன் விறகைத்தூக்கி நிறுத்தி அரிவாளால் ஓங்கி வெட்டுகிறான். இப்படியாக இரண்டு மூன்று தடவை வெட்டியதும் அவன் திரேகம் வியர்வையைக்கொட்டுகிறது. நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்தவண்ணம் விறகைக் கீறிக்கொண்டு வந்தவன் வாசலில் பார்வதி நின்று, தன்னைக் கவலையோடு பார்ப்பதை பார்த்துவிடுகிறான். அடுத்த

வெட்டுக்கு ஆயத்தமாகும்போதுங்கூட, பார்வதியை பார்த்துக்கொண்டே வெட்டுகிறான், அந்த வெட்டு விறகில் படாது அவன் காலில் பட்டுவிடுகிறது. உடனே கலைவாணன் விறகையும் அரிவாளையும் கீழே போட்டுவிட்டு காலைப்பிடித்து]

கலைவாணன்:- ஹா......! (என்று கூவுகிறான்) (பார்வதியும் அதைக்கண்டு)

பார்வதி:- ஹா........! என்று கூவி அவன்காலை ஓடிவந்து பிடிக்கிறாள்.

[அவள் கைவழியாக வழியும் இரத்தத்தைக் கண்டு பயந்தவளாய்]

பார்:- வெட்டுப் பலமாயிருக்கும்போல் இருக்கிறதே!

கலை:- இல்லை, இல்லை. வெட்டு லேசாகத்தான் விழுந்தது.

பார்:- இரத்தத்தைப் பார்த்தால்......,

கலை:- பயப்படாதே. கொஞ்சம் சுண்ணாம்பு இருந்தால் எடுத்துவா.

[பார்வதி ஓடிப்போய் எடுத்து வருகிறாள். அதை வாங்கி தன் காயத்தில் வைக்கிறான் கலைவாணன். பார்வதி ஒரு பழந் துணியால் காயத்தைக் கட்டிக்கொண்டு]

பார்:- ஏழைகளுடனா கடவுள் இந்தப் போராட்டம் நடத்த வேண்டும்.

கலை:- பைத்தியக்காரி. கரல்பிடித்த ஆயுதத்திற்கும் கடவுளுக் கும் சம்பந்தமேது

பார்:- கொஞ்சம் படுத்தூங்குங்கள்.

[பார்வதி தலையணையொன்றையெடுத்து அதை நார் கட்டிலில் போட்டு கலைவாணனை கைத் தாங்க லாகப் பிடித்து கட்டிலில் படுக்கச்செய்கிறாள். கலை

வாணன் ரொம்ப சிரமத்தோடு படுத்ததும், தெருவில் ஒரு பிச்சைக்காரன் தன் மனைவியோடு கீழே வரும் பாடலை சோகம்ததும்ப பாடிக்கொண்டே போகிறான். கலைவாணன் பாட்டை மெய்மறந்துக் கேட்கிறான்.]

பிச்சைக்காரன் பாடல்.

களிமண் சுவரிலே கரையான் — இந்த
கண்கண்ட உண்மையைப் பாரீர். —களிமண்

ஓடி உழைப்பவன் கலங்க—அவனை
உண்டு வாழ்பவன் எதிர்க்க!
பாடிக் கொடுப்பவன் கதற! அவன்
பாட்டால் "யாரோ" பணக்காரனாக —களிமண்

துரோகம் செய்பவன் ஒருவன்—அதை
சொன்னவன் அடிபடும் காலந்தான் இதுவே!
யாருக்கு வந்த விருந்தோ—என்று
யாவரும் நடந்தால் உலகம்தான் பாழே! —களிமண்

[கலைவாணன் இப்பாட்டைக் கேட்டு சிந்தனை இழந்து தடுமாறி எழுந்து உட்காருகிறான். பிச்சைக்காரன் பாடிக்கொண்டே அவன் குடிசை முன் வந்ததும், அவனுக்கு ஒரு காலணா போட்டுவிட்டு]

கலைவாணன்:- உண்மை நீ பாடியது அத்தனையும் உண்மை.

பிச்சை:- புகழாதீர்கள். இது பிச்சைக்காரன் பாட்டு.

[பிச்சைக்காரன் நடக்கிறான். கலைவாணன் அவன் மறையும் வரை கூர்ந்து பார்த்துவிட்டுத் திரும்பி உட்காருகிறான்]

## காட்சி 2.

[இடம்: அதே குடிசை. நடுநிசி. ஊரெல்லாம் நிசப்தமாக தூங்கும் அந்நேரத்தில், சோமநாதனும், அவன் நண்பர்களும் மாறு வேடத்தில்

குடிசைக்குப் பின்புறமாக வந்து ஏதோ சதி திட்டம் வகுக்கின்றனர். குடிசையினுள் கலைவாணனும் பார்வதியும் தலைக்கு ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டு தூங்காது இருக்கின்றனர். கலைவாணன் மெதுவாக பார்வதியைப் பார்த்து]

கலைவாணன்:- தூக்கம் வரவில்லையா பார்வதி?

பார்வதி:- எப்படி வரும்! பாதுகாப்பற்ற இந்தக் குடிசையை எண்ணும்போது.

கலை:- ஏன்! இரையம் ரூபாய் மரப்பெட்டிக்குள் இருப்பதால் பயப்படுகிறாயோ?

பார்:- உங்கள் காலில் காயம்பட்டதிலிருந்து ஒரே பயமாகத் தானிருக்கிறது.

கலை:- அதற்கென்ன திருடர்கள் யாரும் அதை அபகரித்துக் கொள்ளமாட்டார்கள். நீ நன்றாக தூங்கு.

[பார்வதி கண்களைமூடி தூங்குகிறாள். கலைவாணன் அவளைப் பார்த்தவண்ணம் தானும் தூங்குகிறான். இந்த சமயம் சோமு ஜெயராமனைப்பார்த்து கூரையில் எதையோ வை, என்று சைகை காட்டுகிறான். ஜெயராமன் பேயைப்போல் விழித்து ஒரு குழியில் பதுக்கி வைத்திருந்த தீ பந்தத்தால் குடிசையின் கூரையைக் கொழுத்துகிறான். மறு கணம் தீ தகதகவென்று பற்ற மூவரும் அவ்விடத்தினின்றும் ஓடி மறைந்துவிடுகின்றனர். பார்வதியும், கலைவாணனும் தீ வெளிச்சத்தைக்கண்டு பதறி எழுந்து சப்தமிடுகின்றனர். ஜனங்கள் நாலு பக்கங்களிலிருந்தும் ஓடிவந்து தீயை அணைக்கின்றனர். பார்வதி மரப் பெட்டிக்குள்ளிருக்கும் ரூபாயை எடுக்க வாசல் பக்கம் நுழைய முயற்சிக்கிறாள். அங்கும் தீ குபிகுபி ரென்று பற்றி எரிகிறது. கலைவாணன் அவைகளைத் தடுத்து ஜனங்களிடம்]

கலைவாணன்:- உள்ளேயிருக்கும் ஒரு சிறு மரப் பெட்டியை யாவது காப்பாற்றித்தாருங்கள்.

ஒருவன்:- வீடு வேகும்போது விருந்தாளியிடம் கதை பேசு வதைப் போலிருக்கிறதையா நீர் சொல்வது!

கலை:- பெட்டியைக் காப்பாற்ற முடியாதா?

ஒருவன்:- வீட்டினுள் எல்லாம் சாம்பலாகி விட்டதேய்யா!

கலை:- உண்மையாகவா?

ஒருவன்:- பொய்யோ மெய்யோ தீயணைந்ததும் போய்பாரும்.

[ இதைக் கேட்டு பார்வதி கலைவாணன் தோட்களைப் பிடித்து ]

பார்வதி:- இனி என்ன இருக்கிறது வாருங்கள் போகலாம்.

கலை:- நீ பிடித்த காரணத்தை அறிய வேண்டாமா?

பார்:- அதை அறிய முயன்றால் நம் கதை பொன் வாத்துக் கதையாகவே முடியும்.

கலை:- உண்மை. துரோகத்தை அறிய சூழ்ச்சியால்தான் முடியும். பார்வதி குடியிருந்த குடிசையும், கையிலிருந்த பணமும் நம்மை வெறுத்து விட்டது.

பார்:- வேதனையை சமாளிப்பதற்கும் சாதனை வேண்டும். வாருங்கள் போகலாம். சூழ்ச்சி இன்னும் எத்தனை உருவத்தில் நம்மை பயங்காட்டுகிறதென்று பார்ப்போம்.

[இதற்குள் ஜனங்கள் தீயையணைத்துப் போய்விடுகிறார்கள். கலைவாணன் சிறிது நொண்டி பார்வதியோடு நடக்கிறான்]

## காட்சி 3.

[இடம்: ரோடு. கலைவாணனும், பார்வதியும் நடந்து வருகிறார்கள். தூரத்தில் ஜெயராமனும் அவன் நண்பனும் தூரத்தில் நின்று இவர்கள் எங்கே போகிறார்களென்று மறைந்து மறைந்து

கவனிக்கின்றனர். வழியில் ஒரு கட்டிடத்தின்முன் தமிழ்நாடு நாட்டியக்கலை மண்டலி — அனாதைகள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். என்ற விளம்பரத்தைக் கண்டு சற்று அதன் முன் நின்று கலைவாணன் யோசிக்கிறான். பிறகு மனம் தெளிந்து பார்வதியையும் கூட்டிக்கொண்டு கட்டிடத்திற்குள் நுழைகிறான். இவர்களைக்கண்டு ஒரு பெண் விரைந்து வந்து]

ஒரு பெண்:- யாரம்மா நீங்கள்?

கலைவாணன்:- அவள் என் மனைவி. அனாதைகள் நாங்கள்.

பெண்:- வாருங்கள் இங்கே!

[அப்பெண் இவர்களை கூட்டிப்போகிறாள். கொஞ்சதூரம் போனதும் இவர்களை திரும்பபடி சைகை செய்துவிட்டு. ஒரு அறைக்குள் நுழைகிறாள். மறு கணம் வெளியே வந்து]

பெண்:- உள்ளே போங்கள். தலைவர் இருக்கிறார்.

[இருவரும் உள்ளே நுழைகின்றனர் தலைவர் இவர்களைக் கண்டதும், மரியாதைசெய்து அன்புகனிந்த முகத்தோடு]

தலைவர்:- வாருங்கள், வாருங்கள்.

[இருவரும் அவரை வணங்கிப் போகின்றனர். தலைவர் ஆசனங்களை சுட்டிக்காட்டி]

தலைவர்:- உட்காருங்கள் இப்படி

(இருவரும் உட்காருகின்றனர் ;

தலை:- யார் நீங்கள்?

கலை:- நாங்களிருவரும் கணவனும், மனைவியும்.

தலை:- அதற்கான் அடையாள மொன்றுமில்லையே.

கலை:- மணமன்றலில் மாலையிட்டுக் கொள்ளாது மனமன்றலில் மாலையிட்டுக் கொண்டோம்..

தலை:- ஓ..., நீங்கள் இருவரும் காதலர்களென்றுச் சொல்லுங்கள்.

கலை:- அது ஒன்றுதான் எங்களை திருப்திபடுத்திக்கொண்டிருக்கிறது.

தலை:- உங்கள் ஊர்?

கலை:- பூங்குளம்.

தலை:- ஓ...., குமார மங்கலம் கிராம பிரஜைகளா நீங்கள்!
(பதில் பேசாது நிற்கின்றனர்)

தலை:- உங்கள் தந்தையின் பெயர்?

(பதில் பேசாது நிற்கின்றனர். இதைக்கண்ட தலைவர்)

தலை:- ஏன் பதில் சொல்லாது நிற்கிறீர்கள்?

கலை:- தயவுசெய்து எங்கள் வரலாறுகளைக் கேட்காதீர்கள.

தலை:- ஏன்?

கலை:- நிரபராதி ஒருவனுக்கு மரண தண்டனை விதித்தாற் போலிருக்கும் எங்கள் சரிதை.

தலை:- அவ்வளவு பெரும்புயலையா எதிர்த்து வந்திருக்கிறீர்கள்!

கலை:- ஆம், என்று சொல்வதற்குக்கூட உள்ளம் நடுங்குகிறது.

தலை:- பாவம்! பச்சைக்குழந்தையைப்போன்றது தங்கள் உள்ளம்.

கலை:- இப்படிச் சொல்வது நீங்கள் ஒருவராகத்தானிருக்கிறீர்கள்!

தலை:- அவ்வளவுக் கொடுமையாகிவிட்டதா ஜனசமூகம்?

கலை:- அதை சொல்வதாயிருந்தால் விஷயம் பிரசங்கமாகிவிடும்

தலை:- உங்கள் பெயர்?

கலை: இவள் பெயர் பார்வதி. என் பெயர் கலைவாணன்.

தலை:- கபடமற்றவர்கள். கண்ணாடியைப்போன்ற குணம் உங்களிடந்தான் காணுகிறது!

கலை:- மனதில் பலங்கொண்ட ஒரு சிலர், அப்பேற்பட்டவர்களைத்தான் மடக்குகிறார்கள். கேவலம் பணத்தில் பலங்கொண்டவர்களுங்கூட, இவ்விதம் நடக்கிறார்களென்றால், இந்த ஜனசமூகத்தை என்னவென்றுச் சொல்வது!

தலை:- இருக்கட்டும். கலைவாணா நடந்ததை எண்ணி வருந்தாதீர்கள். நல்லநாள் உங்களுக்கும் உண்டு. நல்லவர் தரிசனம் உங்களைச்சேமமுறச்செய்யும். கலங்காதீர்கள். வாருங்கள் என்னோடு.

[தலைவர் எழுந்து இவர்களைக் கூட்டிப் போகிறார். சற்றுத் தூரத்திலிருந்த ஒரு கூடத்தைக் காட்டி]

தலை:- உங்கள் வாழ்க்கை இங்கே கழியட்டும். உங்களுக்கு வேண்டிய வசதிகள் மண்டலிசேவகிகள் செய்வார்கள். வாருங்கள்.

[மூவரும் கூடத்தைப் பார்த்துவிட்டு—மற்றொரு கூடத்திற்குள் நுழைகின்றனர். அதைக் காட்டி]

தலை:- இதுதான் நடனப்பயிற்சி மண்டபம். தினமும் என் போதனைக்கீழ்தான் பயிற்சி நடக்கும். பார்வதிகூட இந்த நடனத்தைப் பழகலாம். எதிர்காலத்தில் இந்தத் தொழில்தான் ஜனசமூகத்தைப் பெருமை படுத்தப் போகிறது.

கலை:- உங்கள் விருப்பம். பார்வதியை இது சம்பந்தமாக நான் கட்டுப்படுத்தமாட்டேன். ஆனால்...,

தலை:- என்ன கலைவாணா?

கலை:- நாட்டில் நெஞ்சுலர உழைக்கும் பாட்டாளியின் எண்ணம், விளையாட்டிலும் வேடிக்கையிலும் செல்லுமா! நாட்டின் பொருளாதாரம் செம்மையுற்று, சகல மக்களின்

வாழ்வும் சமத்துவமாக இருக்க, ஆங்காங்கு தொழிற் கல்வி பெருகினாலன்றி நடனக்கலைக்கு மதிப்பு இருக்காதல்லவா? அடுத்த வீட்டுக்காரன், ஐயோ பசி! என்று கதற! பக்கத்து வீட்டுக்காரன் பரதநாட்டியம் பார்ப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது! இதனால் நாட்டின் ஆட்சிகூட செம்மைப்படாதே தலைவரே!

தலை:- உண்மை. சமுதாய மக்களின் வாழ்க்கை சீர்திருத்தம், தொழிற்கல்வி மூலந்தான் ஏற்படுமே தவிர, வேறுவழியில் ஏற்பட முடியாது.

கலை:- இவ்விதம் உலக மக்களின் மனம் மாறினால்தான் நாடு சேமமாக வாழமுடியும். யுத்த பயம் ஒழியும். கட்சிக் கூட்டங்கள் குறையும் ஏதோ தெரிந்ததை சொன்னதற்காக நடனக்கலையையும் கொன்றுவிடாதீர்கள்.

தலை:- சந்தோஷம். உங்கள் வசதியை கண்காணிக்கும்படி சேவகிகளுக்கு சொல்லிவருகிறேன்.

[கலைவாணனும், பார்வதியும் அவரை வணங்கி அனுப்புகின்றனர்.]

## காட்சி 4

[இடம்: குமாரமங்கலம் வீடு. ஸ்ரீ ராமர் விக்ரகம் முன் நின்று கண்ணீர்விட்டு வணங்கிக்கொண்டு நிற்கிருள் கல்யாணி அம்மாள்].

கல்யாணி:- தேவா நீதான் என் கண்மணிக்கு பக்கபலமாக இருக்கவேண்டும்.

(குமாரமங்கலம் குறுக்கிட்டு)

குமார.- இருப்பார்! இருப்பார்!! ஸ்ரீமன் ராமரைக்கூட அலட்சியம் செய்யும் அவனுக்கா அவர் பக்கபலமாக இருக்கப் போகிருர்.

கல்யாணி:- போகட்டும். இனிமேலாவது அவனை ஆதரிக்கப் பாருங்கள்.

குமார:- நானென்ன பிள்ளைகளே பெறாத மலடனா?

கல்:- அதைப்போல்தான் நடந்திருக்கிறீர்கள்.

குமார:- சரி, நான் நடந்ததுதான் பிசகு. ஆனால் அவன் நடந்ததையோசித்துப்பார்.

கல்:- என்ன இருந்தாலும் குடும்பத்திற்கு இளைய மகனல்லவா?

குமார:- அதற்காக அவன் செய்வதற்கெல்லாம் இடம் கொடுப்பதா!

கல்:- போனது போகட்டும். இப்போதாவது எங்கே இருக்கிறானென்று விசாரித்துப் பாருங்கள்.

குமார:- எங்கே போவான். லாடம் தேய்ந்தக் குதிரை லாயத்திற்கு வந்துதானே தீரவேண்டும் கல்யாணி.

கல்:- மனங்கோணிப்போன அவனுக்கு இனமென்றே பற்றுதலே இருக்காதே.

குமார:- சூழ்நிலை அந்தப் பற்றுதலை உண்டாக்கிவிடும். கவலைப்படாதே.

கல்:- இளைத்து, அலைந்து, களைத்தா நாம் அவனைப் பார்க்க வேண்டும்.

குமார:- சண்டிக்குதிரை அப்படிக்கொஞ்சம் நொண்டித்தான் பார்க்கட்டுமே!

கல்:- எனக்காகவாவது இரக்கம் காட்டுங்கள்.

குமார:- மூத்தவனிருக்கும்போது கொள்ளிவைக்க ஆள் இல்லையே, என்று நீ ஏன் கவலைப்படுகிறாய்!

கல்:- என் குணச்செல்வத்தையா இப்படிப் பேசுகிறீர்கள்.

குமார:- ஆமாம் செல்வம் என்பதற்காக அதில் தேனைத்தடவி ருசிபார்த்துக்கொண்டிரு

கல்:- நீங்கள் பார்க்காவிட்டால் நானே போய் பார்த்து வருகிறேன்.

[கல்யாணி அம்மாள் அறையைவிட்டு கோபத்தோடு வெளியே வருகிருள். சோமநாதன் தாயைக் கண்டு பயந்தவனுக ஒதுங்கி, வெளி வாராந்தாவிற்கு வருகிருன். அங்கே அவன் நண்பன் ஜெயராமன் வந்து சோமநாதன் காதில் எதையோசொல்லி ஆச்சரியத்தோடு சோமநாதன் முகத்தைப் பார்க்கிருன். சோமநாதன் சற்று யோசித்து]

சோமநாதன்:- அப்படியா? ஒன்று சொல்லுகிறேன் கேள்.

(சோமநாதன் ஜெயராமன் காதோடு ஏதோ பேசுகிருன். சற்றுக்கழித்து)

ஜெய:- ஆம் ஆம். அதுவும் நல்ல யோசனை தான்.

சோம:- பிறகு நம் காரியம் எவ்வளவு சுலபமாக முடிகிறது பார்.

ஜெய:- பிரமாதமென்ன! இப்போதே முடித்துவிடுகிறேன்.

சோம:- சரி. காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருங்கள்.

[ஜெயராமன் போகிருன். சோமநாதன் தன் இடது உள்ளங்கை மீது வலது புறங்கையால் தட்டிககொண்டே வீட்டிற்குள் நுழைகிருன்.]

## காட்சி 5.

[இடம் நாட்டிய மண்டலியைச்சேர்ந்த ஒரு இடம். மண்டலித் தலைவர் ஒரு ஆசனத்திலமர்ந்து குழந்தைகளுக்கு தான் சொல்லிக்கொடுத்த அபிநயங்களை பதம் தவருது ஆடும் பயிற்சியை பார்த்துக்கொண்டிருக்கிருர். குழந்தைகள் வட்டமாக நின்று பலராக நடனங்கள் ஆடி தலைவரை மகிழ்விக்கின்றனர். பார்வதியும் தலைவரருகே ஒரு ஆசனத்தி

லமர்ந்து இவற்றைக் கவனித்துக்கொண்டே புன்ன கையோடு இருக்கிறாள். ஆட்டமுடிந்து தலைவர் பார்வதியிடம்]

தலை:- எப்படி இருந்தது பார்வதி?

பார்வதி:- ஆஹா, அபூர்வமான கலை.

தலை:- கலைகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது இந்தக்கலைதான்.

பார்:- உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்துவிட்டது.

தலை:- உள்ளத்தைமட்டுமென்ன! உலகத்தைக்கூட கவர்ந்து விடும் சக்தி நடனகலைக்கு உண்டு குறிப்பாக நம் தேசத்து உதய சங்கரைப்பற்றிக் கேட்டிருப்பாயோ என்னவோ?

பார்:- ஆமாம். சர்வதேச நடனக்கலைஞர் என்று கலைவாணர் சொல்லுவார்.

தலை:- உலகிலுள்ள ஜனத்தலைவர்களெல்லாம் அவர் மேதையை ஒருங்கே போற்றும்போது நடனக்கலையின் சிறப்பை என்ன வென்றுச் சொல்வது பார்வதி.

பார்வதி:- எனக்குக்கூட இதைப்படிக்க ஆசையாகத்தானிருக் கிறது.

தலைவர்:- வெற்றிக்கும், புகழுக்கும் ஆசைதான் முதல் வித்து.

பார்:- சந்தர்ப்பமிருந்தால் தலைவரிடம் சொல்லி நடனத்தைக் கூட நீ பயின்று கொள், என்று கலைவாணரே என்னிடம் சொல்லியிருக்கிறார்.

தலை:- விரும்பிப் படிக்க முற்படும்போது வேண்டாமென்று யார்தான் சொல்லுவார்கள்.

பார்:- இன்றே குருசிக்ஷை பெற்றுவிடலாமென்று ஆசைப்படு கிறேன்.

தலை:- இன்று என்ன இப்பொழுதே ஆரம்பித்துவிடுவோம்.

[பார்வதி ஆசனத்தைவிட்டெழுந்து தலைவரை குரு என்ற பாந்தவ்யத்தில் வணங்கி நிற்கிறாள்.

அவள் முன் ஒரு படம் திரையிட்டு மறைத்துக் கிடக்கிறது. திரையை ஒருபிரம்பால் நீக்குகிருர் தலைவர். படத்தில் ஒரு வட்டவடிவமான பளிங்கு கல்மீது தன் இரு கால்களையும் ஒன்ருகச் சேர்த்து நேர் முகமாக வணங்கி நிற்கிருள் ஒரு பெண். அது ஒரு சிலை. அதை தலைவர் சுட்டிக்காட்டி]

தலை:- முதலில் இதைப்போல் குரு வணக்கம் செய்ய வேண்டும். எங்கே!

[பார்வதி தன் கால்களை படத்திலுள்ளதைப் போல் ஒழுங்குப் படுத்தி — நெற்றி வணக்கம் செய்து நிற்கிருள். அப்போது பார்வதி, ஓவியமும், காவியமும். கண்டறியாத அழகோடு மிளிர்கிருள். அதைக்கண்டு.]

தலை:- ஆஹா....

[பின்னணிக் கீதம்முழங்க தலைவர் அபிநயத்தோடு பதம்பிரித்து கீழேவரும் பாடலை பாடுகிருர்]

சாட்சாத் சாஸ்வதியோ — உன்னுருவம்
சரச கால மதியோ!

பொன்னும் மணியும் கொண்டு
போர்வை யொன்று சமைத்து
உன்னைப் போர்த்தினுலும
உன்னழகு ஒளிருதம்மா! — சாட்சாத்

கண்ணும் கூசுதம்மா! கதிரொளி நாணுதம்மா!
கார்முகில் கலையுதம்மா! கண்ணொளியைக் கண்டு—உந்தன்
வண்ண உடல் கொடியும் வளைவதைக்காண!
வையமும் சுழனுதம்மா! வண்ணரசி உன்னுருவம்—
சாட்சாத்

[தலைவர் இவ்விதம் சொல்லிக்கொடுக்க—அதைப்பார்த்து பார்வதி பாவம் தவறாது ஆட — அதைக்கண்டு மண்டலி மாணவிகள் ஆச்சரியப்பட — பயிற்சி முடிந்து ]

தலை:- ஏற்கனவே நடனக் கலையை பயின்றிருப்பவள்போல் ஆடிவிட்டாயே!

பார்:- கருத்து இருந்தால் எதுதான் வராது.

தலை:- அந்த நம்பிக்கை ஒன்றே உன்னை ஆளாக்கும். ரொம்ப சீக்கிரத்தில் இந்த மண்டலிக்கு நீயே தலைவியாகவும் கூடும்.

பார்:- உங்கள் அன்புக்கு ரொம்பவும் நன்றி.

தலை:- பரமசந்தோசம், பரதசாத்திரத்தைப் படித்துப் புகழை சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையால், கலைவாணனுக்குப் பணிவிடை செய்வதில் அசிரத்தைக் காட்டிவிடாதே பார்வதி போ உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

[பார்வதி வணங்கிப் போகிறாள். ஒரு பெண் விரைந்து வந்து தலைவரிடம் ]

பெண்:- யாரோ இரண்டுபேர் வந்திருக்கிறார்கள்.

[தலைவர் அப்பெண்ணோடு வருகிறார் அதிதி அறையில் இரண்டுபேர் இருப்பதைக் கண்டு ]

தலை:- வாருங்கள்.

[தலைவர் அவர்கள் முன் ஒரு ஆசனத்தில் அமர்கிறார். வந்தவரில் ஒருவன் ]

ஒருவன்:- தாங்கள்தானே மண்டலித்தலைவர்?

தலை:- ஆம். தாங்கள் யார்?

ஒருவன்:- நாங்கள் ஒரு சினிமா ஸ்டுடியோ முதலாளிகள்.

தலை:- ஸ்டுடியோ பெயர் என்னவோ?

ஒருவன்:- "பிரபாகர்" என்பது அதன் பெயர்.

மற்றவன்:- (குறுக்கிட்டு) ஆனால் புதிதாகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவன்:- தங்கள் ஒத்தாசையோடு ஒரு புதுப்படம் தயாரிக்கலாமென்று திட்டமிட்டிருக்கிறோம்.

தலைவர் :- சந்தோசம். அதற்கான ஒத்துழைப்பை மனமுவந்து தருகிறேன்.

ஒருவன்:- முதலாவதாக அப்படத்திற்கு சில நடனப் பெண்கள் தேவை. அதற்காகவே தங்களிடம்...,

தலைவர்:- அதற்கென்ன...,

ஒருவன்:- தொகையைப்பற்றி யோசனை வேண்டாம்.

தலைவர்:- அதென்ன பிரமாதம் முதலில் எங்கள் மண்டலிப் பெண்கள் திருப்திதானா, என்பதைப் பாருங்கள்.

[தலைவர் அவர்களிருவரையும் கூட்டிப்போகிறார். பார்வதி இருக்கும் அறைக்குட் சென்று]

தலைவர்:- இவள்தான் எங்கள் மண்டலியின் பிரதம நடிகை.

[இருவரும் தலைவருக்குத் தெரியாது பார்வதியைப்பார்த்து தங்களுக்குள் பின்புறமாக கைகளைக் கிள்ளி சைகை செய்துக்கொள்கின்றனர்.]

ஒருவன்:- இதர விஷயங்களை அங்கேபோய் பார்த்துக்கொள்ளலாம்.

தலை:- ஆஹா..,

(தலைவர் பார்வதியிடம்)

தலை:- பார்வதி இவர்கள் ஒரு ஸ்டுடியோ முதலாளிகள். மண்டலியைப் பார்த்துவிட்டுப்போக வந்திருக்கிறார்கள்.

பார்:- சந்தோசம்.

[வந்திருந்தவர்களில் ஒருவன், தன்னிடமிருந்த ஒரு தோல் பையிலிருந்து தாளொன்றை எடுத்து அதை பார்வதி முன் அவசரமாக நீட்டி]

ஒருவன்:- இந்த "ஆட்டோ கிராபியில்" உங்கள் கையொப்பம் வையுங்கள்.

[பார்வதி அதில் தன் கையொப்பத்தை போட்டுக் கொடுக்கிறாள். அதை வாங்கியதும் மற்றவன் தலைவரிடம்.]

மற்றவன்:- தங்கள் மண்டலி இசைக்கருவிகளெல்லாம் பார்க்க முடியுமல்லவா?

தலை:- நன்றாய் பார்க்கலாமே!

[தலைவர் தன் கையிலுள்ள வெள்ளிப் பிரம்பால் ஒரு அறையின் திரையை நீக்குகிறார். அங்கே பல இசைக் கருவிகள் இருப்பதைக் கண்டு அவற்றை நிதானமாகப் பார்க்கிறான் ஒருவன். இதே சமயம் மற்றவன், பார்வதியிடம் கையொப்பம் வாங்கிய தாளில் எதையோ அவசரமாக எழுதிக் கொண்டும், அங்குமிங்கும் பார்த்துக் கொஞ்சம் பயந்துக்கொண்டும் கடிதத்தை எழுதி முடிக்கிறான். பிறகு நிதானமாக தான் எழுதியக்கடிதத்தை, பார்வதியிருக்கும் அறையினருகே ஒரு மேசைமீதிருந்த ஒரு புத்தகத்திற்குள் வைத்துவிட்டு, தானும் இசைக் கருவிகளைப் பார்ப்பதைப்போன்று பாசாங்கு செய்து மற்றவனை தன் கையால் கிள்ளுகிறான். மற்றவன் தலைவரிடம்]

ஒருவன்:- நாங்கள் போய் தபால் எழுதுகிறோம்.

தலைவர்:- நல்லது

மற்றவன்:- நாங்கள் வருகிறோம். சிரமத்திற்கு......,

தலைவர்:- அதற்கென்ன! வாருங்கள் போகலாம்.

(எல்லோரும் போகின்றனர்)

## காட்சி 6.

[இடம் பார்வதி அறை. ஒரு வீணையை வைத்துக்கொண்டு கீழே வரும் பாடலை பாடிக்கொண்டிருக்கிறாள்.]

முழுமதி முகத்தினன் — முல்லைச் சிரிப்பினன் மோகன
விழியோனைக் கண்டுவிட்டேன்.

[இதேசமயம் வெளியே சென்றுவரும் கலைவாணன் பார்வதியின் பாட்டைக் கேட்டு ஆச்சரியத்தோடு ஸ்தம்பித்து நிற்கிறான். பார்வதி இவனைக் கவனியாது மீண்டும் சுருதியை மீட்டி]

உள்ளத்தில் அவனுரு ஓவியமாகுதே!
கள்ளத்தனமாக கனவிலும் தோணுதே!
தெள்ளமுத ஊற்றில் திளைத்த நற்பூவைப்போல்
சிந்தையில் திளைத்த — என் முழுமதி —

[பார்வதி சுருதியை மீட்டி ராகம் இழுத்துக்கொண்டிருக்கும்போதே — கலைவாணன்]

கலை: ஆஹா! ஐம்புலன்கூட அறிவிழந்துவிட்டது பார்வதி!

[பார்வதி அவசரமாக வீணையை கீழே வைத்துவிட்டு எழுந்துவந்து]

பார்:- ஏது இவ்வளவு நாழிகை?

கலை:- கௌரவமாகவும், சுதந்தரமாகவும் இருப்பதற்கான நல்லவேலை கிடைக்குமா என்று நகரமுழுவதும் அலைந்தேன். வேலையும் கிடைக்கவில்லை.

பார்:- அலைந்து மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே! உட்காருங்கள். காப்பி கொண்டுவருகிறேன்.

[கலைவாணன் கவலையோடு உட்காருகிறான். பார்வதி காப்பிக் கொண்டுவரப்போகிறாள். மெதுவாக மேசைமீதிருந்த புத்தகத்தை எடுத்து லேசாக வாய்விட்டு வாசிக்கிறான். அது நாட்டில் பிரபல எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதை தொகுதி ]

"கமலி பதினெட்டு வயது நிறையப்பெற்ற பண்புடையவளாகக் காணப்பட்டாள். அழகும், கவர்ச்சியும் ஒருங்கே

நிறைந்த அவளை எப்படியோ தன் காதலியாக்கிக்கொண்டான் கண்ணன். இதனால் தன் உள்ளத்தை ஒரு தாமரைக்குளமாக வும், கமலியை அக்குளத்தின் தாமரைப்பூவாகவும் கண்ணன் கருதிவந்த நாளிலே — காதலர் வாழ்க்கைநிலத்தில் எதிர் பாராத வறுமைக்கோடு ஆழமாகப் பதிந்துவிட — கமலி கண்ணனை வெறுத்து தன் கண்களுக்கு ஆடம்பரமாகத்தெரிந்து வந்த இன்னொரு வாலிபனோடு எங்கோ போய்விட்டாள், என்று கண்ணன் அறிந்ததும்...... ,

[வாசகம் முடிந்து புத்தகத்தின் மறு பக்கத்தை கலைவாணன் புறட்டும்போது - பார்வதி தன் கையில் காப்பி வட்டலோடு வந்து சிரிக்கிறாள். கலைவாணன் சோர்வோடு அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண் டும் புறட்டிய பக்கத்தைப் பார்க்கிறான். அதனுள் ளிருந்த ஒரு கடிதம் அவன் கண்களுக்குப் படவே அதை விரித்து மௌனமாக வாசிக்கிறான். வாசித் துக்கொண்டு வரும்போதே அவன் புருவங்கள் நெழிகிறது. முகம் மாறுதலடைகிறது. கண்கள் விரிந்து பெரிதாகுகிறது நெற்றியில் சுருக்குவிழ கைகள பதர - உதடுகள் துடிக்க]

இப்படிக்கு,

பாரவதி என்ற

(சொற்களை மட்டும் வாய்விட்டுச் சொல்லிவிட்டு. கடிதத்தைக் கசக்கி எறிந்து கோபத்தோடு)

கலை:- துரோகி! வாழ்வதற்கு வந்த இடத்திலா என்னை வஞ்சித்துவிட்டாய்!

[நிரபராதியான பார்வதி புன்னகையோடு காப்பி வட்டலை கையில் வைத்துக்கொண்டு]

பார்வதி:- என்ன இது?

கலை:- சீ வஞ்சகி! சூது அறியாத என்னிடமா உன் சூழ்ச்சியைக் காட்டிவிட்டாய்!

(பார்வதி கையிலிருந்த வட்டிலைப் பிடுங்கி தரையில் எறிகிறான்.)

பார்வதி:- ஏன் இந்தக் கோபம்!

கலை:- உலகம் ஏமாந்ததாக எண்ணிவிடாதே!

பார்வதி:- என்னைப் பார்த்தா சொல்லுகிறீர்கள்?

கலை:- பார்வதி! என்னையா பைத்யக்காரனுக்குகிறாய்! உன் வாழ்விலும் தாழ்விலும் உன்னை சுவைத்துக் கள் வெறி கொண்ட உன் அதரங்களை ஒருஅன்னியன் சுவைக்கவா இடங்கொடுத்தாய்? கள்ளி! வாழ்க்கையையே நாடகமாகப் பார்க்கிறாயே! என்ன சாகசம் உனக்கு!

பார்வதி:- (திடுக்கிட்டு) என்ன! நானு சாகசக்காரி?

கலை:- பார் அக்கடிதத்தை! சூதும் வாதும் நிறைந்த உன் கண்களால் பார்! உலகமே உன் புனித உடலில் எத்தனை விதபாபிகள் வாழ்கிறார்கள். எனக்காக வாழ்ந்து எனக்காகவே மடிகிறேனென்று சொன்ன இந்த வஞ்சகியைப் பார்! பார்வதி நீயும் இந்த உலகத்தைப்பார்! ஏ ஆடம்பரமே! நல்லவனை நட்டாற்றில்விட்ட உன் நாயகியைப்பார்! பார்வதி உன் ஆடம்பர நாயகனுக்கு நீ எழுதிய கடிதத்தை பார்த்தாயா? பார். பார்த்துவிட்டேனென்று பதறுகிறாயா? பதறாதே! பயப்படாதே! (கடிதத்தை சுட்டிக் காட்டி) பார் அக்கடிதத்தை.

(கலைவாணன் கடகடவென்று சிரிக்கிறான் மீண்டும்)

கலை:- பார்வதி! உன் உல்லாச வாழ்க்கை ஒரு பணக்காரனோடு புறமுட்டும் நான் வருகிறேன்,

[கலைவாணன் கோட்டிக்காரனைப்போல் கடகடவென்று சிரித்துக்கொண்டு வெளியேறுகிறான். பார்வதி அவன் மேல்உடையைப்பிடித்து]

பார்:- எங்கே போகிறீர்கள்?

கலை:- தொடாதே பாபி நீ!

[கலைவாணன் பார்வதி பிடித்திருந்த பாகத்தைக் கிழித்துவிட்டு வேகமாக வெளியேறுகிறான். பார்வதி கண்ணீர்வடிய அவனையே கூர்ந்துபார்த்துவிட்டு கட்டிலில் விழுந்து அழுகிறாள். சற்றுக் கழித்துகொஞ்சம் நிதானமாககீழே கசக்கிக்கிடக்கும் கடிதத்தை எடுத்துப் பார்க்கிறாள். அவள் கண்கள் விரிந்து, புருவங்கள் விம்மி, முகத்தில் கோபக்குறிக் காண — வேகமாக நடக்கிறாள். பல அறைகளைத் தாண்டிவந்து அமைதியாக உட்கார்ந்திருக்கும் தலைவர்முன் பேயைப்போல் சென்று.]

பார்:- பிராணப்ரியரே!

[தலைவர் இச்சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்த்து ஆச்சரியத்தோடு]

தலை:- பார்வதி என்ன இது? ஏதாவது.......;

பார்:- ஆம். முதலில் இக்கடிதத்தைப் பாருங்கள்.

(தலைவர் அக்கடிதத்தை பார்த்து)

தலை:- என்ன விபரீதமிது! பார்வதி இதைக் கலைவாணன் பார்த்துவிட்டானா?

பார்வதி:- ஆம். நான் தங்களோடு நட்புக்கொண்டுவிட்டேன் என்பதாக இக்கடிதமூலம் நம்பிக்கைகொண்டு எங்கோ போய்விட்டார்.

தலை:- (திடுக்கிட்டு எழுந்து) உண்மையாகவா?

பார்வதி:- ஆம். அன்று வந்தவர்கள் எங்களைத் தொலைப்பதற்காக இருக்கும் சதிகாரர்களென்று இப்போதுதான் தெரிய வருகிறது.

தலை:- இருக்கலாம். அன்று உன் கையொப்பத்தை வாங்கும் போதே நான் சந்தேகித்தேன்.

பார்வதி:- சண்டாளர்கள்.

தலை:- வையாதே. அவர்கள் மனமே அவர்களைச்சுடும். கலைவாணன் போகுமிடத்தையாவது உன்னிடம் சொல்லவில்லையா?

பார்வதி:- இல்லை.

தலை:- கவலைப்படாதே. அவனைத் தேடிப் பிடிப்பது என் கடமை. நீ போ.

(பார்வதி போகிறாள்.)

# அங்கம் 5

## காட்சி 1

[இடம்: குமாரமங்கலம் வீடு. சோமநாதனும், அவன் நண்பர்களும் குசாலாகப் பேசிக்கொண்டிருக் கிறார்கள்.]

சோம:- பிறகு..?

ஜெய:- பிறகென்ன! காரியம் யாவும் வெற்றிதான்.

சோம:- அக்கடிதத்தை எதில் வைத்துவிட்டு வந்தாய்?

ஜெய:- ஒரு கதை புத்தகத்தில்

சோம:- இதற்குள் பார்த்திருப்பானா கலிவாணன்?

ஜெய:- பார்த்திருக்கலாமென்றுதான் நினைக்கிறேன்.

சோம:- அப்படியானால் போராட்டம் இதற்குள் ஆரம்பமாகி இருக்குமே!

ஜெய:- அதுதான் தெரியவில்லை யாரையாவது அனுப்பி மண்டலியில் கேட்டுவரச் செய்வோமா?

சோம:- பொறுத்துச் செய்வோம்.

[இந்தசமயம் ஒரு சிறுவன் சோமநாதனிடம் அன்றைய தினச்செய்தி பேப்பர் ஒன்றைக் கொடுத்து போகிறான். சோமநாதன் அதைப் பார்க்கிறான். அதிலிருந்த ஒரு செய்தியைப் பார்த்து ஆச்சரியத்தோடு ஜெயராமனிடம்]

சோம:- ஜெயராம்! நமது திட்டம் நிறைவேறிவிட்டதுபோலிருக்கிறது.

ஜெய:- அதெப்படி தெரிந்தது சோமு?

சோம:- இதோ! கலிவாணனைக் காணவில்லை, என்றும்; இருக்குமிடம் சொல்பவர்களுக்கு ரூபாய் 20,000 இனாமென்றும் மண்டலித்தலைவர் பத்திரிகையில் அறிவித்திருக்கிறார்

ஜெய:- போராட்டம் நடந்துதான் கலைவாணன் பிரிந்திருக்க வேண்டும்.

சோம:- ஆம் ஆம். விஷயம் அப்படித்தான் நடந்திருக்கும்.

ஜெய:- சோமு...,

சோம:- என்ன ஜெயராம்...?

ஜெய:- நாம் உடனே மதராஸ் போய் மண்டலித் தலைவருக்கு ஒரு தந்திக் கொடுப்போம்.

சோம:- எப்படி?

ஜெய:- கலைவாணன் இன்ன விலாசத்திலிருக்கிறனென்றும் உடனே பணத்தோடு வந்தால் அவனைப் பார்க்கலாமென்றும் குறிப்பிட்டு அனுப்புவோம்.

சோம;- அனுப்பினுல்?

ஜெய:- ஆசாமி பணத்தோடு வருவார் கூட பார்வதியும் வரலாம். உடனே பணத்தைப்பிடுங்கி (மெதுவாக) ஆசாமியையும் குளோஸ் பண்ணிவிடலாம். பிறகு பார்வதி எவ்வளவு சுலபமாக நம் கையில் சிக்கப்போகிறுள் பார்.

சோம- அதுவும் நல்ல யோசனைதான். ஆனுல், கொலை என்பது...,

ஜெய:- யாருக்குத்தெரியப்போகிறது! பயப்படாதே சோமு! எவ்விதமாவது நாம் நினைத்த காரியத்தை சாதிக்கவேண்டாமா? இல்லாவிட்டால் ஒரு அனுதைப் பெண்ணிடம் நமது ஜம்பம் பலிக்கவில்லையே என்று நமது மனம் நம்மையே சுடுமல்லவா?

சோம:- அதுவும் உண்மைதான்...,

ஜெய:- சோமு..., யோசிக்கும் நேரம் இதுவல்ல! இப்பொழுதே நாம் மதராஸுக்குப் புறப்பட வேண்டும். என்னசொல்லுகிறுய்?

சோம:- நீ துணிந்துக் கூப்பிடும்போது மூடியாதென்று எப்படிச் சொல்வது.

ஜெய:- அப்படியானுல் இன்றிரவே புறப்படலாமல்லவா?

சோம:- உன் விருப்பம்.

ஜெய:- பேஷ்! மகா தைரியசாலி நீ. இந்தக் காலத்தில் 20,000 ரூபாய் என்ருல் விளையாட்டா என்ன! உன் தந்தைகூட சுதந்தரமாக செலவுசெய்ய அனுமதிக்க மறுக்கிருர். இந்த நிலமையில் வேலையற்றிருக்கும் நாம், நமது காரியங்களை வேறு வழியில் தானே பார்க்கவேண்டும்.

சோமு:- உன் விருப்பத்தைத்தான் மறுக்கவில்லையே! இன்றே புறப்படுவோம்.

[மூவரும் எழுந்து வீட்டிற்குள் செல்கின்றனர்.]

## காட்சி 2.

[இடம்: நாட்டியமண்டலி. பார்வதி கவலையோடு கண்ணீர் சிந்தி கலைவாணன் படத்திற்கு வணங்கி]

பார்வதி:- கலைவாணு சற்று யோசியுங்கள். மலரிடம் அன்பு காட்டுபவர்கள் அதை ஆய்ந்துதானே பார்ப்பார்கள்! ஏன்! ஈக்கள் மொய்ப்பதும் மதுவைச் சுற்றித்தானே!

"ஆம் பார்வதி. கவலைப்படாதே. அதோ! என் நண்பன் மீது ஆணை. உன்னை எப்படியாவது கல்யாணம் செய்துக்கொள்கிறேன் என்றுச் சொன்ன தாங்களா என்னைவிட்டுப் பிரிவது கண்ணுக்கு மை தீட்டுவதை விட்டு நீ என் கருத்துக்கே மை தீட்டிவிட்டாயே! என்று சொன்ன தாங்களா என்னை மறந்து சென்றீர்கள்? இருக்காது.

அதோ! கார்முகில் கூட்டம். மயிலிறகின் வர்ணச் சிறகடிப்பு. அமைதி நிறைந்த இப்பிரதேசத்தின் பிரேமைகீதம் இரு உள்ளங்களை எப்படி மயக்குகிறது பார்த்தாயா! சமுத்திரத்தின் அலை நம் உள்ளத்தில் எழுகிறதென்ருல் அது காதல் வேகத்தாலல்லவா? ஆம். நமது இன்பக் காவியக் கதையின் ஆனந்த அத்தியாயம் இன்றுதான் ஆரம்பமாகிறது, என்றெல்லாம் புகழ்ந்தீர்களே! அப்பேறப்பட்ட தாங்களா என்னை சந்தேகித்துவிட்டீர்கள்?

மதிமயங்கி உங்கள் மடியில் கிடந்து துவண்டனே, அதெல்லாமா மறந்துவிட்டீர்கள்! இருக்காது. புனிதமான உங்கள் காதலி அப்பேற்பட்டவளல்ல! சத்தியம்! உள்ளும் புறமும் அப்பழுக்கற்ற அணங்கு நான். வேற்று கரங்கள் தொட முடியாத அக்னி மலையே இந்தச் சரீரம்.

[இந்த சமயம் குமாரமங்கலமும் கல்யாணியும் மண்டலித் தலைவரும் அங்கே வருகிறார்கள். பார்வதி நிலைமையைக் கண்டு குமாரமங்கலம்]

**குமாரமங்கலம்:-** பார்வதி...,

(வெறுப்போடு பார்வதி திரும்பிப் பார்த்து)

**பார்வதி:-** வாருங்கள் எஜமான் வாருங்கள்.

(கல்யாணி பார்வதியின் நிலையைக்கண்டு கண்ணீர் வடிக்கிறாள்)

**குமார:-** பார்வதி முதலில் எங்களை மன்னித்துவிடம்மா!

**பார்வதி:-** மன்னிப்பை உங்கள் ஆண்டவனிடம் கேளுங்கள்.

**குமார:-** கோபப்படாதே பார்வதி. நடந்ததை எண்ணி மனதைப் புண்ணாக்கிக்கொள்ளாதே.

**பார்வதி:-** புண்ணில் புரை ஏறிய பிறகா ஆறுதல் சொல்ல வந்தீர்கள்

**குமார:-** (கண்கலங்க) இல்லை கலைவாணன் உன்னையும் விட்டு எங்கோ போய்விட்டானென்பதை கேள்விப்பட்டே இங்கு வந்தேன்.

**பார்வதி:-** வந்ததற்காக நன்றி. நீங்களும் கலைவாணரைத் தேடிப்பார்க்க முயலுங்கள்.

(இந்த சமயம் ஒரு பெண் விரைந்துவந்து தலைவரிடம்)

**பெண்:-** குருஜீ, தங்கள் விலாசத்திற்கு தந்தியொன்று வந்திருக்கிறது.

[மண்டலித்தலைவர் அதை வாங்கி அவசரமாக பார்க்கிறார். அவர் முகம் மலர்கிறது. பார்த்து முடிந்து பார்வதியிடம்]

தலைவர்:- பார்வதி கவலைப்படாதே. கலைவாணன் மதராஸில் இருக்கிறானாம்.

பார்:- (முகமலர்ச்சியோடு) உண்மையாகவா?

தலைவர்:- ஆம். இதோ அவன் நண்பர்கள் தந்தி பண்ணியிருக்கிறார்கள்.

பார்:- ஆஹா .., அவன் கருணையே கருணை

குமார:- இதற்குப் பதில் அனுப்பவேண்டாமா?

தலைவர்:- நாம் உடனே மதராஸ் வருவதாக இப்போதே பதில் அனுப்பப்போகிறேன்.

குமார:- என் காரிலேயே புறப்படலாமே!

தலைவர்:- சரி.

[எல்லோரும் அவ்விடத்தினின்றும் அகல்கின்றனர். மறு கணம் பார்வதி, கல்யாணி, குமாரமங்கலம், மண்டலித் தலைவர் எல்லோரும் காரில் புறப்படுகின்றனர் கார் அநேக மைல் கற்களைத்தாண்டி மதராஸுக்கு விரைகிறது]

[இடம்: மதராஸ். தியாகராயநகர் ரோட்டில், கலைவாணன் இடுப்பில் கந்தல் துணிகளோடு, தாடி முடி வளர — அசங்கிதமான தோற்றத்தில் வந்து போய்க்கொண்டிருக்கும் ஜனங்களை கூர்ந்து கூர்ந்து பார்த்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும் நடந்துக் கொண்டிருக்கிறான். கடைசியாக ஒரு வீட்டுமுன் வந்து பிச்சை வாங்க நிற்கிறான் அவ்வீட்டு முன்வராந்தாவில் ஒரு மர ஸ்டாண்டில் ஒரு கோட் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆட்கள் இல்லாததால் கலைவாணன் நடுக்கத்தோடு - அங்குமிங்கும் பார்த்து

மெதுவாக திண்ணையிலேறி கோட் பைக்குள் கை விட்டுப் பார்க்கிறான். அதில் ஒன்றுமில்லை. அடுத்த பையில் கை விடுகிறான். அதில் ஒரு காலணா இருக்க வேண்டா வெறுப்போடு எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக வெளியே வந்து மறைந்துவிடுகிறான். இந்த சமயம் அதே தியாகராயநகர் ரோட்டில் குமாரமங்கலம் காரும் புழுதிபடிய ஒரு கட்டிடத்திற்கு முன்பு வந்து நிற்கிறது. எல்லோரும் காரை விட்டிறங்கி அந்தக் கட்டிடத்திற்குள் நுழைகின்றனர். சற்று சிரமபரிகாரத்திற்குப்பிறகு குமாரமங்கலத்திடம் தலைவர்]

தலைவர்:- நீங்கள் இங்கேயே இருங்கள். நான் போய் கூட்டி வருகிறேன்.

குமார:- போய்வாருங்கள். ஆனால், கலைவாணன் ரொம்பச் சிறுவன். கோபித்தாலும் பொறுத்துகொள்ளுங்கள்.

தலைவர்:- நடந்தசூழ்ச்சிகளை விளக்கி சமதானமாகவே அவனைக் கூட்டி வருகிறேன்.

குமார.- எல்லாம் அவன் செயல். போய்வாருங்கள்.

(தலைவர் போகிறார்)

## காட்சி 4.

[இடம்: ஒரு வீட்டின் அறை. சோமு, ஜெயராம், அவன் நண்பன் மூவரும் வட்டமாக இருந்து பல வகையான உண்டிகளை சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றனர். சாப்பிடும்போது.]

சோமநாதன்:- ஜெயராம் ஆசாமி வருவதாகக் குறிப்பிட்டிருந்த நாள் இன்றுதான்.

ஜெயராம்:- ஞாபகம் இருக்கிறது சோமநாத். அதோ ஆசாமியைத் தொலைப்பதற்கு.......

[மேசைமீதிருக்கும் ஒரு கத்தியைக் காட்டுகிறான். சோமனும் மற்றவனும் திரும்பிப்பார்த்து]

சோம:- விஷக்கத்தியல்லவா?

ஜெய:- ஆம். பட்டதும் பரலோக யாத்திரை ஆசாமிக்குக் கிட்டிவிடும்.

மற்றநண்பன்:- பாவம்! பணத்தையும் பறிகொடுத்து உயிரையும் பறிகொடுக்கப்போகிறான் அவன்.

சோம:- அவனுக்காக நீ ஏனப்பா அனுதாபப்படுகிறாய்?

ஜெய:- (குறுக்கிட்டு) சோமு ஒருவிஷயம் ஆசாமியைக் கொன்றதும் நேராக பார்வதி இருக்கும் இடத்திற்குதான் நமது விசையை முடுக்கவேண்டும். என்னச்சொல்லுகிறாய்?

சோம:- அதுதானே நமது திட்டம். ஆனால் பார்வதியும் ஆசாமியோடு வந்திருக்கிறாளா, என்பதையும் தெரிந்துக் கொள்ளவேண்டாமா?

ஜெய:- ஆசாமியிடம் கேட்டால் தெரிகிறது.

[இவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போது இவர்கள் வேலைக்கார சிறுவன்வந்து]

சிறுவன்:- தங்களைத்தேடி ஒருவர் வந்திருக்கிறார் ஏதோ நாட்டிய மண்டலித்தலைவராம்.

சோம:- (நிதானமாக) ஓ..., அவரா? அழைத்துவா.

(சிறுவன் போகிறான்)

சோம:- ஜெயராம் ஆசாமிதான் வந்திருக்கிறார். தாடி மீசையெல்லாம் சரியாக வைத்துக்கொள்வோம்.

[எல்லோரும் பொய்தாடி மீசைகளை முகத்தில் குறித்த இடத்தில் வைத்துக்கொண்டு பரபரப்போடு தோன்றுகின்றனர். சிறுவன் தலைவரை அழைத்துவருகிறான்.]

சிறுவன்:- இதோ இவர்தான்.

ஜெயராமன்:- சந்தோசம். நீங்கள்தானே நாட்டியமண்டலித் தலைவர்?

தலைவர்:- ஆம்

ஜெய:- கலைவாணன் உங்கள் சொந்த மனிதரா?

தலை:- ஆம்.

ஜெய:- அவர் தன் மனசாந்திக்காக எங்களோடு பங்குபற்றி இருக்கிறார், பார்க்கவேண்டுமானால்......,

தலை:- பார்க்கமட்டும் வரவில்லை.

ஜெய:- தெரியும். கூட்டிப்போகவும் வந்திருக்கிறீர்களென்று. ஆனால்...., விளம்பரத்தில்....,

தலை:- ஆமாம் இதோ அந்த தொகை

ஜெய:- அவன் காதலி யாரோ ஒருபெண் இருக்கிறாளாமே?

தலை:- ஆம் இருக்கிறாள். அவளும் என்னோடு வந்து தியாகராய நகர் கலாபவனத்தில் தங்கி இருக்கிறாள்

ஜெய:- ரொம்ப நன்றி. (மூன்றும் நண்பனிடம்) மிஷ்டர் இவர்களைக் கூட்டிப்போய் கலைவாணனைக் காட்டுங்கள்.

[மூன்றும் நண்பன் தலைவரைக் கூட்டிக்கொண்டு ஒரு அறைக்குள் நுழைகிறான். சோமநாதன் ஜெயராமனிடம் கண்ணைக்காட்டிவிட்டு பணப்பேக்கை எடுத்து மறைக்கிறான். ஜெயராமன் மேசைமீது ரகசியமாக இருந்த பாஷாணக்கத்தியை எடுத்து தலைவர் பின்புறமாகபோய் வலது விலாபுரத்தில் குத்தி விடுகிறான். தலைவர் ஹா..., அம்மா..., என்ற சப்தத்தோடு கீழே விழுகிறார். மூவரும் தலைவர் கழுத்தை நெறித்து பிரேதத்தை தூக்கி ஒரு புரம்போக்கில் போட்டுவிட்டு பணப் பேக்கோடு ஓடிவிடுகின்றனர்]

## காட்சி-5

[இடம்:- அதே புரம்போக்கானத் தெரு கலை வாணன் அழுக்கும் கந்தையுமான துணியை உடுத்தி ஆபாசமான தோற்றத்தில் அங்கே வருகிறான். வரும்போது கீழேகிடந்த ஒரு பொருளைக் கண் டெடுத்து அதை மேலும் கீழுமாகப் பார்க்கிறான். அது இரு குண்டூசிகள், ஒருதாளில் குத்தப்பட்டிருக் கிறது. பத்திரமாக தன் சட்டப்பையில் அதைக் குத்திக்கொண்டு கீழேவரும் பாடலை பாடிக்கொண்டு நடக்கிறான்.]

*கலைவாணன் பாடல்:—*

*பணத்தை விரும்பாதே மனமே! அதை*
*பார்த்து மயங்காதே இனிமே!! பணத்தை*
*பெண்ணையும் ஆணையும் பிரிக்கும்—பெற்ற*
*பிள்ளைக்கும் தந்தைக்கும் பேயாக மாறும்*
*கண்ணையும் கருத்தையும் மறைக்கும்—பின்*
*காலத்தைக்கூட தூ,வென மதிக்கும்—பணத்தை*

*[இவ்விதம் பாடி பிச்சைஎடுத்து வரும்போது புரம்போக் கில்கிடக்கும் அப்பிரேதத்தைக்கண்டு திடுக்கிட்டு நிற்கிறான். சுற்றுமுற்றும் பார்த்து அப்பிரேதத்தை மெதுவாகத் தொடு கிறான். பிரேதத்தில் இரத்தக்கறையும், பக்கத்தில் கத்தியும் கிடப்பதைக்கண்டு ஆச்சரியத்தோடு கத்தியை தன் கையில் எடுத்துப் பார்க்கிறான். அது இரத்தக்கறையோடு பளபள வென்று மின்னுகிறது. கூர்ந்து பார்க்கிறான். அவன் கையிலும் இரத்தக்கறை வியர்வைநீரோடு லேசாகப்படிகிறது. கண்கள் வெறித்துப்பார்க்க கத்தியை தரையில் எறிந்து]*

**கலைவாணன்:-** உலகமே! நீ விழித்துக்கொண்டிருக்கும்போதா இந்த பயங்கரம் நடக்கவேண்டும். நல்லோரைக் காப்பாற்ற

ஒருவன் இருக்கிறனென்றுச் சொல்லும் அந்த கடவுள், இந்த நயவஞ்சகத்தைத் தடுத்திருக்கக்கூடாதா? உலகமே உன் மேனியில் உருண்டுபுரண்டு சந்தோசமாக வாழ்ந்த வர்கள் உனக்குத்தெரியாமலா குத்துப்பட்டு சாக வேண்டும்! ஐயோபாவம்! யாரோ இவர்.

[கலைவாணன் இவ்விதம் புலம்பிக்கொண்டு நிற்கும்போது, அங்கே வந்த போலீஸார்கள் இதைக்கண்டுவிடுகின்றனர். உடனே ஓடிவந்து கலைவாணனை கைதுசெய்து பிரேதத்தை சுற்றுமுற்றும் பார்த்து கத்தியை எடுக்கின்றனர். ஒரு போலீஸ் காரர் கலைவாணனை வெறித்துப்பார்த்து.]

**போலீஸ் சேவகர்:-** பிச்சைக்கார கழுதை. திருடிவிட்டு ஆளை யுமா கொன்றுவிட்டாய்.

**கலைவாணன்:-** ஐயா நான் பிச்சைக்காரன். எனக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமில்லை

**போலீஸ்:-** கண்ணால்கண்டதையா மறைக்கப்பார்க்கிறாய் நட.

[கலைவாணனை இழுத்துக்கொண்டுப் போகின்றனர்]

# அங்கம்—6

## காட்சி-1

[இடம்: நீதிமன்றம். நீதிபதி ஆசனத்தில் அமர்ந்திருக்க, அவர் முன் — சர்க்கார் நியமித்திருக்கும் வாதி — பிரதிவாதி வக்கீலும் இருக்கின்றனர். கலைவாணன் கவலையோடு கூண்டில் நின்று நீதிபதியை பார்த்துக்கொண்டு நிற்கிறான்.]

**வாதி வக்கீல்:-** கனம் நீதிபதிஅவர்களே! எதிரி சோகம் நிறைந்த அப்பாவியாகத் தோன்றினும், திரைக்குப்பின் இவன் வாழ்க்கை எப்படி என்பதை அறியவேண்டும். நகர் புரம்போக்கில் குத்தப்பட்டுக்கிடந்த பிரேதத்தினருகே இவன் ஒரு கொலைக்காரனைப்போல் நின்றுக்கொண்டிருந்ததையும் போலீஸார் நேரில் பார்த்திருக்கின்றனர்.

**நீதிபதி:-** எதிரியைக் கைதுசெய்யும்போது பிரேதத்தில் இரத்தம் காய்ந்திருந்ததா?

**வாதி வக்கீல்:-** இல்லை. எதிரியின் கையினும் இரத்தக்கறை படிந்திருந்தது.

**நீதிபதி:-** சரி.

**வாதி வக்கீல்:-** மேலும் இறந்தவரின் கோட்டையிலிருந்து ஒரு தந்தியும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கலைவாணன் என்பவன் இங்கே இருக்கிறனென்றும், ரூபாய் 20,000 த்தோடு வந்தால் கலைவாணனைப் பார்க்கலாமென்றும் தந்தியில் வாசகமிருக்கிறது. ஆகவே கலைவாணன் என்பவன் யாரென்றே நமக்குத் தெரியவில்லை.

(கலைவாணன் கூண்டில் நின்றவாரே நடுக்கத்தோடு)

**கலைவாணன்:-** என் பெயர்தான் கலைவாணன்.

[போலீஸார் அவனைப் பயங்காட்டி" சப்தம்செய்யாதே, என்று சைகை காட்டுகின்றனர்.]

**வாதிவக்கீல்:-** மேலும் கலைவாணன் இங்கே இருக்கிறானென்று தந்திக்கொடுத்தவனும் யாரென்றுத் தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான் இவன் பிரேதத்தினருகே நின்றுக் கொண்டிருந்திருக்கிறான். ஒருவேளை பிச்சைக்காரக் கோலத்தில் இருந்தால், கொலை செய்துவிட்டு தப்பிவிடலா மென்ற எண்ணத்தோடு இவன் இக்கோலம் கொண்டிருப்பானோ என்னவோ! மர்மம் இன்னதென்றும் தெரியவில்லை. ஆகவே எதிரியின் வக்கீல் இவனை ஒரு பிச்சைக்காரனென்று வாதாடி விடுவிக்க முயற்சிப்பாராகில் அது ஜனசமுகத் திற்கே ஆபத்தாகமுடியும். இன்னும் நகரில் கொலை பெருகும். நீதிபதியவர்கள் இதை தீர விசாரித்து இவனை தண்டிக்கும்படி வேண்டுகிறேன்.

[நீதிபதி, சர்க்கார் நியமித்திருக்கும் கலைவாணன் வக்கீலைப் பார்த்து.]

**நீதிபதி:-** நீங்கள் ஏதாவது சொல்வதாயிருந்தால் கோர்ட்டுக்கு சௌகர்யமாயிருக்கும்.

**கலைவாணன் வக்கீல்:-** கனம் நீதிபதி அவர்களே! இதுவரை என் சக வக்கீலின் வாதத்தை அமைதியுடன் கேட்டுக் கொண்டுவந்த எனக்கு ஒரு நிரபராதியின் உடல் தூக்கு மேடையில் தொங்குவதைக்கண்டு மனமகிழும், ஒரு கல் நெஞ்சக்காரனின் கதையே ஞாபகம் வருகிறது.

**வாதிவக்கீல்:-** கருணையும் நியாயமுமில்லாத இடத்தில் இதை வைத்துக்கொள்ளும்.

**நீதிபதி:-** விஷயம் நிறைந்த விவாதத்தில் வீண்சர்ச்சை வேண்டாம்.

**கலை-வக்:-** நியாயம்நிறைந்த நண்பரே உமது பரந்தக் கண்களால் இந்த அபாக்யனை ஏறிட்டுப்பாரும் குழிவிழுந்தக்கண்கள் ஒட்டியக் கன்னங்கள்—பம்பை பரட்டையான முடி அருசை நிறைந்த தோற்றம்-நாற்றமடிக்குமகந்தப்புடவை நடைமெலிந்த பரிதாபம் - குப்பிக்கு சோறுகிடைத்து

எத்தனையோ நாளானதால் குழைந்துவிழும் அவன் உடல்; இவ்வளவுங்கொண்ட இவனு ஒரு மனிதரை துணிந்துக் கொலைசெய்வான்?!

**வாதிவக்கீல்:-** பிச்சைக்காரன் என்பதற்காக கொலைசெய்ய மாட்டானென்று எப்படி நம்புவது?

**கலை-வக்:-** குத்திக்கொன்ற பாஷாணக்கத்தி புதிதாக இருப்பதால் அதை விலைகொடுத்துவாங்க இப்பிச்சைக்காரனுக்கு வழியேது?

**வாதிவக்கீல்:-** இக்கொலையை செய்து தப்புவதற்காக இவன் ஒரு பிச்சைக்காரனாக நடித்திருந்தாலோ?

**கலை-வக்:-** பொருளிருந்தால் இவன் ஒரு பிச்சைக்காரனாக நடித்திருக்கவேண்டாமே! வேறு ஆட்களைவைத்தே இவன் அன்னாரைக் கொன்றிருக்கலாம். அதைவிடுத்து பிச்சைக்காரனாக நடித்து அவரைக் கொல்வதென்றால் அதில் ஒரு வித அர்த்தமுமில்லையே!

**வாதிவக்:-** ஏன் இல்லை! ஒருக்கால் இவன் பிச்சைக்காரனாகவே இருந்து, வழியில் வந்துகொண்டிருந்த அவரிடம ஏதோ பொருளிருப்பதாகவும் எண்ணி, அப்பொருளைக் கையாடுவதற்காக திருட்டுப்புத்தியில் அவரைக் கொன்றிருக்கலாம்

**கலை-வக்:-** அப்படியானாலும் இப்புது பாஷாணக்கத்தி இவனிடம் எப்படி இருந்திருக்கமுடியும்? நண்பரே நன்றாக யோசித்துப்பாருங்கள். இக்கொலை ஒரு புது பாஷாணக் கத்தியைக்கொண்டு செய்திருப்பதால், இது திட்டமிட்டுச் செய்த ஒரு கொலையாகவே படுகிறது. மேலும் இறந்தவர் நாட்டியமண்டலித்தலைவர் என்றும் தெரிகிறது. அவரை மதராஸுக்கு வரும்படி, யாரோ அனுப்பிய மொட்டை தந்தியொன்றும் அவரிடமிருந்து கைபற்றப்பட்டிருக்கிறது. இத்தகைய முகாந்தரங்களெல்லாம் இருந்தும், இந்த அப்பாவியை கொலைக்காரனென்று நண்பர் வாதாடுவது தான் உண்மையிலேயே எனக்குப் பரிதாபமாகயிருக்கிறது

அதோடு என் நண்பர் இந்த அனுதை பேர்வழியை கொலை குற்றவாளியென்று வாதாடுவதானது, கோர்ட்டாரிட மிருந்து நல்ல பெயர் வாங்குவதற்காகவே. அதைக்கேட்டு கோர்டார் இவனைத் தண்டிப்பதாயிருந்தால் அது அநியாய மென்றே சொல்லுவேன். அவன் ஒரு பிச்சைக்காரன். யாரோ கொலைநடத்திவிட்டு ஓடியிருக்கும் சமயம் இந்த அபாக்யன் தற்செயலாக அங்கே போயிருக்கவேண்டும். பிணத்தைக் கண்டு பதறி! தன்னையறியாமலே இவன் பிரேதத்தை தொட்டிருப்பான். அதனுல் அவன் உடலில் இரத்தக்கறை படிந்திருக்கலாம். இந்த சமயந்தான் போலீஸார் இவனை சந்தேகத்தில் கைது செய்திருக் கிருர்கள.

**நீதிபதி:—** சிக்கல் நிறைந்த உங்களிருவரின் விவாதத்திற்கு சாதகம் பாதகம்கூற இவ்வழக்கை ஜூரிகளிடம ஒப்பு விக்கிறேன்.

[ஜூரிகள் எழுந்து ஒரு அறைக்குள் போகின்றனர். கலை வாணன் ஜூரிகளைப் பார்த்து கண்ணீர்வடித்து கைகால் நடுங்கு கிறுன். சிலகணத்திற்குள அவர்களில் ஐந்துபேர் வந்து]

**ஜூரிகள்:-** இவன் குற்றவாளிதான்.

[கலைவாணன் வக்கீல் புத்தகத்தில் அறைந்த வண்ணம் அப்படியே உட்காருகிருர்]

**கலை:-** (உள்ளம் நடுங்க) கொலை குற்றவாளி...... காங்களே நீங்களா கொலை செய்தீர்கள்! கண்களே நான் கொலை செய்ததை நீங்கள பார்த்தீர்களா?

**நீதிபதி:-** அவனை அமைதிபடுத்துங்கள்.

**கலை:-** வேண்டாம். என்னை அமைதிபடுத்த வேண்டாம். நான் நிரபராதி. குற்றமற்றவனே நான் கண்களே நீதி யிழந்த இந்தச் சபையை பார்க்காதிர்கள்! உலகம் குருடானதைப்போல் நீங்களும் குருடாகி விடுங்கள். இதோ!

[கிழிந்துத்தொங்கும் தன் சட்டைப் பையில் குத்தி வைத்திருந்த இரு குண்டூசியால் தன் கண்களைக் குத்திக் கொள்கிறான். கலைவாணன் கண்களிலிருந்து நீரும், சளியும், இரத்தமும் பீரிட்டுப்பாய—கூண்டில் தடாலென்று விழுகிறான். இதைக்கண்ட நீதிசபையோர், ஹா........., என்று ஆச்சரியப் பட்டு எழுந்து நிற்கின்றனர்]

நீதிபதி:- தாமதியாது ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுங்கள்.

[கலைவாணன் கூண்டினின்றும் அப்புறப் படுத்தப்போகும் சமயம்—ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக் டர்—சில போலீஸார் — பார்வதி — குமாரமங்கலம் --கல்யாணி உள்பட— மாறுவேடத்திலிருக்கும் சோமநாதன். ஜெயராமன்— அவன் நண்பன் ஆக மூவர் கைகளிலும் விலங்கிடப்பட்டு கோர்ட்முன் கொண்டுவரப் படுகின்றனர்]

சர்க்கிள்:- (நீதிபதியிடம்) கனம் நீதிபதி அவர்களே! இங்கே நடக்கும் இந்தக் கொலை வழக்குக்கு சம்பந்தப்பட்டவர்கள் இந்த மூவர்தான், என்பதற்கு ருஜு கிடைத்திருக்கிறது. இவர்கள் தமிழ்நாடு நாட்டிய மண்டலித்தலைவரைக் கொலை செய்துவிட்டு, தியாகராயநகர் கலாபவனத்திற்குப் போயிருக்கிறார்கள் — அப்போது கலாபவனத்திலிருந்த இவர்களுக்கு — எதிரியான இவன் கையில் கொல்லப் பட்டவரின் பணப்பேக் இருந்தது தெரிந்ததாம். சந்தே கப்பட்ட இவர்கள் எனக்கு "போன்" செய்யவே! நான் ஸ்தலத்திற்குச்சென்று இவர்களை கைது செய்தேன். பிறகு விசாரித்ததில் மண்டலித்தலைவர் ரூபாய் 20,000த்தோடு மகாராஜாவுக்கு வருவதாகக் கொடுத்த "தந்தி" யொன்றை யும் இவர்களிடமிருப்பதைக் கண்டோம். மேலும் ஒரு புது பாஷாணக் கத்தியை இவர்கள் விலை கொடுத்து வாங்கி யிருப்பதற்கான ரசீதொன்றையும் இவர்களிடமிருந்து

கைபற்றியிருக்கிறோம். ஆகவே மண்டலித்தலைவரை கொன்றவர்கள் இவர்கள்தானென்று தகுந்த ருஜு புலனுகுகிறது.

வாதி வக்கீல்:- இருக்கமுடியாது.

சர்க்கிள்:- அகோடு நாட்டிய மண்டலித் தலைவர் இறந்துக் கிடந்த இடத்தில் கண்டெடுத்த ஒரு கைக்குட்டையில் சோமு என்ற பெயரும்—அதைப்போல் இவன் அணிந்திருக்கும் மோதிரம் ஒன்றிலும் அதே பெயர் செதுக்கப் பட்டிருப்பதுமான ஒரு உண்மையையுமறிந்தோம். இன்னும் மர்மமாக இருக்கும் கலைவாணன் என்ற வாலிபனின் பெற்றோர்களே இவர்கள்—இவர்கள் பெயர் குமாரமங்கலம் கல்யாணி என்பது பூங்குளம் பண்ணையார் இவர். இந்தப் பெண் கலைவாணனின் காதலி. பெயர் பார்வதி

[இந்த சமயம் சிலர் கைதாங்கலாக அழைத்துவரும் கண்ணற்றக் கலைவாணனுக்கு—தன் பெற்றோர்கள் இங்கே வந்திருக்கிறார்களென்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் குரல் மூலம் கேட்டதும் தன் இருகைகளையும் நீட்டி]

கலை:- யார்? என் பெற்றோர்களும் இங்கே வந்திருக்கிறார்களா?

[இதைக்கேட்டு குமாரமங்கலம் கல்யாணி பார்வதி மூவரும் கலைவாணனை வெறித்துப் பார்க்கின்றனர். கடைசியாக கலைவாணன் கையில் குத்தப்பட்டிருந்த பச்சைக்குத்து பெயர் மூலம்—தன் இளைய மகன்தான் இவனென்றறிந்து]

குமார:- யார்! கலைவாணு?

கலை:- ஆ......, அப்பா!!

குமார:- ஹா......, கலைவாணு

[எல்லோரும் அவனைத் தாவிப்பிடித்து அணைத்துக்கண்ணீர் விடுகின்றனர்]

கலை:- அப்பா! நான் மகாபாபி. யார்செய்த பாபமோ கண்களை இழந்து கபோதியாகி விட்டேன். அம்மா எனக்காக வருந்தாதீர்கள்.

பார்வதி:- (கலிவாணனைப் பிடித்து) அன்பரே!

கலை:- (ஆச்சரியத்தோடு) யார்?!

குமார:- உன் பார்வதி!

கலை:- (கோபத்தோடு) நயவஞ்சகி! மீண்டுமா என்னருகே!

குமார:- கோபிக்காதே கலைவாணா! அவள் உன் வாழ்க்கையின் குணக்கொழுந்து. யாரோசெய்த சூழ்ச்சி உன்னை இக்கதிக்குள்ளாக்கி விட்டது.

[இவற்றையெல்லாம் கூண்டில் நின்றவாரே, பார்த்துக் கொண்டு நிற்கும்—சோமநாதனுக்கு உள்ளம் நடுங்குகிறது. கண்களிலிருந்து நீர்வடிய சப்தமிட்டு]

சோம:- வேறு யாருமில்லை! கலைவாணனை இக்கதிக்குள்ளாக்கிய பாபி நான்தான். தம்பி கலைவாணா!

குமார:- யார்! சோமநாதனா?!

சோம:- ஆம்.

[சோமநாதன் தன் மாறுவேடங்களை நீக்குகிறான். எல்லோரும் அவனை ஆச்சரியத்தோடு பார்க்கின்றனர்]

கலை:- என் அண்ணன் சோமநாதனும் இங்கே இருக்கிறானா?

சோம:- ஆம். அந்த மகாபாபி இங்கேதான் இருக்கிறான்.

குமார:- சோமநாதா! நீயா மண்டலித்தலைவரைக் கொன்றாய்?

சோம:- ஆம்.

பார்வதி:- சண்டாளனே! உனக்கு மனித உயிர் கிள்ளுக்கீரையாகிவிட்டதா? பாபி.

கலை-வக்:- ஒருக்கிளையிலேயே இரு ரகப்பூ. ஒன்று முல்லைப்பூ. மற்றொன்று கள்ளிப்பூ.

பார்வதி:- உண்மை எங்கள் வாழ்க்கைத்தோட்டத்தின் கள்ளிச் செடியே அவன்.

கலை-வக்:- அதில் வாழும் நாகமென்றுகூடச் சொல்லலாம் அவனை.

சோம:- பார்வதி என்னை மன்னித்துவிடு. உங்களிருவரையும் உன் கையெழுத்துமூலம் பிரித்த மகாபாபியே நான்.

பார்வதி:- எல்லாம் எங்களுக்குத் தெரியும்.

கலை:- ஏன் அண்ணா! இவ்வளவு பயங்கரமாக நடந்துக் கொண்டீர்கள்!?

சோம:- தம்பி! புனிதமான உன் குருட்டுக்கண்களாலேயுங்கூட என்னைப் பார்க்காதே! முதலில் உன் பரிசுத்தமான மனதால் என்னை மன்னித்துவிடு. பெற்றோர்களே நீங்களும் என்னை மன்னித்துவிடுங்கள். உலகத்தில் பயங்கரமாகத் திரிந்த இந்த பாபியை உங்கள் கண்களால் பார்க்காதீர்கள். கடைசியாக உங்கள் முன்நின்று ஆண்டவனிடம் விடைபெறுகிறேன்.

நீதிபதி:- கொலைக் குற்றத்தை சோமநாதன் உள்பட மற்ற இரு எதிரிகளும் ஒப்புக்கொண்டதால், அவர்களுக்கு மரணத் தண்டனை விதிக்கிறேன். கலைவாணன் நிரபராதி. அவனை கண் ஆஷ்பத்திரிக்கு அழைத்துச் செல்லுங்கள்.

[எல்லோரும் கலைவாணனை அழைத்துப் போகிறார்கள்]

## காட்சி 2.

[இடம்: கண் ஆஷ்பத்திரி. படுக்கையில் கலைவாணன் மூடப்பட்டுக் கிடக்கிறான். நர்ஸ்கள் உள்பட—டாக்டர் முதலியோர் வந்து கலைவாணன் கண்களை பலவித உபாயங்களால் குணப்படுத்துகின்றனர். கண்களின் பிரதான ஒளிநரம்பு சிகிச்சை மூலம் சுகமாகி விட்டதால்—மீண்டும் கலைவாணன் கண்கள், உலகத்தைப் பார்த்து ஆனந்திக்கும்படி டாக்டர் செய்துவிடுகிறார். முடிவில் கலைவாணனை டாக்டர் எழுப்பி]

டாக்டர்:- இப்போது இந்த உருவத்தைப் பாருங்கள்.

[கலைவாணன் பார்க்கிறான்]

டாக்டர்:- ஏதாவது ஒரு பாகம் மந்தமாக தெரிகிறதா?

கலை:- இல்லை.

டாக்டர்:- என்னைப் பாருங்கள்.

[கலைவாணன் டாக்டரை கூர்ந்து பார்க்கிறான். டாக்டர் அவனைப் பார்த்து சிரித்து, தன் இடது கையில் கட்டப் பட்டிருந்த கடியாரத்தைக் காட்டி]

டாக்டர்:- இதைப் பார்த்து மணி எத்தனை என்றுச் சொல்லுங்கள்.

[கலைவாணன் கடியாரத்தை கூர்ந்து பார்த்துவிட்டு அதற்கு மேல் — மணவாளன் — என்று பச்சைக் குத்தப்பட்டிருந்த பெயரையும் பார்த்து திகைக்கிறான். இதை டாக்டர் கண்டு]

டாக்டர்:- ஏன் திகைக்கிறீர்கள்! ஏதாவது......?

கலை:- ஆம்......, உங்கள் பெயர்?!

டாக்டர்:- மணவாளன்!

[இதைக்கேட்ட கலைவாணன் தன் கையில் குத்தப்பட் டிருக்கும் கலைவாணன், என்ற பெயரையும் பார்க்கிறான். டாக்டர் அதைப்பார்த்து ஆச்சரியத்தோடு]

டாக்டர்:- தாங்கள்..........!

[இருவரும் தங்களுக்குள் ஒரு கணம் மாறி மாறி பார்த்த பின், கலைவாணன் வேகமாக எழுந்து]

கலை:- மணவாளா.........!

[கலைவாணன் டாக்டரை அணைத்துக்கொள்கிறான்.]

டாக்டர்:- கலைவாணா......!!

[டாக்டர் கலைவாணனை மார்போடு அணைத்து தழுவுகிறார். இந்த சமயம் ஒரு நண்பரோடு குமாரமங்கலமும், கல்யாணியும், பார்வதியும் அங்கே வந்து இவற்றைக் கண்டுவிடுகின்றனர்.

மணவாளன் பார்வதியைக் கண்டதும், ஆர்வமும் அன்பும் நிறைந்த தோற்றத்தில் அவளை அணைத்து]

டாக்டர்;- பார்வதி!

பார்வதி:- அண்ணா!!

[குமாரமங்கலமும், கல்யாணியும் தன்மகனை அணைத்து]

குமா:- கலைவாணா!

கல்:- என் கண்ணே!!

[மகிழ்கின்றனர்]

கலை:- அப்பா! முதலில் கண்ணைக்கொடுத்த கடவுளுக்கு வணக்கம் செலுத்துவோம் வாருங்கள்.

[மணவாளனை எல்லோரும் வணங்குகிறார்கள். மணவாளனும் எல்லோரையும் வணங்கி]

மணவா:- வாழ்க்கையில் வெறுப்புற்று நான் வெளியேறியதும் உலகபாசம் என்னை கண் மூடியாக அலையவிடவில்லை. பல நண்பர்களின் உதவியால் பூனசென்று கண் டாக்டராக மாறினேன். என் திறமையைக்கண்டு, சென்னை சர்க்கார் மதராஸ் கண் ஆஷ்பத்திரியில் பிரதம டாக்டராக நியமித்துக்கொண்டார்கள். பயங்கர வாழ்க்கைப் புயலுக்கு மத்தியில் நம்மனைவரையும் ஒருங்கே கூட்டுவித்து மகிழச்செய்த சென்னை சர்க்காருக்கு நமது இருதயம் கனிந்த வணக்கத்தை செலுத்திக்கொள்வோம்.

கலைவா:- ஆம். ஜனசமுதாயத்தின் கண்கண்ட தேவாலயம் பார்லிமெண்டல்லவா?!

## காட்சி-3

[இடம்:- மதருஸ். ஒரு பிரபல வீட்டில் கலைவாணனுக்கும், பார்வதிக்கும் திருமணம் நடக்

கிறது. சென்னை சட்டசபை மந்திரிகளும், பிரபல டாக்டர்களும், அறிஞர்களும், காங்கிரஸ் தியாகிகளும், சர்வகலாசலை ஆசிரியர்களும், பிரபல பத்திரிகாசிரியர்களும், நடிகர் நடிகைகளும் குழுமியிருக்கிறார்கள். கலைவாணனும் பார்வதியும் மணக்கோலத்தோடு நின்று கூடியிருப்பவர்களை வணங்குகின்றனர். கூடியிருக்கும் எல்லோரும் இவர்கள் மேல் மலரிதழ்களை அள்ளி தூவி தங்கள் ஆசீர்வாதத்தை தெரிவித்துக்கொள்கின்றனர். கடைசியாக கலைவாணன் கூட்டத்தைநோக்கி:]

கலைவா:— *அரசாங்கத் தலைவர்களே! பொதுமக்களே! நம்நகர் கண் டாக்டர் மணவாளனின் அருமை தங்கை பார்வதிக்கும் எனக்கும் ஏற்பட்ட காதல் விசித்திரமானது. தமிழ்நாட்டின் ஒரு பிரபல பண்ணையார் மகனை நான், என் தந்தையின் லட்சியத்திற்கு நேர்விரோதமாக நடந்துவந்த காரணத்தால் எங்கள் வாழ்க்கையே பெரும் புயலாக மாறிவிட்டது. உலகில் கண்கண்ட தெய்வம் மனிதனையன்றி வேறல்ல, என்ற எண்ணத்தால் இதோ இருக்கும் டாக்டர் மணவாளனை நான் அடிக்கடி கும்பிட்டுவந்தது ஒரு குற்றம். அனாதையாக வாழ்ந்து கெட்டழிந்துப்போகப்பார்த்த இப்பார்வதியை நான் காதலித்தது இரண்டாவது குற்றம். மனிதன் வாழ்க்கையில்தான் வேறுபட்டவனாகத் தோன்றுகிறானேயன்றி பிறவியில், வளர்ச்சியில், உணர்ச்சியில் வேறுபட்டவனாக தோன்றமுடியாது; ஆகவே வாழ்க்கை தரத்தை பிரித்துக்காட்டும் பயங்கர பண ஆதிக்கத்தை சமதைசெய்து வாழுங்கள், என்று அடிக்கடி என் தந்தையிடம் கூறிவந்தது மூன்றாவது குற்றம்—கூடியிருக்கும் பெரியோர்களே நீங்கள் கூறுங்கள்! இதெல்லாம் தர்மநியதிக்கு அப்பாற்பட்ட குற்றமாகுமா? இக்குற்றத்திற்காகத்தான் ஜனசமுகம் என்னைக் கொலைக்காரனாக கருதி—*

கோர்ட்டுக்கு கொண்டுவந்து என் கண்களையும் குருடாக்கியது! பெரியோர்களே மன சாட்சியாக கூறுங்கள், குருடாக்கப்பட்ட கண்களைக் கொடுத்தவன் கண்கண்ட கடவுளா இல்லையா?!

கூட்டத்தார்:- ஆம், ஆம். மனிதன் கடவுள்சக்தி படைத்தவன்தான்.

குமாரமங்கலம்:- (கண்ணீர்விட்டு எழுந்து) பெரியோர்களே மன்னிக்க வேண்டுகிறேன். எவனொருவன் கருத்திலும், கல்விலும், ஞானத்திலும் மேம்பட்டு வாழ்கிறானோ அவனே கடவுள்என்ற தத்துவத்தை உலகிற்கு தகுந்த சான்றோடு எடுத்துக்காட்டிய உங்கள் கலைவாணனுக்கு நான் ரொம்பவும் கடமைபட்டிருக்கிறேன். நான் மாத்திரமென்ன! நீங்களும் கூடத்தான். அவன் விருப்பப்படி என் பண்ணைக் கிராமத்திற்குட்பட்ட என் நிலங்களையெல்லாம்—ஏழை விவசாயிகளுக்குப் பங்கிட்டு உலகம் விரும்பும் **சமதர்ம** வாழ்க்கையை இன்றே மேற்கொள்கிறேன். முதலில் நமது காங்கிரஸ் சர்க்கார் ஜமீன்ஒழிப்புக்கு சட்டம் வகுத்ததை எண்ணி பெருமையடைகிறேன். இன்று முதல் நான் ஏழைப்பங்காளன் என்பதை ஞாபகப்படுத்துவதற்காக சர்க்கார், எனக்குத்தரும் நஷ்டஈடு தொகையை தமிழ்நாடு விவசாயமக்களின் சேமாபிவிருத்திநிதிக்காக கொடுத்துவிடவும் முடிவுசெய்துவிட்டேன்.

மணவாளன்:- (எழுந்து) கலைவாணா! இவ்வளவு சீக்கிரத்தில் மக்கள் மனதில் ஒரு சீர்திருத்தக் கருத்தையூட்டிய நீயே மகா ஞானி. நீயே அறிஞன். அன்று சாக்ரதர்! இன்று கலைவாணன்.

[ எல்லோரும் கைதட்டி தங்கள் சந்தோஷத்தை தெரிவிக்கின்றனர். கூட்டம் கலைகிறது. ]

## காட்சி-4

[ இடம்: கல்யாணம் நடந்த வீடு. மணவாளன் தன் மனைவி குழந்தையோடு கொஞ்சிக்கொண்டிருக்க—அதே வீட்டில் கலைவாணனும் பார்வதியும், மணவாளன் குழந்தையை தூக்கி பெருமைகொள்ள பார்வதியும், மணவாளன் மனைவியும் மனங் கனிந்து பேசிக்கொண்டிருக்க—பங்களா முன் ஒரு பிச்சைக்காரன் நடைமெலிந்து வந்து நின்று. ]

பிச்சைக்காரன்:— ஐயா! வயதானக்கிழவன் ஒருபிடி அன்னம் போடுங்கள்.

[ இந்தசமயம் குழந்தையை தூக்கிக்கொண்டு கலைவாணன் வெளியேவருகிறான். பார்வதியும் அவன் பின்னால்வந்து குழந்தையை தன்கையில்வாங்கி பிச்சைக்காரனை சுட்டிக்காட்டி. ]

பார்வதி:— பாருடாகண்ணு! உங்க தாத்தாவும் இந்த மாதிரி தான் இருப்பார்.

[குழந்தை பிச்சைக்காரனை முறைத்துப்பார்க்கிறது அதை பார்த்து பார்வதி, குழந்தையின் கன்னத்தைக் கிள்ளி]

பார்வதி:— பாவம்! கொலைக்காரன் பேரன்னு பாக்கிறியா?

[இதைக்கேட்டு பிச்சைக்காரன் இவர்களை முறைத்துப் பார்த்து பெருமூச்சுவிட்டவண்ணம்]

பிச்சைக்காரன்:— நீங்கள்........ யார்...?

[கலைவாணனும் பார்வதியும் பிச்சைக்காரனை மாறி மாறி பார்க்கின்றனர். பிச்சைக்காரனும் இவர்களைப் பார்க்கிறான்.

இதற்குள் மணவாளனும் அங்கேவந்து பிச்சைக்காரனை கூர்ந்து கவனிக்கிறான். இவ்விதம் எல்லோரும் மாறிமாறி பார்த்தபின்.]

பார்வதி: மணவாளன்:- ஹா அப்பா!

[பிச்சைக்காரன்மேல் விழுந்து அவனை அணைத்துக்கொள்கின்றனர். பிச்சைக்காரனும் இவர்களை அணைத்து ]

பிச்சைக்:- யார்! என் கண்மணிகளா நீங்கள்?
(மணவாளன் தன் தந்தையை வீட்டிற்குள் கூட்டிவருகிறான்)

பார்வதி:- அப்பா! உங்களுக்கு ஜென்மதண்டனையல்லவா விதித்திருந்தார்கள்.?

ஆனந்தம்பிள்ளை:- ஆம். சிறையில் நாணயமாக நடந்ததினால் பன்னிரண்டாவது வருடத்தில்விடுதலைசெய்துவிட்டார்கள்.

பார்வதி:- (கைகூப்பி) ஆஹா!

ஆனந்தம்:- பார்வதி உனக்கும் கலியாணனுக்கும் ஆனந்தம் கிட்டட்டுமாக. மணவாளா உங்கள் குடும்பவாழ்க்கையைக் கண்டு ஆனந்தமடைகிறேன்.

குமாரமங்கலம்:- ஆனந்தம்பிள்ளை, நீர் செய்த முதல் தியாகம், இன்று நாமெல்லோரையும் ஒரே குடும்பமாக வாழும்படி செய்துவிட்டது.

ஆனந்தம்:- தியாகி நானல்ல! பட்டப்பகலில் வெட்டுப்பட்டு இறந்த பூலுத்தேவனே மகாதியாகி. மணவாளா வாருங்கள் பூலுத்தேவன் ஆத்மசாந்திக்காக அவன் இறந்த இடத்தில் தொழுதுவிட்டு வருவோம்.

## காட்சி-5

[இடம்: பழய பூங்குளம். வயல் வெளியில் நாடகமண்டலி சேவகிகள் உள்பட எல்லோரும் கூடி நின்று பூலுத்தேவன் இறந்த இடத்தில் ஒரு கல்நட்டு—அவன் ஆத்மசாந்திக்காக அக் கல்மீது மலரிதழ்கள் தூவி வணங்கி சுற்றிவருகின்றனர்.]

O-,2NKD6,A
N50

தமிழ் வெல்க
தமிழ்த் தொண்டர்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103416
MADRAS

கணேசன் அச்சகம், திருநெல்வேலிச் சந்திப்பு. 6–'50.

தமிழ்நாடே
உன்புகழ் உலகெல்லாம் பரவட்டும்

# என் நன்றி

"அறிஞன்" புத்தகம் வெளிவதற்கான உழைப்பில் எனக்கு பூரண மகிழ்ச்சியைதந்த, கே. எஸ். சுப்பிரமணியம் அவர்களுக்கும், திருச்சி, திரைஉலகம் ஆசிரியர் டி. கே. கோவிந்தனுக்கும், நெல்லை எஸ். சுப்பிரமணியபிள்ளை அவர்களுக்கும், அட்டைப்படம் வரைந்துதந்த ஸ்ரீ தெய்வசிகாமணி ஓவியருக்கும், அவர்கள் ஓவிய மாணவர்கம்பனுக்கும் பிளாக்செய்துதந்த நெல்லை பத்மா பிராஸஸ் உரிமையாளர்கட்கும், அவ்வப்போது அச்சுக்கலையை அழகுபடுத்திதந்த ஸ்ரீ கணேசன் அச்சக போர்மன் உள்பட உழைப்பாளர்கட்கும், எம். அனந்தராம் அவர்களுக்கும், விளம்பரம் கொடுத்து ஆதரித்த நகர பிரமுகர்கட்கும் — என் நன்றி வணக்கம் உரித்தாகட்டும்.



# நெல்லைக் கலைமன்றம்.

## திட்டங்கள்.

கதை, கட்டுரை, நாடகம், கவிதை இன்னபிறன்ன ஆராய்ச்சி முதலிய நூல்களை நெல்லைக் கலைமன்றம் நாலு மாதத்திற்கு ஒரு தடவை அச்சில் புத்தகமாக வெளியிடும். இவற்றை நன்கொடையாளர்களுக்கு கலைமன்றம் இனாமாகக் கொடுக்கும்.

கிராமிய இசை, நடனம், கோலாட்டம், வில்-கருவிகீதம் தோல்வாத்தியம், நரம்பு இசை, குழல்கீதம்—மற்றும் ஓவியம்—சிற்பம்—நூல்பின்னல்—ஆகிய வர்ணக்கலைகளையும்—அறிவுக்கலைகளையும் புத்துயிரளிக்க இம்மன்றம் பயிற்சியளிக்கும். இதுதான் கலைமன்றத்தின் முக்ய குறிக்கோள். இதற்கு நகரபிரமுகர்கள் உதவவேண்டுமாக வேண்டுகிறோம்.

அன்பாளர்
**எஸ். சுப்பிரமண்யபிள்ளை,**
**(காசுக்கடை)**

நெல்லைக் கலைமன்றம்
**கலைதாசன்,**
**(அமைப்பாளன்)**

சிறந்த போட்டோவுக்குத் தகுந்த இடம்



# ஸ்லைட் ஹவுஸ் ஸ்டுடியோ

திருநெல்வேலி ஜங்ஷன்

Regd. No. 1241

விஜயம்செய்து ஆனந்தியுங்கள்

உரிமையாளர்

M. P. MAHAMAD

உங்களுக்கு வேண்டிய
ஷாப் சாமான்கள்!

ஓவல், ஹார்லிக்ஸ்!!

இன்கிலீஸ் பிஸ்கட்ஸ்!!!

முதலியவைகளும்
ஜம் ஜம் ஸ்வீட் பீடாவும்
எப்பொழுதும்
விற்பனைக்குத் தயாராக
இருக்கிறது.

விலாசம்

**R. T. S. சண்முகம் பிள்ளை,**
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

நெல்லை மக்களுக்கு
பழமையான இடம்

**சண்முகம் பிள்ளை**
**தென்காசி பிள்ளை**
**மளிகை**

நவதானிய சாமான்கள்,
துப்பரவாகவும், நாணய
மாகவும்
உங்களுக்குத்தர சித்தமாக
இருக்கிறோம்.

உரிமையாளர்:
**மு. சு. ஷ. மா. சண்முகம்பிள்ளை**
மேல ரதவீதி,
திருநெல்வேலி டவுண்.

**நெல்லை ஜங்ஷனில்**
**தங்குமிடம்**

- நவீன அறை வசதிகள்!
- மின்சார விசிறிகள்!!
- குளிக்கும் அறைகள்!!!

பிராமணாள் காபி & சாப்பாடு
இத்தனையும்
அமைந்துள்ள இடம்

**கோமள லாட்ஜ்,**
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

உரிமையாளர்:
எஸ். கே. சேதுராமலிங்கம்
பிள்ளை

**ரப்பர் ஸ்டாம்புகள்**
**பிளாக்குகள்**
**சினிமா சிலேடுகள்**

தயாரிப்பவர்கள்:

**நாயுடு ஒர்க்ஸ்**
22/10 பெருமாள் கீழரதவீதி,
பாப்புலர் டாக்கீசுக்கு சமீபம்
திருநெல்வேலி டவுண்.

பூரண நம்பிக்கைக்கும், மகிழ்ச்சிக்கும் பாத்திரமான
பவுன், கல்நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள், பட்டக்
கோலுசுகள் நேர்த்தியான வேலைபாடுகளோடும்
உத்திரவாதத்தோடும் கிடைக்குமிடம்

**மா. நெல்லையப்ப பிள்ளை என்ற முத்துசிவன் பிள்ளை**

**தங்கம் கல்நகை வியாபாரம்,**

நிர். 4, கூழக்கடை பஜார், திருநெல்வேலி டவுண்.




பெண்களுக்கேற்ற
கண்கவரும், வளையல்கள்
நெக்லிஸ் மாலை
எம்போர்சிஸ் செய்து

குறிப்பிட்ட நேரத்தில்
திறமைமிக்க
வேலைக்காரர்களைக்
கொண்டு அழகிய புது
வகைகளில் செய்து
கொடுக்கப்படும்.

உங்கள் வாடிக்கையை
மிகவும் விரும்புகிறோம்.
உண்மைக்குப் பாத்திர
மானகீழ்கண்ட விலாசத்
தில் உங்கள் ஆர்டர்களை
கொடுத்துவாருங்கள்.

**Pro:- V. கிட்டப்பா ஆச்சாரி,**

நிர். 50, கூழக்கடை பஜார், திருநெல்வேலி டவுண்.

- உங்கள் உருவத்தைப் பார்க்க ஒரு சந்தர்ப்பம்
- போட்டோ கலையில் புகழை எட்டியது.
- குறித்த நேரத்தில் சிறந்த முறையில் உங்கள் படத்தை எடுத்து தருகிறோம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

உரிமையாளர்: **S. கணபதி**

ராயல் போட்டோ ஸ்டுடியோ,

ஹைரோடு, ↔ திருநெல்வேலி ஜங்ஷன்.

THE THIRUNELVELY SOAP INSTITUTE.

தி திருநெல்வேலி சோப் இன்ஸ்டிடியூட்

டிரேட் மார்க்கு

திருநெல்வேலி

West Car Street, Thirunelvely

அழகும், கவர்ச்சியும், ததும்பும் அணங்குகளின்
ஆபரணங்கள் புத்தம் புதிய டிசைன்களில் குறிப்பிட்ட
நேரத்தில் உங்கள் ஆர்டர்களை கவனித்து
திருப்திபடுத்துகிறோம்.

௨ உங்கள் விஜயத்தை எதிர்பார்க்கிறோம். ௧

விபரங்கட்கு :

நெ. சுப்பையாக் கோனார்,
நகை வியாபாரம்,
பாவுகாரஜசிங் தெரு, திருநெல்வேலி டவுண்.

உங்கள் விருந்தினர்களும் வீட்டிலுள்ளோர்களும் விரும்பத்தக்க

காமதேனு

அப்பளம் & அப்பளப் பூ

திறமையான தொழிலாளர்களைக்கொண்டு சுத்தமாக தயாரிப்பது

கிடைக்குமிடம் : E. K. M. E.
காமதேன் அப்பளம் டிப்போ,
விட்டவாசல், மதுரை.

ஏஜண்ட் : அய்யாபிள்ளை, திருநேல்வேலி டவுண்.

## ஸ்ரீ முருக  விலாஸ்

### மிட்டாய்க் கடை

எங்கள் கடையில் தயாராகும் காரம் ருசி, மணம்,
ரம்மியம் முதலிய அருங்குணங்கள் நிறைந்த
மிட்டாய் தினுசுகளை வாங்கி உபயோகியுங்கள்.

**Pro: S. P. சுடலைமுத்துப் பிள்ளை,**
மேலரதவீதி, திருநெல்வேலி டவுண்.

★  ★


டிரேட் மார்க் ரிஜிஸ்டர் செய்ய
தகுந்த ஆலோசனையாளரும், அதிகாரம் பெற்ற
தென்பகுதி பிரதிநிதியும்

**டி. ஜி. சங்கர்,**
**திருநெல்வேலி டவுண்.**

புகழுக்குப் பாத்திரமான

# ★ ஸ்ரீ பூமி விலாஸ் ★

## காப்பித்தூள்

மணம், குணம், ரம்மியம் இவைகளுக்கு உண்மையான் சான்று பெற்றது. ஒவ்வொரு வீடு தோறும் காலை மாலை அருந்தவேண்டியது, எமது **ஸ்ரீ பூமி விலாஸ் காப்பித்தூளே.**

தலைமை ஆபீஸ்:
கூழக்கடை பஜார்,
திருநெல்வேலி டவுன்.

பிராஞ்சு:
சன்னதித்தெரு.
திருச்செந்தூர்.

Pro :- S. R

பெண்கள் கிரஹலக்ஷ்மியை அழகு படுத்த விரும்பும்
அநேகவித, பித்தளை – தாம்பூரம் வெண்கலம்
முதலிய பாத்திரங்கள் நாகரீகத்திற்கு
ஏற்றவாறு கிடைக்குமிடம் :

**சிவ. கந்தசுவாமி பிள்ளை சன்ஸ்,**
**பாத்திர வியாபாரம்,**
**கீழரத வீதி, ★ திருநெல்வேலி டவுன்.**

பிராஞ்சு: பெரியகடைவீதி, திருச்சிராப்பள்ளி.

எம்மிடம், பவுன் கல் நகைகள் – வெள்ளிப்
பாத்திரங்கள், புத்தம் புதிய டிசைன்களில்,
சுத்த வெள்ளியில் தயாரித்த
பட்டைக்கொலுசுகளும்
சகாய விலைக்குக் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**Pro:- S. A. சேக்அலி சாகிப்,**
**ரெடிமேட் நகை வியாபாரம்,**
**கூழக்கடை பஜார், திருநெல்வேலி டவுன்.**

Tel. Address: "FAITH"

FOR

*High Class Presentations*

IN

# JEWELLERY & SILVERWARE



திருநெல்வேலியில்
கியாரண்டியுள்ள
தங்க
நகைகள்
வெள்ளிப்
பாத்திரங்
களுக்கு



## பிரசித்திபெற்ற இடம்

சி.த. கோ. இசக்கியாடும்பெருமாள் பிள்ளை

ரெடிமேட் ஜுவலரி மார்ட்

43, கீழ ரத வீதி திருநெல்வேலி.

பவுன், தங்க, வெள்ளிகளுக்கு உத்திரவாதம்.

புது வைரங்களில் சிறந்த எங்கள்
எவரஸ்டு ரங்கூன் வைரங்களை
வாங்கி உபயோகியுங்கள்.

கோபால கிருஷ்ண
டைமிஷின் ஒர்க்ஸ்.
கூழக்கடை பஜார்,
திருநெல்வேலி டவுண்.

T. A. சுப்பிரமணிய ஆச்சாரி,
ரெடிமேட் தங்கம் & கல் நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
திருநெல்வேலி ஜங்ஷன்.

கல்யாண விசேஷங்களுக்கும்
ஹோட்டல்களுக்கும்
வீட்டுகளுக்கும்
குறிப்பிட்ட நேரத்தில்
மாவு & நெல்
அறைத்துக் கொடுக்கப்படும்.

ராஜா
ரைஸ் & பிளவர் மில்

சம்பந்தமூர்த்தி கோவில தெரு
திருநெல்வேலி டவுண்.

பிராஞ்சு:—
குறிச்சி, கார்குறிச்சி,
கல்லிடைக்குறிச்சி, வெள்ளங்குளி,
அரியநாயகிபுரம்.

முருக விலாஸ்
கல்யாண விசேஷங்களுக்கும்
மற்றும் பண்டிகைகளுக்கும்
புது ஜவுளிகள்
வந்திருக்கின்றன,
★
தேவையான பட்டு & நூல்
ஜவுளிகளுக்கு
★
திருநெல்வேலி டவுண்,
மேல ரத வீதி,
பட்டு ஜவுளி, வியாபாரம்,
M.K. ராமசாமி முதலியார்
& கோவுக்கு
விஜயம் செய்யுங்கள்
விலை சகாயம்

ஆரம்பம் 1913 தந்தி 'அணிகலன்'
திருநெல்வேலியில்
உத்திரவாதமுள்ளதும்,
நவநாகரீகமான
பவுன், நகைகள்,
வெள்ளிப் பாத்திரங்கள்,
வெகுமதிச் சாமான்களுக்கு
நீடித்த கால அநுபவமும்
புகழும்பெற்ற இடம்

★ மணி மாளிகை

மு சுப்பிரமணியன் செட்டியார்,
ஆயத்த அணிகல அங்காடி
வடக்கு ரத வீதி,
திருநெல்வேலி.

பாருலகு போற்றும் பர்மா கெமிக்கல் டைமண்ட்ஸ்,
உண்மைக்கு உத்திரவாதமுள்ள ஜாதி புஷ்பராகங்கள்,
கண்களைக் கவரும் கல் நகைகள்,



அணங்குகள் அணியும்

★ **தங்க நகைகள்** ★

உத்தரவாதத்துடன் கிடைக்குமிடம்

**வெ. சு. ராஜகோபால் செட்டி**
கூலக்கடை பஜார், :: திருநெல்வேலி டவுண்.

---

Calcutta Regd. No. 110015 T. L. 2 No. 1730
எங்கும் புகழ் பெற்ற குணம், மணம் நிறைந்த

**ஸ்ரீ V. S. பதி விலாஸ்**

எஸன்ஸ்

வாசனை & ஸ்பெஷல் நைஸ்

துண்டுப் புகையிலையை உபயோகியுங்கள்

பிராஞ்சு :
A. அமலன்,
55, அம்மன் சன்னதித் தெரு,
திருநெல்வேலி.

புரோப்ரைட்டர் :
K. காளியப்ப கவுண்டர்,
கோபிசெட்டிபாளையம்.

---

உண்மைக்கு உத்தரவாதமான

◎ ரத்னம் ◎ வைரம் ◎ பச்சை ◎

நவரத்னங்கள்

கிடைக்குமிடம் :

**கா. ஆனையப்பன் செட்டியார்,**
காசுக்கடை, ரத்தின வியாபாரம்.
கூழக்கடை பஜார்,
திருநெல்வேலி டவுண்.

# ஜெயராம் காப்பி ஸ்டோர்ஸ்

உற்சாகம் ஊட்டுவது



ஜெயராம் காப்பி பவுடரே

3. 7, 10, 30 பவுண்டு பைகளில் நயம் பார்ச்மெண்டு
காப்பிக்கொட்டை சில்லரையாகவும் மொத்தமாகவும்
சகாயமான விலைக்கு கிடைக்கும்

| ஹெட் ஆபீஸ் | ஜெயராம் காப்பி ஸ்டோர்ஸ் பிராஞ்சுகள் |
|---|---|
| கீழ ரதவீதி, | கல்லிடைகுறிச்சி, அம்பாசமுத்திரம் |
| திருநெல்வேலி டவுன். | திருநெல்வேலி ஜங்ஷன். |

நெல்லை நகர் மக்கள் உள்ளங்களித்து போற்றுகிறார்கள்

எமது போட்டோ ஸ்டுடியோவை

உயர்ந்த ரஸாயன கலையோடு உங்கள் போட்டோ படத்தை

எடுத்து தருகிறோம்.

வாருங்கள் உங்கள் வரவு நல்வரவாகட்டும்.

## மாரார் அன் சன்ஸ் போட்டோ ஸ்டுடியோ

வாகையடி முக்கு, திருநெல்வேலி டவுன்.

சிறந்த முறையில்
எல்லாவிதமான போட்டோகளும்
எடுப்பதற்கு தகுந்த இடம்

## செய்யத் போட்டோ ஸ்டுடியோ

திருநெல்வேலி ஜங்ஷன்

உத்தம ...

மா. நெல்லையப்ப பிள்ளை என்ற

முத்துசிவன் பிள்ளை

நிர். 4 கூழக்கடை பஜார்

திருநெல்வேலி டவுண்.



போட்டோ கலையில் புகழை எட்டியது

உங்கள் உருவத்தை அப்படியே தருகிறோம்.

— விஜயம் செய்யுங்கள் —

யல் போட்டோ ஸ்டுடியோ,

திருநெல்வேலி ஜங்ஷன்.

★

உரிமையாளர், S. கணபதி.



குறைந்த விலைக்கு ★

★ நயம் ஜவுளிகள்

தி மாடர்ன் ஸ்டோர்ஸ்

69, 71 வடக்கு ரதவீதி

திருநெல்வேலி டவுண்.

1-A
2-76

★ கண்ணைக்கவரும வைரங்கள்

நகைகளுக்கு சிறந்தவை, உயர்ந்த பூரிப்பு,
குறைந்த விலை ரெடிமேடு நகைகளும்
மற்றும் ஷராப் சாமான்களும்
கிடைக்கும்.



ஒரு முறை ஆர்டர் கொடுத்து
ஆதரிக்கவும்.







**V. S. ராமநாதன்,**

இம்பீரியல் வைரம் & ஷராப் வியாபாரம், திலி-ஜங்.